# LIGHT LITERATURE FOR TAMIL HOMES

## KUSIKA'S SHORT STORIES



*No. 5 (b)*

# குசிகர் குட்டிக் கதைகள்

மூன்றாம் பாகம்

12234

அ. மாதவையர்

The Authors' Press & Publishing-House
MYLAPORE-MADRAS

PRICE TEN ANNAS 1924 COPYRIGHT

# குசிகர் குட்டிக் கதைகள் 7144

மூன்றாம் பாகம்

சிவனார் சிரித்த திரிபுரம்போல் இக்நாள்
நவமாக எம்மை நலியும்—அவமெல்லாம்
நான் சிரிக்க வேஅழிய நாவினின்று நீ மொழிக
தேன் சிரிக்கும் வெண்மலர் மா தே.

இவை

பத்மாவதி சரித்திரம், விஜயமார்த்தாண்டம், முத்துமீனாக்ஷி, உதயலன், திருமலைசேதுபதி, சித்தார்த்தன், புத்தசரிதை, பாலராமாயணம், பாலவிநோதக் கதைகள், பொதுதர்ம சத்கீதமஞ்சரி, புதுமாதிரிக் கலியாணப் பாட்டு, ஆசாரச் சீர்திருத்தம், பாரிஸ்டர் பஞ்சநதம், தில்லைக் கோவிந்தன் முதலிய பல பிரபலமான நூல்களின் ஆசிரியரும், பஞ்சாமிர்தம் பத்திராதிபருமான

அ. மாதவையர்

இயற்றியன

சென்னை

ஆசிரியர் அச்சுப்பிரசுராலயம்—புஸ்தகசாலை

எட்வர்டு எலியட் ரோடு--மயிலாப்பூர்

1924

பத்தணா]

[காபிரைட்

மூன்றும் பாகத்தில் அடங்கிய

## கதைகளின் அட்டவணை


| கதையின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| 17. | நரி பரியான அற்புதம் | ... 161 |
| 18. | விவாக ஸம்ஸ்காரம் | ... 179 |
| 19. | குகைச் சாமியார் | ... 196 |
| 20. | ஆலமரத்தின் கீழே | ... 209 |
| 21. | புதியதோர் பிசாசு | ... 219 |
| 22. | விதி வசம் | ... 228 |

## 17. நரி பரியான அற்புதம்.




ன்று காலையில் அப்பா இறந்து போனார்; உடனே புறப்பட்டு வர வேண்டும்," என்ற அவசரத் தந்தி, மாலையில், கேசவையர் கச்சேரியி லிருந்து திரும்பி வந்ததும், அவருக்குக் கிடைத்தது. "ஐயோ! என் தங்கை பரம ஏழையே! சட்டையும் சவலையுமாய்க் குழந்தைகளே! இனி என்ன செய்வாள்" என்று பரிதபித்துப் புலம்பி யழுதார் கேசவையர். பல்லாரி ஜில்லாவில் கலெக்டர் ஆபீஸ் ஹெட் குமாஸ்தா அவர். அவர் கூடப் பிறந்தவள் அம்மாளு அம்மாள் ஒருத்தியே; அவள் புருஷர் கொச்சி சம்ஸ்தானம் திருச்சூரில் திவான் ஆபீஸில் குமாஸ்தா; சம்பளம் சொற்பமே; சந்தான சம்பத்தோ யதேஷ்டம். பத்து வயதுக் குட்பட்ட குழந்தைகள் ஆறுண்டு; மூத்தவனான ரமணன் தான் தந்தி கொடுத்தவன். தன் சகோதரி புருஷர் கொஞ்ச நாளாய் சௌக்கியத் தப்பா யிருந்தது கேசவையருக்குத் தெரியும். தனது கஷ்ட நஷ்டங்களைக் கவனியாமலும், சில சமயங்களில் கடன் பட்டுங் கூட, வைத்தியச் செலவுக்கும் குடும்ப சம்ரக்ஷணைக்கும், அவர் சில மாதங்களாகப் பணம் அனுப்பி வந்தார்; ஆனால், நோய் சீக்கிரம் சொஸ்தமாய் விடுமென்று நினைத்திருந்தார்; இவ்வாறு முடியு மென்று எண்ணவே யில்லை. ஆகவே திடீ ரென்று தந்தி வந்தவுடன், இடி விழுந்தாற் போல் திகைப் புற்றுப், பின்பு தன் சகோதரிக்கு நேர்ந்த கதியை நினைந்து பரிதபித்துப் பிரலாபிக்கலானார்.

கேசவையருக்கும் அவர் மனைவி சுந்தரிக்கும் அடிக்கடி யுண்டாகும் மனஸ்தாபங்களுக்கு, அவர் சகோதரி அம்மாளுவின் குடும்ப விஷயமே முக்கிய காரணம்; அவள் புருஷர் வியாதிப் பட்டு, மாதம் தவறாமல் மணியார்டர் அனுப்பும்படி ஏற்பட்டது முதல், தம்பதிகள் ஒரு

நாளேனும் சண்டையின்றி மனோ ரம்மியமாய் வாழ்ந்த தில்லை. தந்தி வந்ததும், முட்டுத் தட்டுக்குச் சில சமயங் களில் பணம் அனுப்புவது போய், மற்றொரு குடும்பப் பாரம் ஸ்திரமாகவே தந்தலைப் பொறுப்பாகி விடுமோ வென்ற பயம் சுந்தரி யம்மாளுக்கு அதிகப்பட்டது. ஆயினும், தன் புருஷர் படும் துயரத்தைக் கண்டு மனம் வருந்தி, அப்பொழுது வேறொன்றும் சொல்லாமல், அவ ரைத் தேற்றினாள்.

மறு நாள் காலையில், கேசவையர் கலெக்டரிடம் சென்று, வைதவ்யம் அடைந்து விட்ட தன் சகோதரியை யும் அவள் குழந்தைகளையும் அழைத்து வரப், பதி னைந்து நாள் ரஜா கேட்டார். கலெக்டர் தனது ஹெட் குமாஸ்தாவின் நாணயமான யோக்கியதையும் நற்குணங் களையும் நன்ருய் அறிந்தவர்; அவரிடத்தில் மிக்க மதிப் புள்ளவர். ஆயினும், ஹிந்துக்களுக்குள் வழங்கும் ஏக குடும்ப சம்பிரதாயம் கெட்டதென்பதும், அவ்வழக்கமே யோக்கியர்களான பல உத்தியோகஸ்தரைக் கெடுத்துக் கைக்கூலி வாங்கும்படிச் செய்து விடுகிறதென்பதும், அனு பவ பூர்விகமான அவர் கொள்கை. ஒருவன் தன் மனைவி மக்களுடன் மட்டுமே சுகமாக வாழ்வதற்கு வேண்டிய அளவு சர்க்காரில் சம்பளம் ஏற்படுத்தி யிருக்க, அக்கா ளென்றும், தங்கை யென்றும், அம்மா ளென்றும் பல வினைக் குடும்பங்களையும் அவன் காப்பாற்ற முயலும் பொழுது செலவுக்குக் காணுமலும், அவர்கள் துர்ப் போதனைகளினாலும், இவன் பேரை வைத்துக் கொண்டு அவர்கள் லஞ்சம் வாங்குவதினாலும், நாளடைவில் நாண யம் அழிந்து அவன் கெட்டுப் போவான் என்பது, அவர் அபிப்பிராயம். அதனால், ரஜா கொடுக்க முடியாதென்று, துரை ஒரே பிடிவாதமாய் மறுத்து விட்டார்.

சுபாவத்தில் கேசவையர் சாதுப் பிராமணர்; கா லின் கீழ்ச் செருப்பாய் மேலதிகாரிகள் விஷயத்தில் நடக் கப் பட்டவர். ஆயினும், இப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில்

ரஜா வில்லை என்ற வுடன், 'நாமென்ன அடிமையிலும் கேடா? இந்த உத்தியோகம் இருந்தென்ன போயென்ன?' என்ற மனவெறுப்பு அவருக்குமே உண்டாயிற்று.

"வீடு நிலங்கள் பொருளை விற்பார் இந்த மேதினியில்;
நீடும் எண்சாண் மெய்யை ஓர்சாண் உதிர நிமித்தம் விற்று,
நாடும் அரசர்க் கடிமை யென்றே முன்பு நாம் கொடுத்த
ஏடு கிழி பட்ட தன்றோ உத்யோகம் இழந்ததுவே"

என்னும் கவி அவர் ஞாபகத்துக்கு வந்தது. என்ன செய்வார்? சிநேகிதர்கள் வேலையை ராஜிநாமாக் கொடுக்கக் கூடாதென்று தடுத்தார்கள். அவர் மனைவியோ, சொல்ல வேண்டாமே? முடிவில், இதுவும் விதிவசமே என்று மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு, தான் புறப்பட்டு வர முடியாததைப் பற்றி விவரமாய்த் தன் சகோதரிக்குக் கடித மெழுதி, 100 ரூபாய் தந்தி மணியார்டரும் உடனே அனுப்பினர்.

கேசவையர் ஏழைக் குடும்பத்திற் பிறந்தவர். அவரது பதின் மூன்றாவது பிராயத்தில், திடீ ரென்று ஒரு நாள், அவர் தாயும் தந்தையும் பேதி உபத்திரவத்தினால் இறந்து போனார்கள். 'தாயும் பிள்ளையு மானாலும் வாயும் வயிறும் வேறு,' என்று கூறுமே பழமொழி. அவரையும் பதினொரு வயதான அவர் தங்கை அம்மாளுவையும், ஐந்து வயதுத் தம்பியையும், எவ்வளவு இரக்க மிருந்த போதினும், ஏழைப் பந்துக்கள் எத்தனை நாள் காப்பாற்றுவார்கள்? அவர் தகப்பனார் ஜீவனோபாயமாக வைத்திருந்த ஜோஸியமும் அவரோடு போயிற்று. ஆகவே, தன் சிறு தம்பியுடன், கேசவையர், தர்ம ராஜ்யமாகிய திருவாங்கூருக்குப் புறப்பட்டுப் போனார். அம்மாளுவுக்கு நல்ல வேளை கலியாணமா யிருந்தபடியால், அவள் புருஷர், தமக்கு ஆக்கி யிடும்படி, அவளை அழைத்துப் போய் விட்டார். சுபாவத்திலுள்ள நற்குணங்களினாலும் விடா முயற்சியினாலும் பேருழைப்பினாலும் மனோ தீரத்தினாலும், எப்படியோ கஷ்டப் பட்டு, தான் பி. ஏ. வரை படித்துத் தேறியது மன்றி, கேசவையர், உதவாக் கட்டை

யான தன் தம்பியையும் தன்னுலேன்ற மட்டும் படிப்பித்து வந்தார். அந்தோ! தனவான்கள் வீட்டுத் தலைவாசல் தோறும் காத்துக் கிடந்து பற் காட்டிக் கெஞ்சியும், அவர்கள் கால்விட்ட வேலையைத் தலைமேற் கொண்டு ஊழியஞ் செய்தும், அவர்கள் தயவைச் சம்பாதிக்கும் மானக் கேட்டால் வரும் மனக் கசப்பை அவர் அதிபால்வியத்திலேயே அனுபவித்தார். பார்த்தும் பாராதவர் போலும், கேட்டும் கேளாதவர் போலும் பாசாங்கு செய்து நடித்து, அவர்கள் சொல்வதற் கெல்லாம் ஒத்துப் பாடி, தன் மனவருத்தத்தை ஒரு சிறிதும் வெளிக் காட்டாமல் அவர்களோடு கூடிச் சிரிக்கும் ஜாலத்தையும் தெரிந்து கொண்டார். தன்னோ டொத்தவயதினர்களான அவர்களின் பிள்ளைகள், செல்வச் செருக்கால் தன்னை இகழ்ந்து பரிகசித்துத், தங்களிஷ்டப்படி ஆட்டுவிக்கும் கூத்துக்களுக் கெல்லாம் தாழ்மையாய் இணங்கி யாடும் சாமர்த்தியத்தையும், அக்குழந்தைப் பருவத்திலேயே தேடிக் கொண்டார். சிறு குடரைப் பெருங் குடர் தின்பது போல் வயிற்றிற் காந்தும் பசியின் கொடுமையும், தரித்திரத்தால் வரும் மனச் சோர்வும், களைப்பும், பல சங்கடங்களும் அவருக்கு நன்ருய்த் தெரியும். ஆனல், இவற்றை யெல்லாம் அவர் அவ்வளவு பாராட்ட வில்லை. கல்வி கற்று முன்னுக்கு வருவதற் கென்றே தான் இப்பாடு பட்டும், தனவான்களின் தயவைச் சம்பாதிக்கும் பிரவர்த்தியில், நன்கு படிப்பதற்கு வேண்டிய அவகாசம் தனக்கு இல்லாமற் போனதே அவர் மனத்தைப் புண்படுத்தியது. அக்காரணத்தினல், பிரவேசப் பரீக்ஷையில் இரு முறையும், எப். ஏ. பரீக்ஷையில் ஒரு தாமும் அவர் தவறிப் போனர். ஆயினும், எப். ஏ. தேறின பின்பு, தூர பந்து ஒருவர் முன் வந்து, தன் பெண்ணை அவருக்குக் கன்னிகா தானம் செய்துகொடுத்து, பி.ஏ. பரீக்ஷக்கு வாசிக்கவும் பொருள்

உதவினர்; அப்பொழுதும் கூட, தத்தாரியாய்த் திரியும் தன் தம்பியின் படிப்புக்கும் சம்ரக்ஷணைக்குமாக, இரண்டொரு பிள்ளைகளுக்கு வீட்டிற் படிப்புச் சொல்லிக் கொடுத்துத் தாமாகவே சிறிது பொருள் சம்பாதித்து வந்தார். பி. ஏ. பரீக்ஷை தேறிய பின்பு, தன் மாமனர் மேற் படிப்புக்குக் கையுதவும் சக்தியற்றவரென அறிந்து, கலெக்டர் கச்சேரியில் சொற்பச் சம்பளமுள்ள குமாஸ்தாவாக அமர்ந்தார். பேருழைப்பினலும் சிறிதும் நெறி தவருத யோக்கியதையினலும், அருமையான நல்ல சுபாவத்தினலும், முக்கியமாய்ப் பிறரைச் சந்தோஷப் படுத்தித் திருப்தி செய்யும் சாதுரியத்தினலும், அவர், தன் மேலதிகாரிகளின் நம்பிக்கையையும் நல்லபிப்பிராயத்தையும் எளிதில் சம்பாதித்து மேன் மேலும் பெரிய உத்தியோகங்களைச் சீக்கிரம் அடைந்தார். இன்னும் ஒரு சங்கதி அவரைப் பற்றி இங்கே சொல்லத் தக்கது. அவர் பிறந்து வளர்ந்ததோ பரம்பரையாக வைதீக சிரத்தை யுள்ள குடும்பம்; அவர் கல்வி கற்ற நாடோ, பிராமண விசுவாசமும் செல்வாக்கும் தழைத்து மேலிட்டதும், புராதனப் பழக்க வழக்கங்களும் நடையுடை பாவனைகளும் மூட பக்தியும் இக்காலத்து ஆங்கிலேயக் கல்விப் பயிற்சி நாகரிகங்களையும் கூட ஒருவாறு சிதைக்குமளவு மலிந்துள்ளதுமான திருவாங்கூர் இராச்சியம். ஆகவே, கேசவையர், கேவலம் கர்நாடக மனுஷர் என்றே சொல்ல வேண்டும். மத சம்பந்தமாயும், மற்றும் ஆசார அநுஷ்டான விஷயமாயும் நம் முன்னேர்கள் வழியை விட்டுத் தற்காலத்துக் கேற்றபடி பல சீர்திருத்தங்களைச் செய்ய முயல்வோரது முழக்கமும் கம்பலையும் அவர் காதில் விழுந்ததே யில்லை. இருபதாவது நூற்றுண்டாகிய இந்தக் காலத்தில், ஆங்கிலேய துரைத்தனத்தில், கலெக்டர் ஆபீஸ் ஹெட் குமாஸ்தா ஒருவர், வருண சிரம தர்மம் வழுவாது எவ்வளவு நடக்க முடியுமோ, அவ்வளவு அவரும் அநுஷ்டித்து வந்தார்;

வைதீகமாக நினைக்கப்படும் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் ஒப்புக் கொண்டு, தன் ஜாதியாருக்கு அவற்றினும் உத்தம மானவை வேறில்லை யென்று மதித் தொழுகி வந்தார்.

தான் சம்பாதிக்கத் தொடங்கின நாள் முதல், கேசவையர், தன் ஏழைச் சகோதரிக்கும் உதவி புரியலானார். அவரும் அவளும் தம் ஏழைத் தாய் தந்தையர் வீட்டில் குழந்தைகளாகச் சந்தோஷமாக வாழ்ந்து வந்த சில வருஷங்களை, அவர் ஒரு பொழுதும் மறக்க வில்லை. அதற்குப் பின் அவர் அடைந்த பல கஷ்ட நிஷ்டூரங்களால், அக் குழந்தைப் பருவத்தைப் பற்றிய அவர் ஞாபகங்க ளெல்லாம் அவருக்கு அதிக மனோகரமா யிருந்தன. அவர் மனைவி சுந்தரியோ, தன் நாத்தனாருக்குத் தன் கணவன் செய்யும் உதவிகளை ஒரு சிறிதும் ஒப்பாதவளாய், அடிக்கடி வாதாடி மல்லுக்கு நின்றாள்; தன் தகப்பனார் அவருக்குப் பொருளுதவி செய்து வந்த படியால், தன் கணவரை அவ்வாறு கண்டிப்பதற்குத் தனக்கு விசேஷ சுதந்தர முண்டென்று நினைத்துக் கொண்டாள். கேசவையரோ, மனைவி மேல் மிக்க வாஞ்சை யுள்ளவர்; அவள் சொல்வது நியாயந்தான் என்று அவர் மனத்திலும் சில சமயங்களிற் பட்டது; தனவான்கள் வீடுகளில் அடிமை போல் ஊழியஞ் செய்து வந்த தன்னை, அவ் விழிபதவியினின்றும் உயர்த்தி, பி. ஏ. பட்டமும் பெறும்படிக் கையுதவிய தன் மாமனாரிடத்தில், மிகவும் நன்றி யறிதலுள்ளவரா யிருந்தார். ஆயினு மென்ன? ஒரு காசேனும் தானாகச் சுயசம்பாத்தியம் செய்யும் வரை, தன் சொந்தத் தங்கையும் தம்பியும் தன்னால் நிவர்த்திக்கக் கூடிய கஷ்டங்களை அநுபவிப்பதைப் பார்க்க, அவர் எவ்விதம் சகிப்பார்? ஆகவே, தன் மனைவி சொல்வதையும் தன் குடும்பச் செலவுகளையும் மதியாமலும், சில வேளை கடன் பட்டும் கூட, தன் தங்கைக்கும் தம்பிக்கும் அவர் பொருளுதவி செய்து வந்தார்.

மாதந் தப்பினாலும் தன் நாத்தனாருக்கு மணியார்டர் தப்பாமல் செலவு ஸ்திரமாக ஏற்படவே, சுந்தரி கொஞ்ச நாள் வரை வீட்டை அதல குதலப் படுத்திப் பார்த்தாள்; ஆனால் ஒன்றும் பயன்பட வில்லை. பின்பு, அனுப்பப் படும் பணத்தைக் குறைக்க முயன்றாள். தன் சகோதரி குடும்பத்தைத் தன் வீட்டோடே வைத்துக்கொண்டால், அவ்வளவு செலவாகா தென்றும், அவ்வாறு செய்வதாயும் கேசவையர் சொன்னார்; ஆனால், சுந்தரி அதற் கிணங் கவே யில்லை. அவள் அபிப்பிராயமே சரி யென்றும், தன் எண்ணப்படி ஏக குடும்பமாய் வாழ்ந்தால், வீட்டில் ஓய்வொழி வின்றிக் கலகமே விளையு மென்றும், அவ்வித மனஸ்தாபங்க ளில்லாம லிருக்கக் கொஞ்சம் பொருட் செலவு அதிகமானாலும் பாதக மில்லை யென்றும், அவர் புத்தியிலும் பட்டது. தன் மனைவி மட்டுக்குமிஞ்சித் தன்னை உபத்திரவஞ் செய்த காலங்களில், தங்கள் மூத்த பெண்ணாகிய சீதையை, இந்நாளைப் பாழ் வழக்கம் போல வரதக்ஷணை எதுமே யின்றி, தன் மருமகன் ரமண னுக்குக் கன்னிகா தானம் செய்யலா மென்றும்; அதனால், தான் இப்பொழுது தங்கைக் குதவும் பொரு ளொன்றும் வியர்த்த மில்லை யென்றும், அவர் சமாதானம் சொல்வ துண்டு. ரமணன் நல்ல புத்திசாலி, கண்ணுக்கு லக்ஷண மான பையனென்றும், அவன் ஜாதகம் சிறந்த ராஜ யோக முள்ள தென்றும், அவர்க ளிருவருக்கும் தெரியும். தன் மனைவியைச் சமாதானப் படுத்துவதற் கன்றிக் கேச வையர் இதைப் பற்றி அதிகம் நினைக்க வில்லை; அவர் மனைவி சுந்தரியோ, சாஸ்தாப் பிரீதி செய்தவர் தேங்கா யாவது கிடைத்ததே யென்று சந்தோஷப் படுவது போல, இதை நம்பியே தன் கணவர் செய்கைகளுக்கு ஒருவாறு உடன் பட்டு வந்தாள். அடுத்த வருஷம் ரமணன் உப நயனச் செலவுக்காகக் கேசவையர் கடன் வாங்கி ரூ 50

அனுப்பிய பொழுது, இதை நினைத்தே பல முணு முணுப்புக்களுடன் அவள் ஒருவாறு சம்மதித்தாள்.

மேற்கூறிய உபநயம் நடந்து சில வருஷங்களாய் விட்டன. கேசவையர் அப்பொழுது சென்னப்பட்டணத்தில் உத்தியோகமா யிருந்தார். ஒரு நாள் சாயங் காலம் அவர் கச்சேரியி லிருந்து வந்தவுடன், தன் மனைவியைப் பார்த்து: "உன் மாப்பிள்ளைக்கு எப். ஏ. பரிக்ஷை முதலாவது வகுப்பில் தேறி யிருக்கிறது; இந்த ராஜதானிக்கே அவன் தான் இரண்டாவது" என்று சொன்னார்.

கலியாணம் ஆகாவிட்டாலும், அதை முடிந்த தாகவே பாவித்து, தன் மருமகன் ரமணனை மாப்பிள்ளையாகக் குறிப்பிட்டே அவர் பேசுவது வழக்கம்.

கேசவையர்:—இனி மேல் அவர்களை இங்கே கூட்டிக் கொண்டு வந்துவிட வேண்டியது தான்; பி. ஏ. பரீக்ஷைக்கு, அவன் பிரஸிடென்ஸி காலேஜில் தான் வாசிக்க வேண்டும்.

சுந்தரி:—எனக்கு அதைப் பற்றி நினைத்தாலே நடுங்குகிறது.

கேசவையர்,—ஏன், என் தங்கை யென்ன புலியா, கரடியா? நற்குணங்களில் அவள் தங்களுக்குத் தாழ்ந்தவளில்லை யென்று பவ்வியமாய்த் தெரியப் படுத்திக் கொள்கிறேன். தவிரவும், இந்த மாதிரி ஒதுக்கி விலக்கினால், நீங்கள் சம்பந்திகளாவ தெப்படி?

சுந்தரி:—சம்மந்திக ளாவதற்கு இது அவசியமேயில்லை. உங்கள் மருமான் வரட்டும்; நம்முடன் கூட விருந்து வாசிக்கட்டும்; நாத்தனார் மற்றக் குழந்தைகளுடன் அங்கேயே இருக்கட்டும். எல்லாம் தூரத்துப் பச்சை தான் கண்ணுக்குக் குளிர்ச்சி.

கேசவையர்:—அது நடக்குமா? உன் பிள்ளையை, நீ, அவன் வேட்டகத்தில் விட்டிருப்பாயா? எந்தத் தாய் தான் அதற்குச் சம்மதிப்பாள்?

சுந்தரி :—(பேச்சை மாற்ற விரும்பி) வருகிற சித்திரையிலே கல்யாணத்தை முடித்து விட்டாலென்ன?

கேசவையர் :—செய்யலாம்; மருமாள் சேஷிக்கும் அதே பந்தலில் தாலியைக் கட்டி விடலாம், பன்னிரண்டு நிறைந்து விட்டது அந்தக் குட்டிக்கு.

சுந்தரி :—வரதக்ஷிணை யார் கொடுக்கிறது? ஆயிரத்துக்குக் குறையாமல் வேண்டுமே.

கேசவையர் :—அந்த விசாரம் உனக்கு வேண்டாம்; என் தங்கை அதெல்லாம் ஏற்பாடு செய்து விட்டாள்; வரதக்ஷிணை யில்லாமல், துவிதீயமாகக் கொடுப்பதாக உத்தேசம்; வரனுக்கு வயசு நாற்பதுக் குள்ளே தான்; மூத்தாளுக்கு இரண்டு குழந்தைகளே; பள்ளிக்கூட உபாத்தியாயர்; மாதம் 30 ரூ. சம்பளம். குட்டி சேஷியின் லக்ஷணத்தையும் வயசு வளர்ச்சியையும் பார்த்த பின், தக்ஷிணை வேண்டுமென்று கேட்க வில்லையாம். அவ்வளவு வயசானவனுக்குக் கொடுக்கிறது கஷ்டந்தான். ஆனால் என்ன செய்கிறது? பெண்ணை ஆசையும் அருமையு மாகவாவது வைத்துக் கொண்டிருக்க மாட்டானா?

சுந்தரி :—என் செல்வக்குழந்தை சீமந்த புத்திரியை, இரண்டாந் தாரக்காரன் ஒருத்தன் கல்யாணத் தோடு ஒரேபந்தலில் கன்னிகாதானம் செய்து கொடுக்க நான் ஒருநாளும் சம்மதிக்கவே மாட்டேன். நன்றாய்த்தான் சொன்னீர்கள்!

கேசவையர் :—நீ அப்படிச் சொன்னால் எனக்கும் தான் அது இஷ்டமில்லை; நான் அந்த மாதிரி நினைத்துப் பார்க்கவில்லை. கூடக் கொஞ்சம் செலவானாலும் சரி, வேறாகவே செய்வோம்; என் தங்கைக்கு ஆக்ஷேபமிராது.

சுந்தரி :—அவளேன் ஆக்ஷேபிக்கப் போகிறாள்? முதவில் அவள் பெண் கலியாணம் ஆகட்டும்; பிற்பாடு, நம்ம சீதை கலியாணத்தை வைத்துக் கொள்வோம்.

அப்படியே ஏற்பாடாயிற்று. அம்மாளு, தன் ஆறு குழந்தைகளுடன் வந்து, தமயனுட னிருந்தாள். தன் குழந்தைகள் வேறு, அவள் குழந்தைகள் வேறு என்ற வித்தியாசம் பாராட்டாமல், கேசவையர், அவள் குடும்பத்தை மனப்பூர்வமாய் ஆதரித்து வந்தார். இப்பொழுது பதினெட்டு வயதாகி அழகான வாலிபனு யிருந்த தன் மருமான் ரமணன்மேல் அவருக்கு அதிகப் பிரியம்; அவன் தன் மாப்பிள்ளையாகப்போவதை நினைந்து, மனத்தில் கொண்ட கர்வமும் சந்தோஷமும் கொஞ்சமல்ல. சர்க்காரில் அளிக்கப்பட்ட நன்கொடை பெற்று, அவன், பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து, வெகு சிரத்தையுடன் ஒழுங்காய் வாசித்து வந்தான். சுந்தரியும், தன் கணவர் மனோபீஷ்டத்துக்கு இணங்கி, தன் நாத்தனுருடன் அதிகச் சண்டை சச்சரவின்றி வாழ்ந்து வந்தாள். கேசவையர் மருமாள் சேஷி, கல்யாணமாகிச் சில வாரங்களுக்குள் பக்குவவதி யானுள்; தன் முதல் தாரம் தவறிப் போனது முதல் இதுவரையும், பள்ளிக்கூடத்தில் வாத்தியார் வேலை, வீட்டில் சமையல் வேலை, சிறு குழந்தைகளைப் பேணிப் போஷிக்கும் வேலை, ஆக மூன்று உத்தியோகங்களையும் தானே பார்த்து வந்த அவள் புருஷர், உடனே அவளைத் தன் ஊருக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார்.

பின்பு, சீதையை ரமணனுக்கு மணஞ் செய்வதைப் பற்றிப் பேச்சுக் கிளம்பிற்று. தன் பெண்ணை ஒன்பது வயதுக்கு முன் மணம் புரிவித்து அதி சிலாக்கியமான கன்னிகாதான பலனைத் தான் பெறுவதற்கில்லாமல் போய் விட்டதே யென்று மனஸ்தாபங் கொண்டிருந்த கேசவையர், ஜோஸியர்களைக் கொண்டு மும்முரமாய் ஜாதகப் பொருத்தம் பார்க்கத் தொடங்கினர்.

வீட்டில் கலியாணப் பேச்சு இவ்வளவு நடக்கவும், அம்மாளு மட்டும் ஒன்றும் கவனியாமல், உபேட்சையாயிருப்பதுபோல் தோன்றியது; தன் மதுனி சுந்தரியுடன்

எப்பொழுதாவது பேசுகையில், தன் பிள்ளையின் அழகை யும், புத்தி விசாலத்தையும், வருஷா வருஷம் அவன் கெலித்த நன்கொடைப் பரிசுகளையும், அவன் வாத்தியார் களும் ஜாதகத்தைப் பார்த்த ஜோஸியர்களும் அதி உன்னதமான ராஜ யோகத்தை அவன் அடைவானென்று சொல்வதையும் பற்றியே பிரதாபங் கூறிப் பேசினுள். அச் சமயங்களில், இந்த நாளில் சாதாரணமான வரதக்ஷிணை யையும், யார் யார் எத்தனை ஆயிரம் கொடுத்தார்கள் என்பதையும், மாப்பிள்ளைச் சந்தையில் அகவிலையின் ஏற் றத் தாழ்ச்சிகளையும் பற்றிக் குறிப்பாயும் வியக்தமாயும் பேசத் தொடங்கினுள். இதைப் பற்றிச் சொப்பனத்தி லும் சந்தேகித்திராத கேசவையரோ, கலியாணத்துக்குத் தன் தங்கையின் சம்மதத்தைக் கேட்க வேண்டுமென்று கூட நினைக்கவில்லை. தன் மருமகன் ரமணனுக்கு ஸங்கீ தத்தில் பிரியமுண்டு என்றறிந்தவுடன், தன் மகளுக்கு பிட்டில் கற்றுக்கொடுக்கும்படி ஒரு வித்வானை நியமித்தார். வைதீக அநுஷ்டானமும் பழைய மாதிரிக் கொள்கைகளு முள்ள தான் அப்படிச் செய்தது, தன் மகள் மருமகன் அவர்களது அத்தியந்த சந்தோஷத்தையே கருதி, ஏதோ அபாண்டமான ஒரு நூதன ஏற்பாட்டைத் தான் துணிந்து செய்து விட்டதாகப் பெருமை யடித்துக்கொண்டார். ரமணன் படிப்புக்குச் சிறிதும் இடையூறுகாமல், பள்ளிக் கூட விடுமுறையில் ஒரு முகூர்த்தம் வைக்கப்பட்டது; ஆனால், அவன் கடைசித் தங்கை வைசூரிகண்டு சற்று முன் தவறிப் போய்விட்டதால், அப்பொழுது விவாகம் நடக்கவில்லை. கேசவையருக்கு இதனல் மனஸ்தாபமே; தன் நாத்தனர் பேச்சு நடவடிக்கைகளையும், தன் பெண் வயதாகிக் குதிரைபோல் வளர்ந்து விட்டதையும் கண்டு, சுந்தரிக்கு உள்ளூர நேர்ந்த மன விசாரம் கொஞ்சமில்லை. கொஞ்சநாள் துக்கம் காத்தபின், முதலில் சுந்தரியின் பிரஸவமும் பின்பு மருமாள் சேஷியின் பிரஸவமும் விவாகத்துக்குத் தடைகளாயின; சேஷியின் பிரஸவ காலத்தில், அம்மாளு, ஐந்து மாச காலம் தன் மாப்பிள்ளை

யின் வீட்டிற் போயிருந்தாள்; அதற்குள் கலியாண மாசங்கள் கழிந்து விட்டன. பின்பு ரமணன் பரீக்ஷைக் காலம் தடையாயிற்று. பரீக்ஷை முடிந்ததும், அதிகப் படிப்பினால், ரமணன் அசௌக்கிய மடைந்தான். பிழைப்பதே அரிதென்று சொல்லும்படி பாயும் படுக்கையுமாய்க் கிடந்தான். பணச் செலவைப் பாராமல் வாரியிறைத்து, மிகச் சிறந்த வைத்தியர்களைக் கொண்டு வைத்தியம் செய்வித்தார் கேசவையர்; தன் ஒரே மகனுக்கு நோய் வந்ததுபோல நினைத்து விசாரப் பட்டுப் பணச்செலவு செய்து பார்த்தார். உடம்பு சொஸ்தமாகி வரும்பொழுது, எல்லாராலும் மதிக்கப்பட்ட தங்கப் பதக்கங்கள் பரிசுகள் கெலித்து, ராஜதானியில் முதலாக, ரமணன் பரீக்ஷையில் தேறின ஸந்தோஷ சமாசாரம் வெளி வந்தது.

கேசவையர்:—இல்லை அம்மாளு, இனிமேல் தாமஸிக்கலாகாது. சீதைக்கு வயசு பன்னிரண்டாகி விட்டது; அவள் தாயார் விசாரப் படுவது கிரமந்தான். வைதீகம், வைதீகம் என்று வேஷமட்டும் போட்டுக்கொண்டு, இந்த நாளைப் புதுமாதிரிக்காரர்களைப் போல, குதிர்போல பெண்ணைக் கலியாணஞ் செய்து கொடாமல் வைத்துக்கொண்டிருக்கிறேனென்று, ஊரில் என்னைக் கேலி செய்கிறார்கள். யாரோ சில வம்பர்கள், 'சீதை ருதுவாய்விட்டாள்; மறைத்து வைத்திருக்கிறோம்' என்று விண்ணாணம் கட்டிவிடுகிறார்களென்று, உன் மதுனி கண்ணீர் வடிப்பது உனக்குத் தெரியுமே. இப்பொழுதே ஒரு நல்ல நாளில் கலியாணத்தை முடித்து விடுவதில் உனக்கென்ன ஆக்ஷேபம்?

அம்மாளு:—ஆக்ஷேபம் என்ன, அண்ணா, எனக்கென்ன ஆக்ஷேபமிருக்கும்? நீர் எனக்கு இவ்வளவு செய்திருந்தும், நான் அட்டி சொல்வேனா? அதொன்றுமில்லை; மைலாப்பூர் ஜோஸியரைக் கேட்ட பிற்பாடு ஜாதகப் பொருத்தத்தைப் பற்றித் தான் கொஞ்சம் சந்தேகமாயிருக்கிறது; இன்று காலையில் மதுனியிடத்தில் கூடச்

சொல்லிக் கொண்டிருந்தேன். நமக்கென்ன, நம்ம காலமாய் விட்டது; அதுகள் சின்னஞ் சிறிசுகள், ஆயிரங் காலப் பயிர்கள்; அதுகள் க்ஷேமமாய் வாழவேணு மென்பதுதானே நம்ம கவலையெல்லாம்? நம்ம சௌகரியத்தையோ மனோபீஷ்டத்தையோ உத்தேசித்து, கிரகபலன்களைக் கவனியாமல், தோணினபடி செய்யலாமா?

கேசவையர் :—[பட படப்பாய்] கண்ணனூர் ஐயங்காரைவிடக் கெட்டிக்கார ஜோஸியனும் பிருதிவியிலே இருக்கானா? அவரே உத்தமப் பொருத்தம் என்று சொல்லிவிட்டாரே. மனசறிந்து, ஜாதகம் பொருந்தாவிட்டால், நானே என் ஸீமந்த புத்திரியைக் கொடுக்கிறேனென்று சொல்வேனா? லாப நஷ்டம் எனக்கில்லையா? என்ன அம்மாளு! நீ என்னிடத்தில் இப்படிப் பேசுவாயென்று நான் சொப்பனத்திலும் நினைக்கவில்லையே! என்ன, ஜோஸியர்கள் தெய்வமா? பிரகஸ்பதிக்கும் பதில்தானா? மற்ற வீடுகளைவிட ஜோஸியன் வீட்டில் அமங்கலிகள் அதிகமென்று பழமொழியுமுண்டே.

அம்மாளு :—அண்ணாவுக்கு நான் சொல்லுகிறது கோபம் வருகிறது; பெற்ற தாய்க்குக் கவலை யிருக்குமே என்று கூட நினைக்கவில்லை. கொஞ்ச நாளைக்கு முன்பு, வக்கீல் வேம்பையர் ரமணனுக்குப் பெண்ணையும் தந்து இரண்டாயிரமும் கையில் தருகிறேனென்று சொன்னார். நான் அதைப் பெரிதாக நினைத்தேனா? உம்மிடத்தில் சொல்லக்கூட வில்லையே.

சுந்தரி :—இரண்டாயிரமா? நாலாயிரத்துக்கு மேலே யிருக்குமே, உங்கள் குடும்பத்துக்கு இதுவரையும் உங் கண்ணா செலவழித்திருக்கிறது! எந்தத் தமயன் தன் தங்கைக்காக இப்படிச் செலவழித் திருக்கிறான், காட்டு பார்ப்போம். அப்படி யிருந்தும், யாரோ, எங்கேயோ கிடந்தவன், பணம் தருகிறேன் என்றானும், அதுதான் பெரிதாகத் தோணுகிறது! உன் பிள்ளையை யார் படிக்க வைத்து இவ்வளவு முன்னுக்குக் கொண்டுவந்தது?

அம்மாளு :—நீ இந்த வீட்டிலே காலெடுத்து வைக்கு முன்னாலே, அவர் எனக்கு அண்ணா; அப்புறம்தான் உன் உறவெல்லாம். எனக்கு எல்லாம் செய்யத்தான் செய்தார்; ஆனால், அவர் தகுதிக்கு அது பெரிதில்லையே? இவ்வளவு பெரிய உத்தியோகஸ்தன், தன் தங்கையைத் தெருவிலே திண்டாட விடுவானா? என் பிள்ளையும் வருஷா வருஷம், பள்ளிக்கூடச் சம்பளமில்லாமல், மேற் செலவுக்கும் கூட ஏதோ சம்பாதித்துக் கொண்டுதான் வாசித்தான். சொந்தத் தங்கையையும் அவள் குழந்தைகளையும், ஒரு தமயன் காப்பாற்றுகிறது அதிசயமா? அவரே கைவிட்டு விட்டாலும், மஹாராஜா ஊட்டுப் புரையிலாவது பிழைத்திருப்போம்.

இந்த மாதிரித் தன் தங்கை பேசுவது கேசவையருக்கு அருவருப்பா யிருந்தது; அவள் இப்படிப் பேசுவாளென்று அவர் எண்ண வில்லை. அவளுக்குச் சீர் வேண்டுமென் றிருந்தால், எக்கடன் பட்டாவது, தான் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்.

"இவ்வளவுக் கப்புறம், நான் உம்மிடத்திலேயே பணம் வாங்கினால், ஊரிலே என்ன சொல்லமாட்டார்கள்? என்னவோ, ரமணனைக் கேட்டுக்கொள்ளும்; அவன் இன்னும் குழந்தை யில்லையே," என்று சொல்லிக் கொண்டே, அம்மாளு வெளியே போய்விட்டாள். பின்பு கேசவையர் தன் மருமகனைக் கேட்டார். அவன் கூச்சத்தால் நேரிற் பதிற் சொல்லவில்லை; அழுத்திக் கேட்கவே, தனக்கொன்றும் தெரியாதென்றும், தன் தாயாரிஷ்டம் போற் செய்யலா மென்றும் அவன் சொல்லிவிட்டான். அன்று மாலை, புஸ்தக சாலைக்குச் சென்று தன் மகன் எம். ஏ. பரீட்சைக்கு வேண்டிய புஸ்தகங்களை வாசிப்பதற்கு, மைலாப்பூரில் குடியிருப்பது அசௌகரியமாக யிருக்கிறதென்று, அம்மாளு சொல்லிக்கொண்டிருந்தாள். மறுநாள் கேசவையர் கச்சேரிக்குப் போனபின்பு, அவள், தன் சாமான்களை எடுத்துக்கொண்டு, குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு, நுங்கம்பாக்கத்தில் ஒரு வீட்டுக்குக் குடிபோய்விட்டாள்.

கச்சேரியிலிருந்து வந்து சமாசாரத்தைத் தெரிந்தவுடன், கேசவையருக் குண்டான கோபம் அளவு சங்கையில்லை. உடனே நுங்கம்பாக்கத்துக்குப் போய், ஆயிரத்தைந்நூறு ரூபாய் தருவதாயும், தன்னுடன் வீட்டுக்குத் திரும்பிவந்து தன் பெண்ணைக் கலியாணஞ் செய்துக் கொள்ளும்படிக்கும், தங்கையையும் மருமகனையும் மாறி மாறிக் கெஞ்சி வேண்டிக் கொண்டார். அம்மாளு, ஜாதகப் பாட்டையே பதிற் பாடினாள். கலியாணப் பேச்சை நிறுத்திவிட்டு, தன்னுடன் வந்து முன்போல் குடியிருக்கும்படி வேண்டினார்; அதற்கும் இணங்கவில்லை. தன் உதவியின்றி எவ்வாறு அவர்கள் தனிக் குடித்தனம் செய்ய முடியுமென்பது, அவருக்கு விளங்கவில்லை.

அதற்குப் பதினைந்தாவது நாளில், பி. ஏ. பட்டம் பரிசுகள் பெற்ற சிரஞ்சீவி ரமணனுக்கு, வெகு ஆடம்பரத்துடன், ஹைகோர்ட்டு வக்கீல் கனம். இராமநாதையரவர்களுடைய புத்திரி கன்னிகாதானம் செய்து கொடுக்கப்பட்டாள். பித்தளை வெள்ளி தங்கப் பாத்திரங்கள் சீர்கள் தவிர, ரொக்கம் ஐயாயிரம் ரூபாயும் அம்மாளு பெற்றுக்கொண்டாளென்று ஊரில் வதந்தி; அவ்வளவு பெரிய மனுஷனுடைய மாப்பிள்ளையாகி விட்ட ரமணனுக்குப் பின்பு என்ன குறை? அப்பொழுதுதான் தன் தங்கையின் துணிவும் பேராசையும் கேசவையருக்கு விளங்கிற்று.

இந்த "வெட்கங் கெட்ட அநியாயத்தைப்" பற்றிச் சுந்தரி சொன்ன சொற்களையும், தான் பட்ட மனவெரிச்சலையும் நம்மாற் கூறி முடியாது; கனம் இராமநாதையரவர்களையே, 'பிள்ளை பிடிக்காரன்' என்று அவள் ஏசினாளென்றால், முழு மூடத்தனமாய்த் தன் பணத்தையெல்லாம் பாழாக்கி, நன்றி கெட்ட முண்டையாகிய தன் நாத்தனார் குடும்பத்துக்காக வாரியிறைத்த தன் கணவர் கேசவையருக்கு அவள் கொடுத்த கொடையை விவரிக்க வேண்டாமே. கேசவையர், பதிலே பேசவில்லை; தலை குனிந்து ஸ்தம்பித்திருந்தார். அவர் மனமெல்லாம் ஒரே குழப்பமா யிருந்தது; அவர் வைதிகக் கொள்கைகளெல்

லாம் தலை கீழாகும்படித் தத்தளிப்பா யிருந்தார். ஆயுசு பரியந்தம் செய்த அபரிமிதமான உபகாரங்களை யெல்லாம் மறந்து, சுபாவ வாஞ்சையையும் துறந்து, ஒரு சகோதரியே தன் சொந்தச் சகோதரன் விஷயத்தில் இப்படி நடக்கும்படிக்குச் செய்யும் (வரதக்ஷிணை) வழக்கத்தைப் பற்றி என்ன நினைப்பதென்று அவருக்குத் தெரியவில்லை. "ஆயிரம் ரூபா கொடுத்தால் எத்தனையோ பிள்ளைகள் வேறு கிடைக்கும்; நம்ம சம்மந்தம் கிடைக்கவேண்டுமே என்று விரும்புகிறவர்கள் எத்தனையோ பேர்; இனிமேல் தாமஸிக்கவே கூடாது; மோசம் வந்துவிடும்; உடனே வேறு பிள்ளை யொன்றைப் பார்த்து, கன்னிகாதானம் செய்து கொடுங்கள்." என்று அலட்டினுள் அவர் மனைவி. ஆனுல், ஆலோசனையில் ஆழ்ந்தவராய், கேசவையர் அதையும் கவனிக்க வில்லை. கலியாணப் பேச்சே அவருக்கு மனக்கசப்பையும் வெறுப்பையும் உண்டு பண்ணிற்று. தன் பெண் சீதையிடத்தில் மட்டும் முன்னிலும் அதிகப் பக்ஷமாக நடந்து வந்தார்; அவள் எப்பொழுதாவது அருகே சென்றாலும் அவளை அருமையாய்த் தடவிக் கொடுப்பார்; தன்னை யறியாமலே இவ்வாஞ்சை மட்டும் தழைத்தோங்கி வந்தது. ஒருநாள் அவர் கச்சேரியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு சேவகன் துண்டுக் காகிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்; அதில் "உடனே வரவேணும்" என்று அவர் மனைவி சுந்தரி கையெழுத்தில் எழுதியிருந்தது; கண்ணீர் ஒரு சொட்டு விழுந்து அழிக்கப்பட்ட கறையுமிருந்தது. கேசவையர் வேகமாய் வீடு சென்ருர். அவர் மனைவி, கண்ணும் கண்ணீருமாய்த் தெருவாசற் படியில் நின்று, அவர் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏன்? என்ன சங்கதி? யாருக்கென்ன? ஏன் நீ அழுகிருய்?" என்று பரபரப்பாய்க் கேசவையர் கேட்டார். "நம்மசீதை,——நம்மசீதை,——" என்று சுந்தரி தேம்பி யழுதாள்; துக்கம் நெஞ்சை யடைப்பதால், மேலொன்றும் பேச முடியவில்லை.

“என்? அவளுக்கென்ன?” என்று கேட்டுக் கொண்டே, கேசவையர் வெறி கொண்டாற் போல் வீட்டுக்குள் ஓடினார். சுந்தரி, உடுப்பைப் பிடித்திழுத்து அவரை நிறுத்தித், தன் கண்ணீரைத் துடைத்துத் துக்கத்தையும் அடக்கிக் கொண்டு, சீதை ருதுவாய்விட்டா ளென்றும், குடும்பத்துக்குத் தீராப்பழி நேர்ந்து விட்ட தென்றும் அரிதிற் கூறி முடித்தாள்.

“இதற்குத்தானா இவ்வளவு!” என்று ஆசுவாசப் பட்டார் கேசவையர்.

சுந்தரி:—யாரேனும் ஒரு பிள்ளையை உடனே பாருங்கள். இதை நான் கொஞ்சநாளைக்கு மறைத்து வைத்திருக்கிறேன்; எந்தப் பிரமசாரியானாலும் சரி, என்ன பணம் கேட்டாலும் சரி; என் நகைகளையெல்லாம் வேண்டுமானாலும் விற்றுவிடுங்கள். எப்படியாவது உடனே ஒரு தாலியைக் கட்டி வைத்து மானத்தைக் காப்பாற்றுங்கள்.’ என்று உருக்கமாய்க் கெஞ்சினாள்.

கேசவையரோ, சொப்பனத்தி லிருப்பவர்போ லிருந்தார்; விசாரம், கவலை, அந்தக்குறி யொன்றுமே அவர் முகத்தில் காணவில்லை. கொஞ்ச நேரங் கழித்து, அவர் தன் மனைவிக்குப் பின் வருமாறு பதிற் சொன்னார்:—

நம்ம கண்மணி சீதையை எப்படியாவது யார் கையிலாவது பிடித்துக் கொடுத்துவிட வேண்டு மென்று நான் அவரசரப்படவே மாட்டேன்; உலக அபவாதத்திற்காக நான் கவலைப் படவுமில்லை. ஒரு பெண்ணைக் கண்ணில் வைத்து இமையால் மூடி அருமையாக வளர்த்துக், கடைசியில் எவனுக்காவது இப்படிக் கட்டிக் கொடுப்பது, கேவலம் பாபம் என்றே நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன். அப்படிச் செய்வது தெய்வத்துக்கே பொறுக்காது. இங்கிலீஷ் படித்த பிள்ளைதான் வேண்டுமென்கிற பைத்தியமும்; அந்தச்சாதி கூடாது, இந்தச் சாதிகூடாது என்கிற நிர்ப்பந்தங்களுந்தான், நம்மை இந்தப் பாழுங் கதிக்குக்

கொண்டுவந்து விட்டன. இங்கிலீஷ் படிப்பாம் படிப்பு! எத்தனை முதல் கிளாஸ் ஆனாலென்ன, எத்தனை தங்கப் பதக்கங்களானாலென்ன, எத்தனை பரிசுகளானாலென்ன? என்மருமகன் ரமணனைப்போல் ஒருவன் நடப்பதாயிருந்தால், அவன் படிப்பினால் ஒரு செம்பாலடித்தகாசும் பிரயோசனமுண்டோ? என் தங்கை ஏழை, ஜடம்; அவளை நான் குற்றஞ்சொல்ல மாட்டேன், தெரிந்ததே அம்மட்டுத்தான். பரீக்ஷைகள் கொடுத்துப் பட்டங்களும் பரிசுகளும் பெற்ற என் மருமானே,——குப்பை கூட்டுகிற தோட்டி ஒருவன் யோக்கியனாயிருந்தால் இவனுக்கு அவன் எவ்வளவோ மேலாகவே மதிப்பேன். யார்பெண்ணை இவன் கலியாணம் செய்து கொண்டாலென்ன? எவ்வளவு பெரிய உத்தியோகத்தை இவன் அடைந்தால்தானென்ன? இவ்விதமான சாதிக்கட்டும் நிர்ப்பந்தங்களும் உள்ளவரை, நாம் ஒருநாளும் முன்னுக்கு வரப்போகிறதேயில்லை. இதைப்பாரேன்: ஒரு தேவடியாள் வீட்டுக்கு நான் ஒருநாள் போவதாயிருந்தால், அவளுக்குக் கையிலே பணம் கொடுத்து, அவளைத் தாங்கித் தடுக்கிட வேண்டியதாயிருக்கிறது. ஆனால் ஒரு பிராமணப் பெண்ணை, தலைமுறை தலைமுறையாக வரும் உத்தமஸ்திரீகள் வமிசத்தில் பிறந்த குலமகளை, கள்ளங் கபடறியாத கற்பரசியை, கண்ணுள் மணியாகவும் உயிருக்குயிராகவும் பாராட்டி வளர்த்து வந்த அவள் தகப்பன், வாழ்விலும், தாழ்விலும், சௌக்கியத்திலும், அசௌக்கியத்திலும், என்னுடனிருந்து சகல சுகதுக்கங்களையும் அநுபவித்து, என்வீட்டில் அடிமைபோல் உழைத்து, என் குடித்தனத்தைக் காப்பாற்றி, என் வம்சம் விருத்தியாகும்படி சொல்ல முடியாத நோவைப் பொறுத்து என் குழந்தைகளைப் பெற்று வளர்த்து, நான் அடித்தாலும் அணைத்தாலும் என்னைத் தவிர வேறு கதியின்றி என்னைக் காதலித்துத், தன் வாழ்நாள் முழுதையும் எனக்கே அர்ப்பணஞ் செய்யும் பதிவிரதையான பத்தினியாக அவளைக் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாக என்னை வேண்ட

வே, உடனே என்னாலான மட்டும் அவன் கைப்பணத்தைப் பறித்து, அவனை ஓட்டாண்டியாக்கித், தனக்குப் பெண் பிறந்த தினத்தையே நினைத்து அவன் மனம் நோகும்படி செய்வதோ ஆரியதர்மம்? சற்குண சம்பன்னராய், தபோ நிதிகளாய், தர்மசொரூபிகளாய், இந்தப் புண்ணிய பூமியில் வாழ்ந்து வந்த மகரிஷி கணங்களே! உங்கள் கோத்திரங் களையே கொண்டு குலாவும் உங்கள் சந்ததிகளாகிய நாங் கள், பணவாசையென்னும் பாழான பேய்பிடித்து, இந்த நாளில் எவ்வளவு துஷ்கர்மிகளான கீழ்மக்களாகிவிட் டோம்! நீ கண்ணீரைத் துடைத்துக்கொள்; விசாரப் படாதே. முன்னாளில், ராஜ ரிஷியான ஜனகர் வீட்டி லிருந்த சீதாதேவியை ஸ்ரீராமர் விவாகம் செய்து கொண் டது போல, நம் சீதையையும், அவளுக்குத் தக்க நாயகன் தானாகவே தேடிவந்து மணம் புரியும் வரை, அவள் சுக மாயும் சந்தோஷமாயும் நம்மாத்திலேயே வாழட்டும்."

## 18. விவாக ஸம்ஸ்காரம்.



ன் ஒரே மகன் சேஷுவுக்கு ஜானகி அம்மாள் தலைவாரிக்கொண்டிருந்தாள். தை மாதம் 12-ம் தேதி முகூர்த்தத்தில் புத்தூர் மகாதேவையர் பெண்ணை அவனுக்கு விவாகம் செய்வதாக ஏற்பாடாகி, அதைப்பற்றி நிச்சயம் செய் வதற்காகவே அவன் தகப்பனார் அவனைப் பட்டணத்தி லிருந்தும் வரவழைத்திருந்தார். அவன் அன்று காலை தான் வந்தான்.

ஜானகி:—உனக்குப் புத்திகெட்டுப்போயிருக்கிறதா? உன் அப்பாவைவிட நீ அதிகம் தெரிந்தவனா? இந்தப் பாழான நீசபாஷையைக் கற்றுக் கொண்டு, கலியுகத்தில், எல்லாரும் தலைகீழாய்த் தான் நடக்கிறார்கள்.

சேஷு:—(வருந்திய குரலில்) நீயும் இப்படிச் சொன்னால் நான் என்ன செய்வேன், அம்மா. எனக்கு வயது பதினெட்டுத் தானே ஆகிறது; அதற்குள் எனக்கு இப்பொழுது கலியாணத்துக்கு என்ன அவசரம்? பரீக்ஷைகளெல்லாம் தவறாமல் ஒப்பேறினாலும் கூட, என் படிப்பு முடிவதற்கே இன்னும் நாலைந்து வருஷங்களாமே.

ஜானகி:—நான் உன் அப்பாவுக்கு வாழ்க்கைப்படும்போது, அவருக்கு வயது பன்னிரண்டே தான்; எனக்கு ஏழுவயது. ஆனால் உனக்கு, ஐயோ, நம் தாயாருக்கு வயதாய் விட்டதே, எத்தனை நாள் தான் குடமெடுத்துத் தீர்த்த மெடுத்து, ஒண்டியாய்ச் சமைத்துச் சாதம்போட அவளால் தள்ளும், என்கிற இரக்கம் துளிகூட இல்லை. அவள் கண் மூடுமட்டும் அவளே எல்லாப் பாட்டையும் படட்டும் என்று எண்ணிக்கொண் டிருக்கிறாய். நாலு வருஷமாவது, எனக்கு ஒரு நாட்டுப் பெண் வந்து, நான் சற்று சுகப்பட வேண்டுமென்பது உனக்கு இல்லவே யில்லை. தெய்வ சங்கல்பத்தினால், எனக்கு இந்த ஜன்மத்தில் பெண் இல்லையென்று போய் விட்டது. என் ஒரே பிள்ளையாகிய நீயும், எனக்கு நாட்டுப் பெண்ணும் வேண்டா மென்று சொல்கிறாய்.

சேஷு:—எதற்காக அம்மா, அதற்குள்ளேயே ‘சாகப் போகிறேன், சாகப் போகிறேன்’ என்று சொல்கிறாய்? உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லையே? நீ இன்னும் சில வருஷங்களுக்குச் சுகமாயிரு; உனக்குப் பெண்ணைவிட அதிகமாக, உன் மனத்துக்கேற்ற நாட்டுப் பெண்ணாக, நான் அப்புறம் பார்த்துக் கலியாணம் பண்ணிக்கொள்கிறேன்.

ஜானகி:—இருபது, முப்பது வயதாகி, உனக்கு நாலு குழந்தைகளிருக்க வேண்டிய வயதிலா, நீ கலியாணம் செய்து கொள்ளப் போகிறாய்? இதென்ன பேச்சு இது! நீ என்ன தான் நினைத்துக்கொண் டிருக்கிறாய்!

சேஷு:— அம்மா! நம் முன்னோர்களெல்லாம் நாள் கழித்து தான் கலியாணம் செய்து கொண்டார்கள். அநேகர் முப்பது நாற்பது வயதுவரை பிரமசாரிகளாய்த் தான் இருந்தார்களென்று நீ கேட்டிருப்பதில்லையா? அந்தக் காலத்துப் பெண்களுக்கும், இப்பொழுதுபோல, பச்சைக் குழந்தைகளா யிருக்கும்பொழுதே விவாகம் நடக்கவில்லை; குடித்தனம் செய்வதின் அருமையும் பெருமையும் தெரிந்து தக்கவயது வந்த பின்னரே, கலியாணம் நடந்தது.

ஜானகி:—உனக்குக் கொஞ்சம் இளகி யிருக்கிறது; அதுதான் நீ இப்படியெல்லாம் பேசுகிறாய். நம்ம சாஸ்திரங்களை விடக்கூட நீ அதிக மேதாவியா?

சேஷு:—இப்பொழுது குழந்தைகளுக்குக் கலியாணம் செய்பவர்கள் தான் சாஸ்திரங்களைவிட நாம் தான் மேதாவிகளென்று நினைத்துக்கொண் டிருக்கிறார்கள்; நானில்லை. மந்திரங்களின் அர்த்தத்தை யாராவது கவனித்துப் பார்த்தால், விவாக ஸம்ஸ்காரப்படி, வதூவரர்களிருவரும் தக்க வயதுள்ளவர்களாகத்தான் இருக்க வேண்டு மென்பது அவர்களுக்குத் தானே தெரியும். பாலிய விவாகம் செய்பவர்கள் தான் சாஸ்திரத்திற்கு விரோதமாய் நடக்கிறார்கள்; இந்தக்காலத்தில், நம் சௌகரியத்துக்கும், சௌக்கியத்துக்கும், மனச்சாக்ஷிக்கும் ஒப்ப, நம் பழைய நாளை வழக்கங்களையே நாம் அனுசரிக்க வேண்டுமென்று நான் சொல்வது சாஸ்திர விரோதமில்லை.

ஜானகி:—எனக்கு அதெல்லாம் தெரியாது. நான் வாழ்க்கைப்படும்போது எனக்கு ஏழுவயது தான்; உன் பாட்டிக்கு ஐந்து வயதிலேயே கலியாண மாய்விட்டதாம். நீ சொல்கிறபடி இன்னும் ஐந்தாறு வருஷங்களுக்கு உனக்குக் கலியாணம் செய்யாம லிருந்தால், எல்லாரும் அதற்கு என்னவோ காரண மிருக்கிறதென்று பயந்து, அப்புறம் உனக்குப் பெண் கொடுக்கவே மாட்டார்கள். அது

மாத்திரமில்லை: எனக்கு வயதாச்சு; ஆத்துக்காரிய மெல்லாம் நானே செய்ய என்னால் முடியவில்லை. உங்க ளப்பாவும், சீக்கிரம் உனக்கு நல்ல இடத்தில் கலியாணம் செய்துபார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்; இந்தச் சம்பந்தமும் அதிர்ஷ்டவசத்தால் தான் நமக்குக்கிடைக்கிறது. என்னவோ விசித்திரமாய், எவனோ வெள்ளைக் காரனைப் போல், பேசுவதை விட்டுவிட்டு, நம்தேசத்துப் பிள்ளைகளைப் போல, உன் தாயார் தகப்பனார் சொல்லுகிற படி, தட்டாமல் நட.

சேஷு:—நீங்கள் கட்டாயமாய்ச் சொன்னவுடன், நான் தான் உங்கள் இஷ்டப்படி ஒப்புக் கொண்டேனே; முதலில் தின்னூர்ப் பெண்ணை நிச்சயம் செய்திருந்த போது, நான் உடன்பட்டுத் தான் இருந்தேன். நான் போய் அந்தப்பெண்ணைப் பார்த்தபோது, அவள் லட்சணமாய், புத்திசாலியாய் இருப்பாள் போலிருந்ததால், எனக்குப் பிடித்திருந்தது. அவளுக்கு எட்டுவயதுதானாகிறது; இப்போதைக்கு என்படிப்புக்குத் தடையுமாகாது. அதை விட்டுவிட்டு, நானும் பாராத இந்தப் பன்னிரண்டு வயதான புத்தூர்ப்பெண்ணை ஏன் நிச்சயம் செய்திருக்கிறீர்கள்? திடீரென்று இப்படி மாறுவதேன்?

ஜானகி:—உங்க அப்பா அந்தப்பெண்ணை இரண்டு மூன்று தரம் பார்த்திருக்கிறார்; அவள் சீக்கிரம் பெரியவளாகி விடுவாளென்று சொல்கிறார். அவள் ஆறு மாதத்தில் ஆத்துக்கு வந்துவிட்டால், அவளிடம் குடித்தனத்தை ஒப்புவித்துவிட்டு நான் சாவதற்கு முன் கொஞ்ச நாளாவது, அம்மாடி! என்று, சற்றுக் காலை நீட்டி உட்காரலாமோ என்று தான் பார்க்கிறேன்.

சேஷு:—எதற்காக, அம்மா சாவதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எனக்கு நீ இப்படிச் சொல்வதைக் கேட்கப் பொறுக்கவே முடியவில்லை.

ஜானகி:—தீர்மானமாய் எனக்கு ஐம்பத்து மூன்று வயது நிறைந்து நான் காணப்போகிறதில்லை. நான் இது வரை உன்னிடம் சொல்லவில்லை; எனக்கு இது பத்து வருஷமாய்த் தெரியும். கன்னூர் ஜோஸியனைவிடக் கெட்டிக்காரன் இந்தப் பிரபஞ்சத்திலே யில்லை. அவன் சொன்னது பலித்தே தீரும்.

சேஷ:—(இதைக் கேட்டவுடன் முதலில் அடைந்த திகில் மாறி) இதெல்லாம் பைத்தியக்காரத்தனம், அம்மா. ஜோஸியர்கள் தெய்வ மில்லை; இந்த நாளில், ஜோஸியம் என்று சொல்வதெல்லாம் வெறும் புரளிதான்.

ஜானகி:—நீ இதையெல்லாம் என்ன கண்டாய்? வினை கெட்டுப்போய் இந்த இங்கிலீஷ் வாசிப்பதின் பயன், இந்த அகம்பாவமும் அதிகப் பிரசங்கித் தனமுந்தான்.

சேஷ:—போகிறது அம்மா, இப்பொழுது ஏன் புத்தூரில் நிச்சயம் செய்திருக்கிறாய்? நான் கலியாணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமென்றிருந்தால், தின்னூர்ப் பெண்ணே யிருக்கட்டும். அப்படித்தான் நிச்சயம் செய்து தாம்பூலம் கூட வாங்கிக் கொண்ட பிறகு, இப்பொழுது அவர்களை வேண்டாமென்று சொல்வது சரியில்லை; யோக்கியமே யில்லை.

ஜானகி:—அந்தத் தின்னூர்ப் பிராமணன் ஒரு ஏழை குமாஸ்தா, ரூபா 500-க்குமேல் அவரால் கொடுக்க முடியாது; அதுவும், எங்கேயோ கடன் வாங்கப்போகிறாராம். அப்படிப்பட்டவர் என்ன சீர் செய்யப்போகிறார்? அவர் சம்சாரி, கலியாணத்திற்கு இன்னும் மூன்று பெண்களிருக்கிறார்கள். புத்தூர் மகாதேவையரோ-இந்தப் பக்கங்களுக்காக அவர் தான் அதிகப் பணக்காரரான மிராசுதார். அவர், கையில் ரூபா 2500-கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறார்; சீர் ஆயிர ரூபாய்க்குக் குறையாது. கலியாணமும் வெகு சிறப்பாய்ச் செய்து கொடுப்பார். இப்படிப்பட்ட சம்பந்தம் கிடைப்பது நம் அதிர்ஷ்டம்

தான். இதையெல்லாம் உத்தேசித்தே, உங்கப்பா, சீக்கிரம் கலியாணத்தை முடித்துவிட வேண்டுமென்று ஆத்திரப்படுகிறார். என் இஷ்டமோ, அந்தப் பெண்ணுக்கு வயது பன்னிரண்டாகிறது; அடுத்த வருஷம் ஆத்துக்கு வந்து விடுவாள்; என் மட்டில் அது ஒன்றே போதுமான காரணம்.

சேஷு:—அப்பா என்ன ஏழையா, அம்மா? இந்தப் பணத்துக்காக, ஒரு ஏழைப் பிராமணரிடம் சொன்ன வாக்கைத் தவறுவாரா? நம்ம சொத்து ரூபா 5000 ஆவது பெறும்; நான் ஒரு பிள்ளை தானே, நானும் இனிமேல் சம்பாதிக்கமாட்டேனா? அந்தத் தின்னூர் குமாஸ்தா ஏழையாகவும், சம்சாரியாகவும் இருக்கிறதை உத்தேசித்தே, நாம் அவர் பெண்ணையே கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று, எனக்குத் தோன்றுகிறது. அவரிடம் சீரொன்றும் வேண்டாமென்று சொல்லி விடலாம்; அல்லது அவராகச் செய்ததைக்கொண்டுத் திருப்தி அடைய வேண்டுமே யொழிய, இன்னொருவர் அதிகப் பணம் தருகிறாரென்று, அவரிடம் நாம் சொன்ன சொல் தவறி, வாக்குமீறி நடப்பது அழகல்ல.

ஜானகி:—புத்தூர் மகாதேவையரிடமும் தாம்பூலம் வாங்கி எல்லாம் நிச்சயம் செய்தாய்விட்டது. அவர் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளாவிட்டாலும், நீ சொல்லுகிறபடி வாக்கு மீறி நடப்பதாகும். நாம் கலியாணத்துக்கு ஒரு பைசாகூட செலவழிக்க வேண்டாம். அவர் கிராமத்துக்கு நாம் போவதற்கு வண்டிகள் கூட அவரே அனுப்புவதாகச் சொல்லி யிருக்கிறார். உன் அப்பாவுக்கும் இந்தச் சம்பந்தம்தான் மனப்பூர்வமான இஷ்டம்: ஒரே பிடிவாதமாய் நிற்கிறார்; எனக்கும் பெரிய பெண்ணா யிருப்பதால் சிலாக்கியமென்றே தோன்றுகிறது. உனக்கு இதுகளெல்லாம் என்ன தெரியும்? நீ குழந்தை; பெரியவர்களாகப் பார்த்து, நீ மகாராஜனாய் ஆயிரங்காலம்

சேஷா இதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், தன் ஆக்ஷேபணைகளைப்பற்றித் தன் தகப்பனுரிடம் சொல்லும்படி, அவளைக் கேட்டுக் கொண்டான். அவள், அவர் அதிகக் கோபப்படுவார் என்று சொல்லி மறுத்துவிட்டாள். சேஷா, என்றுமே தன் தகப்பனுரிடம் தாராளமா யிருந்த தில்லை; இவ்விஷயத்தைப்பற்றி அவரிடம் நேரிற்பேச, அவனுக்கு மனம் துணியவில்லை. அவருக்குத் தன் மாமன் மூலமாக ஒரு தூதனுப்பிப் பார்த்தான்; ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில், தன் தகப்பனுருக்குப் பயந்து கலியாணத்துக்கு ஒத்துக் கொண்டு, கிறிஸ்ட்மஸ் கழிந்தவுடன், அவன் சென்னைக்குத் திரும்பிப் போய்விட்டான்.

புத்தூர் மகாதேவையர் பெரிய பணக்காரர்; அவர் போட்டிருந்த கலியாணப்பந்தல் தெரு முழுவதையும் அடைத்து, ஆடம்பரமாய் அலங்கரிக்கப்பட் டிருந்தது. கலியாணம் சிறப்பாய் நடத்துவதற்கு வேண்டிய பல ஏற்பாடுகளும் செய்வதற்காக, காரியஸ்தர்களையும் வேலையாட்களையும் ஏவலிடுவதிலேயே, முகூர்த்தத்துக்குப் பத்து நாட்களுக்கு முன்பே, அவர் தொண்டை கம்மிப்போய்விட்டது.

தைமாதம் மூன்றாம் தேதியன்று, இங்கிலீஷில் விலாசம் எழுதப்பட்டு, சென்னப்பட்டணத்து முத்திரை போட்டிருந்த ஒரு கடிதத்தை, தபால்காரன் அவர் கையில் கொடுத்தான். மகாதேவையருக்குச் சிறிது இங்கிலீஷ் வாசனை யுண்டு; அதைக்கொண்டே அவர் தாலுக்கா டிஸ்டிரிக்ட் போர்டுகளில் மெம்பராகப் பரிமளித்து வந்தார். கடிதத்தின் கூட்டைப் பார்த்தவுடன், மாப்பிள்ளைக்காகச் சென்னப்பட்டணத்திலிருந்து தான் அனுப்பச் சொல்லி யிருந்த பைசிகிளுக்கு ரெயில்வே ரசீதாக விருக்குமென்று அவர் நினைத்தார். உள்ளே திறந்து பார்க்கவே, பின்வரும்

தமிழ்க்கடிதம், இலக்கணமாயும், பிசகில்லாமலும், கூட்டெழுத் தில்லாமல் தனித்தனியாகப் பிரித்தும், எழுதப் பட்டிருந்ததைக் கண்டார்.

"ம-ா-ா-ஸ்ரீ புத்தூர் மகாதேவ ஐயரவர்களுக்கு புத்தூர் சங்கரையர் குமாரன் சேஷனுக்குச் சிநேகிதனுன ராஜாங்கம் அநேக நமஸ்காரம். தங்களை முன்பின் அறியாத நான், இவ்வாறு எழுதுவது, தங்களுக்கு ஆச்சரியமா யிருக்கலாம்; ஆனுல் அதை யெல்லாம் பற்றி யோசிக்க இது சந்தர்ப்பமில்லை. தாங்கள் நிச்சயம் செய்திருக்கும் மாப்பிள்ளையும் நானும் காலேஜ் ஹாஸ்டலில் ஒரே அறையில் தான் குடியிருக்கிறோம். நாங்கள் அந்தரங்க சிநேகிதர்கள். நான் தங்களுக்கு எழுதுவதைப் பற்றி அவனுக்குத் தெரியாது; ஆனுல் அவனுக்குத் தெரிந்து அவன் இஷ்டத்தை அவன் பகிரங்கமாய்ச் சொல்லப்பட்டவனு யிருந்தால், இந்தக்கடிதத்தை அவன் ஒப்புக் கொள்வானென்றே நினைக்கிறேன். பின்வரும் முகாந்தரங்களால் அவனுக்குத் தங்கள் பெண்ணை விவாகம் செய்து கொள்வதில் இஷ்டமில்லை. (1) தின்னூரில் ஒரு பெண்ணை அவனுக்கு முதலில் நிச்சயம் செய்திருந்தால், இவ்வாறு அந்த வாக்குத் தவறி நடப்பது பிசகென்று அவன் எண்ணுகிறுன். (2) தின்னூர்ப் பெண்ணை அவன் பார்த்து, இஷ்டப்பட்டு, சம்மதித்தான். தங்கள் பெண்ணையோ, அவன் பார்த்ததே யில்லை. (3) தங்கள் பெண்ணுக்குப் பன்னிரண்டு வயதாகிறபடியால், அது தன் படிப்புக்குத் தடையா யிருக்குமென்று எண்ணுகிறுன். (4) அவன் தாய் தந்தையர்களுக்குக் கூடத் தெரியாத மற்றொரு சங்கதியு முண்டு. அதாவது, ஸர்க்கார் நன்கொடை பெற்று இங்கிலாந்துக்குப் போய் வாசிக்க வேண்டுமென்ற அவன் அபிலாசையே. தங்கள் பெண்ணை விவாகம் செய்துகொண்டால், தாங்கள், அவ்வாறு அவன் அயல் தேசம் செல்லச் சம்மதிக்க மாட்டீர்க

ளென்று அவன் பயப்படுகிறான். எங்கள் கலாசாலையில் அவன் எல்லாராலும் மிகவும் நன்கு மதிக்கப்பட்டவன்; அவன் விரும்புகிறபடி சீமைக்கு மாத்திம் போனால், I. C. S. பரீக்ஷை தேறி, கலெக்டராக வருவது அவனுக்கு எளிதில் சித்திக்கக் கூடியதே. ஆகவே, இந்த விவாக விஷயத்தில் அவனுக்குப் பிரியமேயில்லை; தனக்கும் தங்கள் பெண்ணுக்கும் இது நெடுநாளையத் துன்பத்தையே விளக்குமென்று நினைத்துக் கசந்து கொள்கிறான். அவன் எண்ணங்களை நான் அறிந்திருக்கிற படியால், அவற்றைத் தங்களுக்குத் தெரியப் படுத்துவதே சரியென்று நினைத்து எழுதுகிறேன். இதைப்பற்றித் தாங்கள் என்னை மன்னித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். அநேக நமஸ்காரம். ராஜாங்கம்.''

இதை வாசித்தவுடன், மகாதேவையருக்கு இடி விழுந்தாற் போலிருந்தது; அவர் சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாமல் திகைத்து விட்டார். அவர் பெண்ணின் லக்ஷணக்குறைவு அவருக்குத் தெரியும். அதன் பொருட்டே, சேஷு முதலில் வந்து தன் பெண்ணைப் பார்க்க அவர் இடங்கொடுக்க வில்லை. சேஷு ஏகதேசம் சம்பத்துள்ள வீட்டில் ஒரே பிள்ளையாய்ப் பிறந்தவன்; பாலியமாயும் கண்ணுக்கு லக்ஷணமாயு மிருப்பவன்; படித்தவன்; எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டவன்; இந்தக் கடிதமே அவனைப் புகழ்ந்து, அவன் சிறந்த வரனென்பதை நன்கு விளக்கிற்று; எத்தனையோ வரன்களினின்றும் அவனைப் பொறுக்கி யெடுத்துத், தம் காசின் வன்மையால் தின்னூர் குமாஸ்தாவின் சம்பந்தத்தைக் கலைத்து விட்டதைப்பற்றி, மகாதேவையர் பெருமை கொண்டிருந்தார். இங்கிலாந்து சென்றால், சேஷுவுக்குக் கலெக்டர் வேலை கிடைக்குமென்றால் அவ்வாறு கப்பலேறி அயல் தேசம் போகாமலே, தம் செல்வாக்கினாலும் பொருளுதவியினாலும், ஜில்லா கலெக்டர் உத்தியோகம் அவனுக்கு

எளிதில் கைகூடக் கூடியதே. ஆகவே எப்படியாவது அவனைத் தன் மாப்பிள்ளை யாக்கிக்கொள்ள வேண்டு மென்று அவர் விரும்பினர். சிறிதுநேரம் ஆலோசித்துப் பின்பு புத்தூர் சங்கரையருக்கு ஒரு ஆளனுப்பவே, அவரும் காலதாமஸமின்றி மறுநாள் காலையில் வந்துசேர்ந்தார். மகாதேவையர் கடிதத்தைக் காட்டவே, அவர்களிருவரும் அதைப்பற்றி யோசிக்கலானார்கள். தம்மகன் சீமைக்குப்போக விரும்புவதாக அறிந்தவுடன், சங்கரையர் உள்ளூர திகிலடைந்து, மகாதேவையர் பெண்ணுக்கே அவனை விவாகம் செய்ய வேண்டுமென்று முன்னிலும் அதிகமாக ஆத்திரப்பட்டார். சேஷு முதலில் ஏதோ சிறிது ஆக்ஷேபித்ததாக அவர் ஒத்துக்கொண்ட போதிலும், தான் அவனுக்குத் தக்கபடி புத்தி சொன்ன பின்பு, அவன் கடைசியில் கலியாணத்துக்குச் சம்மதித்து விட்டானென்றும் சொன்னர். மகாதேவையர் கடிதத்தைப் பார்த்துப் படும்கவலையையும் சந்தேகத்தையும் அவர் வீணென்று சொல்லிப் பரிகசித்தார். நல்ல வேளையாய், அவர் மனதில் ஒரு புது எண்ணம் உதித்தது. 'இவ்வளவும் மாப்பிள்ளை வேட்டையில் அபஜெயம் அடைந்த அந்த ஏழைப்பிராமணன், தின்னூர் குமஸ்தா செய்த மோசமாயிருக்கலாம்' என்று, அவர் கூறினர். அவர்களிருவருக்கும் நினைக்க நினைக்க, இந்த அநுமானம் அதிகப் பொருத்தமானதாயும், நியாயமானதாயும் தோன்ற, வெகு சீக்கிரத்தில் உறுதியடைந்துவிட்டது. ஆயினும், ஏதாவது அற்ப சொற்ப சந்தேகத்தையும் நீக்கி, மகாதேவையரை முழுதும் திருப்தி செய்யும் பொருட்டு, சங்கரையர் அன்று மாலையே சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றூர். தன் தகப்பனர் எந்தப் பெண்ணை நிச்சயம் செய்தாலும் தனக்கு விவாகம் செய்து கொள்ளச் சம்மதந்தானென்று சேஷுவிடமிருந்து ஒரு எழுத்து வாங்கிக்கொண்டு, அவர் இரண்டு நாளில் திரும்பிவந்தார். கலியாணப் பிரயத்

தனங்கள், முன்னிலும் அதிகமாய் முறுகின; நிச்சயித்திருந்த நாளில் முகூர்த்தமும் நடந்தது. மாப்பிள்ளை, மனங் குளிர்ந்து, பூர்ண சம்மதத்துடன் தம்மகளை மணம் புரியவேண்டுமென்று கருதி, மகாதேவையர், தாம் இது வரை கொடுப்பதாயிருந்த அநேக வரிசைகள் தவிர, ஒரு விலையுயர்ந்த தங்கக் கடியாரமும் சங்கிலியும் வாங்கிக் கொடுந்தார்.

கலியாணம் வெகு சிறப்பாயும் ஆடம்பரமாயும் நடந்தது. புத்தூரைச்சூழப் பத்து மைலுக்குள்ளிருந்து சகல ஜனங்களும் வந்திருந்தார்கள். தாசில்தாரும் இன்னும் அநேக உத்தியோகஸ்தர்களும், நாலு நாளும் புத்தூரில்தான் தங்கி யிருந்தார்கள்; கலெக்டர் கூட ஒரு நாள் மாலை தாம்பூலத்துக்கு வந்தார். கலியாண ஏற்பாடுகளில் ஒன்றை மட்டும் விவரித்துக் கூறி, அதைப் போன்ற விமரிசையுடனேயே மற்றவைகளும் நடந்தனவென்று சுருக்கிக் கூறுவோம். கலியாணத்தில் சங்கீத சம்ப்ரமம்: திருவாடியிலிருந்து ஒரு நாகசுரக்காரன், தஞ்சாவூரிலிருந்து ஒரு தவல்காரன், திருக்கோடிக் காவலிலிருந்து ஒரு பிடில் வித்வான், மைசூரிலிருந்து ஒரு வீணை வித்வான், இராமநாதபுரத்திலிருந்தும் பாலக்காட்டிலிருந்துமாக இரண்டு வாய்ப்பாட்டு பாகவதர்கள், திருவாரூரிலிருந்து ஒரு தேவடியாளும் பங்களூரிலிருந்து ஒரு தேவடியாளும் சின்ன மேளம், ஒவ்வொருவரும் மிகப் பேர் போனவர்களாகவே மகாதேவையர் பொறுக்கியெடுத்திருந்தார். இவை தவிர, சென்னையிலிருந்து பாண்டு வாத்தியக்காரர்களை ஊர்கோலத்திற்காகத் தருவித்திருந்தார். நாலு நாளும், இரவும் பகலும், விருந்தும் வேடிக்கைகளும், காலக்ஷேபமும் பாட்டுக்கச்சேரியுமாக மூச்சுவிட நேரமில்லை. முக்கியமாய் அந்த இரண்டு தாஸிகளின் ஆட்டத்தையும் பாட்டையும் கண்டு கேட்டவர்கள் அதிசயித்து ஆனந்த பரவசமானார்கள்.

நாலாநாளிரவு பட்டணப் பிரவேசம் நேர்ந்தது. வாத்திய கோஷங்கள் முழங்க, அநேக தீவர்த்திகள் இரவைப் பகலாக்கி ஒளி வீச, பலவர்ண வாணங்கள் பூமாரி பொழிய, இரவு 9-மணி சுமாருக்குப் பல்லக்கு பந்தலை விட்டுப் புறப்பட்டது. முதலில் வாத்தியக்காரர்கள் பாண்டு வாசித்துக்கொண்டு சென்றார்கள். அவர்களைச் சுற்றித் தான் சூத்திரக் கூட்டம் அதிகம். அதற்குப் பின், வாணவேடிக்கையும் அதைப் பார்த்துக்கொண்டு செல்லும் கூட்டமும்; அடுத்தாற்போல் பெரிய மேளமும், அதைக்கேட்டு அடிக்கடி தங்கள் தலையை ஆட்டி மெச்சும் சங்கீத சிகாமணிகள் 'கோஷ்டியும்; பின்பு சின்ன மேளம்; இங்கே தான் ஜன நெருக்கம் அதிகம். முதல் இரண்டு மூன்று வரிசைகளுக்குப் பின் இருப்பவர்களுக்கு சதுர் கண்ணுக்குத் தெரியாதென்றாலும் கூட, நாலுபுறமும் ஐம்பது வரிசைகளுக்கு ஜனங்கள் சூழ்ந்துகொண்டு, ஒருவர்மேலொருவர் விழுந்து இடித்துத்தள்ளி எட்டிப்பார்த்துக்கொண் டிருந்தார்கள். இந்தக் கூட்டத்துக்குப்பின், விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்ட பூம் பல்லக்கை, பதினாறு போகிகள் மெதுவாய்த் தூக்கிக்கொண்டு வந்தார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் எதிராக இரண்டு நாற்காலிகளின் மேல் பல்லக்கில் வீற்றிருந்தார்கள். மாப்பிள்ளையின் சௌகரியத்தை உத்தேசித்து, மகாதேவையர், வேண்டுமென்றே நாற்காலிகள் போட்டிருந்தார். சேஷு, வெல்வெட் பட்டில் சரிகை வைத்துத் தைத்த கால்சட்டையும் கோட்டும் தரித்து, சரிகையினால் பூவேலை செய்யப்பட்ட ஒரு குல்லா அணிந்து, அது போலவே விலையுயர்ந்த பட்டு ஜோடுகளையும் போட்டுக்கொண்டு, மணமகனாக விளங்கினான். பல்லக்குக்குப்பின், பல வர்ணப் பட்டாடைகள் உடுத்து, இரவலும் சொந்தமுமான எத்தனையோ நகைகளை அணிந்துகொண்டு, ஸ்திரீகள் சிரித்துப் பேசிக்கொண்டு சென்றார்கள். கடைசியில் மூன்று கூடில்லாத வண்டிகளின் மேல் மூவர் நின்று, இப்பெரு முழக்கத்தையும் ஊடுருவிச் சென்று தொனிக்கும்

படி நகரா அடித்துக்கொண்டிருந்தார்கள். தீவர்த்திகள் இத்தனைதான் என்று கணக்கிட முடியவில்லை; நாலு தீவர்த்திகளுக்கு ஒருத்தன் எண்ணெய் விடுபவன். தேர்க் கூட்டம் திருநாள் கூட்டம் போன்ற இந்த ஜனத்திரளில், ஒவ்வொருவரும் மூன்று நான்கு முறை சந்தனம் பூசிக் கொண்டிருந்தார்கள். வெற்றிலை மெல்லாத வாய் கிடையாது.

மகாதேவையர், பல்லக்கில் நாற்காலிகள் போட்டதால், மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் அதிக சௌகரியமாயிருந்ததும் தவிர, வழக்கமாய்க் கூட ஏறும் இரண்டொரு குழந்தைகளுக்கும் அதில் இடமில்லாமற் போயிற்று. ஆகவே, தம்பதிகள் பல்லக்கில் தனித்து வீற்றிருந்தார்கள்; சுற்றிலுமுள்ள பெருங் கூட்டத்தில் யாரும் அவர்களை ஒரு சிறிதுங் கவனிக்கவில்லை. கூச்சத்தினுலும், அநேகமாய் எப்பொழுதும் அவள் தன் பக்கத்திலேயே யிருந்ததினுலும், சேஷு, இதுவரை, தன் மனைவியின் அழகை நேரெதிராக உற்று நோக்கவில்லை. தான் எண்ணி யிருந்ததைவிட, அவள், கறுப்பாயும் சற்று இரட்டை நாடியா யிருப்பதாயுமட்டும், அவன் பார்த்திருந்தான்; ஆனுல் அவன், அவளை நன்ருய்க் கவனித்துநோக்கவில்லை. இப்பொழுதோ, அவள் அவனெதிரில் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, சற்று நேரத்திற்கொரு முறை அவனை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். நகைகளும், புடைவையும், அவள் சரீரத்தை முழுதும் மறைத்த போதிலும், கிட்டவிருந்து, அவளை நன்ருய், சாவகாசமாய்ப் பார்க்க, இப்பொழுது தான் அவனுக்குச் சமயம் கிடைத்தது. எல்லோரும், மேளத்தையும் வாண வேடிக்கைகளையும் வாத்திய கோஷத்தையும் சதுரையும் கவனித்துக்கொண்டிருந்தார்களே யொழிய, பல்லக்கிலிருக்கும் தம்பதிகளை யாரும் அணுகவில்லை; ஆகவே, தன் வாழ்க்கைத் துணைவியின் சாயலையும், ரூபலாவண்யத்தையும், சேஷு உற்றுப்பார்த்தான். அவள் வயதுக்கு

அவள் அதிகம் தடித்தவள்; அவள் அணிந்திருந்த நகைகளும், வைரங்களும், பல்லக்கைச் சுற்றிலும் தொங்க விட்டிருந்த மெழுகுவர்த்தி விளக்குகளுமாகச் சேர்ந்து அவள் நிறத்தை, மைக்கறுப்பாய்க் காட்டின. அவளுக்கு நெற்றி மிகவும் சுருங்கி யிருந்தது. தடித்த மோவாயும், அகலமான வாயும், அப்பக் கன்னங்களும் உடையவள்; அவள் கீழுதடு அதிகப் பருமனுயும், வாயைச் சரியாக மூடாமல் அவளது பெரிய பல்வரிசைகளைக்காட்டிச் சிறிது கீழே தொங்கிக்கொண்டு மிருந்தது. சில நிமிஷங்கள் வரை சேஷு அவளை உற்றுநோக்கவே, அவனைச்சுற்றிலு முள்ள குழப்பத்திலும் அவன் மனக்குழப்பம் அதிகமாயிற்று; அவனுக்கு வெறுப்பும் மனக்கசப்பும் பொறுக்க முடியவில்லை. அவன் ஒருநாளும் தன் மனைவி இவ்வளவு விகாரமா யிருப்பாளென்று நினைத்ததே யில்லை. சிவப்பாயும் மெல்லியவளாயு மிருந்த தின்னூர்ப்பெண், கட்டழகி யில்லாவிட்டாலும், இப்பொழுது அவனெதிரிவிருந்த திலோத்தமையை யுத்தேசித்து, தெய்வப்பெண் என்றே சொல்லவேண்டும்; அவள் முகத்தில் விளங்கிய விவேகக்களை இப்பொழுது தன் நாயகியின் முகத்தில் காணும் ஜடத்தன்மைக்கு நேர் விரோதமாயிருந்தது. எல்லாரும் தன்னை வேண்டுமென்றே இவ்வாறு மோசம் செய்து விட்டதாக அவன் எண்ணி, அதிகக் கோபம் கொண்டான். அவன் மாமனுர் போட்ட தங்கக்காப்பு, வழக்க மில்லாததால் அவனுக்குக் கை கனத்ததை, தன் வாழ் நாள் முழுதும் இப்படிப்பட்ட துணைவியுடன் பயனிலதாய்க் கழிக்கும்படித் தான் அடிமைபோல் விற்கப்பட்டதற்கு அறிகுறியான விலங்குகள் என்று நினைத்துக் கசந்துகொண்டான். தவிரவும், கலியாண முதல் நாளிரவு தொட்டு, அவனைச் சஞ்சலப்படுத்த, மற்றொரு விஷயமும் சேர்ந்துகொண்டது. அவனுக்கு அப்பொழுது தான், முதல் முதல் காதலை அறிந்து, தன்னை மறந்து அதன் வயப்பட்டொழுகக் கூடிய தேர்ச்சியில்லா இளம் பிராயம். அந்த இரண்டு தாஸிகளி லொருத்தி, பெங்களூரிலிருந்து வந்தவள், அதிக ரூபலாவண்ய முடையவள்; அவள் தன்

அழகிய கண் வலைகளை வீசும் பொழுதெல்லாம், சேஷு, மெய்மறந்து, அவளையே பார்த்துக்கொண் டிருந்தான். அவள், ஆசை நோக்குடன், ஆடிக்கொண்டும், பாடிக் கொண்டும், அவனை அடிக்கடி நெருங்கி வருவாள். அவள் நாட்டியம் ஒன்றும் அவனுக்கு அர்த்தமாகா விட்டாலும் அவள் குரலைக்கேட்கும் பொழுதெல்லாம் அவன் சொல்ல முடியாத சந்தோஷத்தையும், சஞ்சலத்தையும் அடைந் தான்; முகூர்த்தத்தன்று இரவு இரண்டு தாசிகளும் ஒரு மணி நேரம் ஆடியான பின்னர், அவன் மாமனார், அவ னிடம் ஒரு பவுனும், அவன் மனைவியிடம் ஒரு பவுனும் கொடுத்து, அதை அவர்களுக்கு இனம் கொடுக்கும்படி சொன்னார். விதிவசத்தால் தானோ, பங்களூர்த் தேவடி யாள் சேஷுவிடமும், திருவாலூராள் அவன் மனைவியிட மும் பரிசுபெற வந்தார்கள். அவனிடமிருந்து பவுனை வாங்கிக்கொள்ளும்பொழுது, அந்த தாஸியின் வலதுகை, அவன் கையில், அநாவசியமாகவே சிறிது பட்டது. அந்த ஸ்பரிசம் பட்டதும், அதுவரையும் அறியாத ஒரு புள காங்கித உணர்ச்சி, அவன் மெய்முழுதும் பரவியது; அவளோ, புன்னகையுடன் விநயமாய் வந்தனஞ் செய்து, திரும்பிப் போய்விட்டாள். போகும்பொழுதே, அவன் உள்ளத்தையும் கொள்ளைகொண்டு போய்விட்டாள். மற்ற நாளிரவுகளில், அவளைப் பார்க்கப் பார்க்க, அவனுடைய மோகம் அதிகமாயிற்று. இப்பொழுதோ, தன் வாழ்க் கைத் துணைவியின் விகார சொரூபத்தை, அவன் முதல் முதல் நன்றாய்க் கண்டவுடன், அவனுக்குப் பொறுக்க முடியாத எரிச்சல் உண்டாயிற்று. அவனுக்கு ஏதோ பித்துப் பிடித்ததுபோலும், ஆவேசம் கொண்டது போலும், இருந்தது. திடீரென்று, அவன் தன் மனைவி யைப் பார்த்து, "உங்கப்பா ஏன் நம்மைக் கலியாணம் செய்துவைத்தார்?" என்று கேட்டான்.

அவன் தன்னிடம் பேசுவானென்று அவள் எதிர் பார்க்கவில்லை. அவன் குரலைக் கேட்டுச் சுற்றிப்பார்த்த வுடன் தான், அவர்கள் தனியாயிருப்பதும், அவர்களை யாரும் கவனியாமலிருப்பதும், அவர்கள் தாராளமாய்ப் பேசிக் கொள்ளலாமென்றும் அவளுக்குத் தெரிந்தது. ஆனால், அவன் சொன்னது அவளுக்குச் சரியாய்க் காது கேட்கவில்லை; அவள் பதில், "என்ன?" என்று கேட் டாள்.

"உங்கப்பா ஏன் இந்தக் கலியாணஞ் செய்தார்?"

"ஏன், உங்களுக்குப் பிடிக்க வில்லையா?"

"பிடிக்கவா? எனக்கு இது பொறுக்க முடியவில்லை, பொறுக்கவே முடியவில்லை. இதைச் செய்துகொள்வ திலும் நான் முன்பே செத்திருந்தால் நல்லதாயிருக்கும்."

"ஆனால், நீங்கள் ஏன் சம்மதித்தீர்கள்?"

"நான் சம்மதிக்கவே யில்லை. என்னைப் பலாத்காரப் படுத்தி விற்றுவிட்டார்கள். என் சரீரமும் புத்தியும் என்னுடைய தல்ல."

அவள் பயந்து நடுநடுங்கி, சிறிதுநேரம் ஒன்றும் பேசாமல் இருந்தாள். பின்பு அவள், "உங்களுக்கு என் னைப் பிடிக்கவில்லையா, அல்லது சீர் போதாது என்று சொல்கிறீர்களா?" என்று கேட்டாள்.

சேஷு, கோபக்குரலுடன், "சீர் நாசமாய்ப் போகட் டும்! என் சுயேச்சையையும் சந்தோஷத்தையும் விற்ற பின்பு, இந்தப்பாழான சீர் யாருக்கு வேண்டியிருக்கிறது? எனக்கு உன்னைப் பிடிக்கவேயில்லை; அதோ ஆடுகிறாளே, அந்தத் தேவடியாளைக் கலியாணஞ் செய்துகொண்டால், எனக்குப் பிடித்திருக்கும்" என்று சொன்னான்.

பாவம்! அந்த மணமகள் கண்களில் நீர் ததும்பிச் சில துளிகள் அவள் கன்னங்களின்மேல் விழுந்தன. அவ ளுடைய சகல சுகதுக்கங்களுக்கும் உரிய எஜமானனை

அவள் கணவன், அவள் அழுவதைக் கூட கவனியாமல், தூரத்தில் ஆடும் தாஸியையே உற்று நோக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன், அவள் குழந்தை மனது பயந்து திடுக்கிட்டது. சிறிது நேரம் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்; அவளுக்குத் துக்கம் அடக்க முடியவில்லை. நெஞ்சடைத்த குரலில், "இப்படிப் பேசாதேயுங்கள், அவளைப் பாராதேயுங்கள், என்னைத் திரும்பிப் பாருங்கள்," என்று, அவள் சொன்னாள்.

சொப்பனத்தி லிருந்து விழிப்பவன்போல், சேஷு, அவளைத் திரும்பிப் பார்த்தான். சில நிமிஷங்களுக் கப்புறந்தான், தான் இவ்வாறு அவளிடம் பேசியது எவ்வளவு முட்டாள்தன மென்று அவனுக்குத் தெரியவந்தது.

அவன், வருத்தத்துடன், "உன்மேல் குற்றமில்லை; என்னைப்போலவே உன்னையும் பலியிட் டிருக்கிறார்கள். என்னைவிட நல்லவர்கள் எத்தனையோ பெயர்கள், இவ்வளவு சீருடனும் விமரிசையுடனும் உன்னைக் கலியாணஞ்செய்து கொள்வதில் ஆசைப்பட்டுச் சந்தோஷப் படக்கூடியவர்கள், இருக்கவே இருக்கிறார்கள்; ஆனால், இப்படிச் செய்வது பிசகு, இனித் திருத்த முடியாத பிசகு; துளி கூட யோசனை யில்லாமல், சிறு வயதிலேயே, இரண்டு பெயர்களுக்கும் இனி ஆயுள் முழுவதும் சந்தோஷமே இல்லாம லிருக்கும்படிச் செய்வது, மஹா பாபந்தான்," என்றான்.

அவளுக்கு அவன் சொன்னது அர்த்தமாக வில்லை. தனக்கு விளங்கச் சொல்லும்படி, அவள் அவனை வேண்டிக்கொண்டாள். அதற்கு அவன் ஒன்றும் பதிற்சொல்லவில்லை. பட்டணப் பிரவேசம் முடிந்து விடியற்காலம் வீட்டுக்கு வரும் வரை, அவன் தன் விதி வசத்தை நொந்துகொண்டும், தாஸியிடம் தனக்குண்டான மோகத்தை நினைத்து மதிமயங்கியும், மௌனமாய் மனங் கசந்து வீற்றிருந்தான்.



## 19. குகைச் சாமியார்.

குன்றின் பக்கத்தில் இருந்தமையால் அவ்வூருக்கு மலைப்பாளையம் என்று பெயர். அவ்வூர் வாசிகள், தாயாதிகளும் பரம்பரை விரோதிகளுமான தொண்டைமண்டல முதலியார் வகுப்பைச் சேர்ந்த இரண்டு குடும்பத்தாரும், அவர்கள் உட்குடிகளுமே. மலை மிகப் பெரிதல்ல; எலியூரிலே பூனை ராஜா என்பதுபோல, எங்கும் சமதலமான அப்பிரதேசத்திலே, அச்சிறிய பொற்றை, மலையென்னும் பெயரால் வழங்கப்பட்டு வந்தது. அதில் ஒரு குகையுண்டு. அக்குகையின் அந்தத்தை யாரும் கண்டதில்லை. ஐங்காதவழிக் கப்பாலுள்ள செங்கூருக்கு, அக்குகை வழியே சுரங்கப்பாதை யுண்டென்று சொல்வார் சிலர். மலைப்பாளயத்தில் வாழும் மூத்தோர் அறிந்தமட்டில், சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்வரை, நெற்பயிரையும் கொடிக்காற் பயிர்களையும் அழிக்கும் காட்டுப் பன்றிகளையும், வேறு சில்லரை மிருகங்களையும் தவிர்த்து, அக்குன்றில் விசேஷம் ஒன்றுமில்லை. பதினைந்து வருஷத்துக்கு முன்னர் திடீரென்று ஒருநாள், பெரியவர் ஒருவர், கம்பீரமான தோற்றமும் முகமலர்ச்சியு முடையவர், அக்குன்றிலுள்ள குகைக்கு வந்து, அதில் வசிக்கலானார். அவர் எங்கிருந்து வந்தனர் என்பதும், அவரது பூர்வ விருந்தாந்தமும் எவருக்கும் தெரியாது. அவர், தம்மொடு ஒரு சிறு பெண் குழந்தையையும் கொண்டுவந்திருந்தார். அவர் வந்தது முதல் அக்குகை ஒரு பூசை மடமாக, நாளாவட்டத்தில், குகைச் சாமியாரின் பேரும் பெருமையும் அந்தப் பிராந்திய மெங்கும் பரவலாயின. சாமியாரை "ஐயா!" என்றழைக்கும் அப்பெண்ணும், அவர் கியாதியுடன் வளர்ந்தேறி, இப்பொழுது ஓர் அழகிய யுவதியாயிருந்தாள். அவளே அவருக்குச் சகல பணிவிடைகளும்

செய்து வந்தாள். அவர் குகை மடத்தில், வெள்ளிக்கிழமை ஒரு தினமட்டும், வாரந்தோறும் அந்நியர் உட்சென்று சுவாமி தரிசனம் செய்யலாம். வெள்ளிதோறும், குன்றின் சிகரத்திலுள்ள ஒரு மரத்தின் உச்சியின்மீது, ஒரு மஞ்சள் கொடிபறக்கும். அன்று சுற்றூர்களிலிருந்தும், தூரப் பிரதேசங்களிலிருந்தும் கூட, திரளான ஜனங்கள், நடந்தும் வண்டிகளிலும், சுவாமி தரிசனஞ் செய்யக் குகைக்கு வருவார்கள். குகைக்குள் கோயில் கிடையாது. குகைச் சுவரில் தோண்டப்பட்டுள்ள ஒரு புழையில், மூடப்பட்ட ஒரு சிறு பித்தளைப் பெட்டி வைத்திருந்தது. அதற்குத் தான் பூசையெல்லாம். அதைத் திறக்க யாரும் கண்டிலர்; அதற்குள் இருப்பதென்னென்று எவரும் அறியார். சந்தனம் குங்குமம் புஷ்பங்களால் அலங்கரிக்கப் பெற்ற அப்பெட்டியை, ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து, தரிசித்து வணங்கிச் சென்றனர். குகைச் சாமியாரின் அபார சக்திகளெல்லாம் அடங்கி யிருப்பது அப் பெட்டியில்தான் என்பது, பொது நம்பிக்கை. அவர் சக்திகள் இன்ன இன்ன வென்பதும் எவர்க்கும் தெரியாது. சிலர், தன் தலையில் ஒப்புயர்வற்றதோர் இரத்தினத்தை யுடைய சர்ப்பமொன்று, அப்பெட்டிக்குள் இருப்பதாகக் கூறினர்; அது சீறும் சத்தத்தைத் தாம் கேட்டுள்ளதாகவும் சிலர் கூறினர்; வேறுசிலர், மகா பலமுள்ள துஷ்ட தேவதையொன்று, ஆணோ பெண்ணோ நிச்சயமில்லை, சாமியாரின் மந்திர சக்தியினால், அப்பெட்டிக்குள் அடைபட்டிருப்பதாயும், பெட்டியைத் திறந்தால் சாமியாரை அது கொன்று விடுமென்றும் நம்பினர். அப்பெட்டியின் உள்ளுறையைப் பற்றிப் பலர் பலவாறு நம்பி வாதாடுவ துண்டு; உட்பொருள் எதுவாயினும், அப்பெட்டி சர்வவலிமையுள்ளது, யாவராலும் பக்தியுடன் வணங்கத் தக்கது, அபார வர சக்தி யுடையது, என்பதைப்பற்றி எவரும் சந்தேகிக்க வில்லை. சாமியார் குகைக்கு முதல் முதல் வந்தபொழுது, முன் கூறிய பெண் சிசுவையும் அப் பெட்டியையும் தவிர

வேறொன்றும் அவர் கொணர்ந்திலர்; ஆயினும் அதி சீக்கிரத்தில், பால், பழங்கள் தின்பண்டங்கள் முதலியனவும், ஆடை ஆபரணங்களும் ஏராளமாக வரத்தொடங்கி, ஊர் விளையினும் காயினும், சாமியாருக்கு ஒருநாளும் எவ்விதத் தாழ்வுமே நேரவில்லை. யார் என்ன கேள்வி கேட்கினும், அவர் அதிகம் பேசுவதில்லை; தனக்கு விடைகூற இஷ்டமில்லாத பொழுதெல்லாம், சுமுகத்துடன் புன்னகை செய்வார். அவர் போஜனத்தைக் குறித்தும் பலர் பலவிதமாகக் கூறினர்; தினம் மூன்று பச்சிலைமட்டுமே அருந்துவர் என்று சிலரும்; நள்ளிரவில் ஒரு வாழைப்பழமும் சிறங்கை பாலுமே உண்பரென்று சிலரும் சொல்லுவதுண்டு. கல்விப்பயிற்சியிலும் செல்வத்திலும் செழித்த கனவான் ஒருவர் ஒருமுறை தாம் ஐந்நூறு சிறுமலைப் பழம் தருவித்திருந்ததாகவும், குகைச் சாமியாரைச் சில பழங்கள் உண்ணும்படி மன்றாடி வேண்டியதாகவும், அவர், அதன்மேல், ஐந்நூறு பழங்களையும் உடனே தின்றுவிட்டுப் பின்னும் பழங்கள் வேண்டவே, தாம் அவர் பாதங்களில் விழுந்து மன்னிப்பு வேண்டியதாகவும், கூறினர். மற்றொரு கனவான், முன்னவரினும் அதிகம் படித்தவர், தம் வீட்டில் பிக்ஷை செய்யும்படி சாமியாரை ஒருமுறை பிரார்த்தித்த தாகவும், சுமார் பதினைந்து பேர்களுக்குச் சமைத்து வைத்திருந்த சாதம், கறிகள், பக்ஷணங்கள் முதலிய விருந்தனைத்தையும் சாமியார் ஒருவரே புசித்து விட்டதாகவும் உரைத்தனர். பித்தளைப் பெட்டியின் உள்ளடக்கத்தைப் பற்றிய விருத்தாந்தங்கள் பேதப்பட்டவாறே, சாமியாரின் சிரண சக்தியைப் பற்றிய செய்திகளும் பலவாறு மாறுபட்டன. ஆயின் அந்தப் பெண்மட்டும், மற்றப் பெண்களைப் போலவே உண்டு, உடுத்து, உறங்கி வளர்ந்து வந்தாள். சாமியாரின் பக்தர்களின் சிரத்தையினால், ஆகாரம், ஆடை, ஆபரணங்கள் எதிலும், அவள், எப்பொழுதும் எவ்விதக் குறைவையும் உணரவே யில்லை.

நோய், வயோதிகம், அங்கக்குறை, பொறிக்குறை முதலிய காரணங்களால், மெய்யாகவே பிறர் உதவிக்குப்

பாத்திரமான துர்ப்பாக்கியர்களுக்கும், வரி தண்டுவோர் போல விடாது அலட்டி வலிந்து கொள்ள முயலும் தடியர்களுக்குமே பிச்சை யிடாதார் பலர், அறியாமை, மூடபக்தி, பேராசை முதலிய காரணங்களால், 'தேகி' என்று கேளாமலும், கொடுத்தாலும் மறுத்தும், கொடுப்போரை அவமதித்தும், பலவிதமாக ஆச்சரியப்படத்தக்க வண்ணம் நடந்துகொள்ளும் சாமியார் வகுப்பினர்க்கு, வலியக் கொண்டுபோய்க் கொடுத்து, அவமானத்தைப் பாராட்டாமே எப்படியாவது அவர்களைத் திருப்திசெய்வித்து, அவர்கள் தயவைச் சம்பாதிக்க முயலுவதை, நாம் பலவிடங்களிலும் காணலாம். குகைச் சாமியார், பிறரை இகழ்ந்து விரட்டுவதில்லை; பக்தர்கள் உதவும் பொருள்களில், தம் சொற்பத் தேவைகளுக்குப் போக மிகுந்தவற்றை எல்லாம், அன்ன தானத்திலேயே செலவிடுவார். அவர் மௌன விரதியும் இல்லை. ஆயின், அதிகம் பேசுவது வழக்கமில்லை. தன் குலம், குடும்பம், பூர்வாச்சிரமம் முதலியவற்றைக்குறித்து, எப்பொழுதும் யாரிடத்தும் அவர் பேசினதே யில்லை. தனக்கு அபாரயோக சக்திகள் உண்டென்று கூறுவதில்லை. அப்படி வேறு யாராவது சொன்னால் மறுப்பது மில்லை. சில வேளைகளில், நோயால் வருந்தும் சிலருக்கு, கைகண்ட மூலிகைகள் உதவினதுண்டு. அவரது தொண்டர்களில் வயது மூத்தகனவர்ன்களான இரண்டொருத்தர், "அன்பு" என்ற பேரினாலேயே அழைக்கப்படும் அப்பெண், விவாகத்துக்குத் தக்க பருவம் அடைந்து விட்டதைப்பற்றி அவரிடம் பிரஸ்தாபிக்க, அவர் முகம் சிறிது கவலையைக் குறிப்பதைத் தவிர, அவர் ஒன்றும் பதில் உரைத்திலர். இவ்வாறாக, 'அன்பு' என்னும் பெண்மணியுடனும், பித்தளைப் பெட்டியுடனும், வெகு கௌரவமாக வாழ்ந்து வந்தார் குகைச்சாமியார்.

தைமாதம் முதல் வெள்ளிக்கிழமை யன்று, அதிகாலை முதல் பல ஜனங்கள் வந்து கூடினர். பக்கத்திலுள்ள சுனையில் நீராடி, மர நீழல்களில் உலைவைத்துச் சமைக்க

லாயினர். குகை மடத்துக்குள் பூசைநடக்கப் பகல் இரண்டு மணியாகும். அதற்குள் சமைத்து வைத்திருந்து, பூசையானவுடன் தரிசனஞ் செய்துவிட்டு ஊண்கழித்து, தத்தம் ஊர்களுக்குத் திரும்புவது வழக்கம். ஏழைகள், பூசைக்குப் பின் சாமியார் உதவும் ஊணையே உண்பார்கள். பக்கத்தூர்களிலிருந்து வருவோர், நண்பகலுக்குப்பின் பூசை சமயத்துக்கே வருவது வழக்கம். சுமார் ஒரு மணிக்கு, குகை மடத்து மணி அடிக்கப்பட்டது. உடனே ஜனங்கள் உள்ளே சென்ருர்கள். குகையின் முன்பு ஒரு திறந்த வெளியுண்டு. அதில் இருநூறு ஜனங்கள் வரை வெளியில் நின்று, சாமியார் செய்யும் பூசையை, கூப்பிய கரங்களுடன் பார்த்துக்கொண் டிருந்தனர். குகையின் கற்சுவரிலுள்ள புழைக்குள், குங்கும சந்தன புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட பெட்டகம் வைக்கப்பட்டிருந்தது. அதன் இருபுறமும் இரண்டு நெய் விளக்குக்கள் எரிந்துகொண்டிருந்தன. பெட்டகத்தின்மேல் ஒரு சிறு வெள்ளி வேலாயுதம் சாத்தப்பட் டிருந்தது. குகைச் சாமியாருக்கு ஐம்பது வயதிருக்கலாம்; ஆயினும், ஒரு ரோமம் கூட இன்னும் நரைக்க வில்லை; பாலியத்தில் அவர் வெகு திடகாத்திரராகவே இருந்திருக்க வேண்டுமென்று தோற்றுகிறது. அங்கமெங்கும் திரு நீறணிந்து, அரையில் ஒரு சிறு காவி வஸ்திரமட்டும் தரித்திருக்கிருர்: தலை மயிர் சடை சடையாகத் தொங்குகிறது. அப்பெட்டியின் முன்பாக, ஒரு புலித்தோலின் மேல் வீற்றிருந்து, கண்மூடி, உதடுகள் மட்டும் மெதுவாய் அசைய, தியானஞ்செய்துகொண்டிருக்கிருர். அவர் ஒரு பொழுதும் வாய்விட்டு ஸ்தோத்தரிப்பதில்லை. 'அன்பு' பக்கத்தில் நின்று, தூபாராதனை தீபாராதனை முதலிய உபசாரங்களுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துதவ, சாமியார், பூசையை நடத்துகிருர். இவ்வாறு இரண்டு நாழிகைப் பொழுது, மணியோசையைத் தவிர மற்ருேசையின்றிப், பூசை நடக்கிறது. முடிவில் கற்பூர ஆரத்தி செய்யும்பொழுது மட்டும், ஜனங்

கள் எல்லாம் வாயார முருகக்கடவுளைப் பலவாறு புகழ்ந்து, கரங்களை உச்சிமேல் தூக்கி, முழக்கஞ் செய்கிறார்கள். பின்பு, ஒவ்வொருவராய்ச் சாமியாரை அணுகி, அவர் ஆசீர்வாதத்தையும் பிரசாதத்தையும் பெறுகின்றனர். இப்பொழுதுதான் சிலர் தமது வேண்டுகோள்களையும் குறைப்பாடுகளையும் தெரிவித்துக்கொள்கின்றனர். சிறிது விபூதி, ஒரு பழம், ஒரு மூடிதேங்காய், ஒரு புஷ்பம், வில்வதளம், ஏதாவது கைக்கு அகப்பட்டதைச் சாமியார் பிரசாதமாக உதவுகிறார். யார் என்ன வேண்டினும், கூறினும், புன்னகையைத் தவிர வேறு விடை யளிப்பது அரிது. சில வேளைகளில், "கடவுள் அருளுவார்," அல்லது, "முருகன் கேட்கும்," அல்லது, "ஸ்வாமி இருக்கிறார்," என்று பதில் உரைக்கிறார். அதன் பின் கூட்டம் கலைந்து, ஜனங்கள் சீக்கிரமாகப் புசித்துவிட்டுத், தத்தம் ஊர்களுக்குப் புறப்பட்டு விடுவது வழக்கம்.

நாம் மேலே குறிப்பிட்ட தை வெள்ளிக்கிழமை யன்று, பூசை முடிந்தவுடன், திடீரென்று, சாமியாருக்கு உடம்பு அசௌக்கியப்படவே, அவர் யாவரையும் சீக்கிரம் வெளியே போகும்படி சொன்னார். பலர் பலவாறு அநுதாபப்பட்டு உதவிசெய்ய முயன்றும், அவர் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாமல் தம்மைத் தனியே விட்டுப்போகும்படி வேண்டினவராக, யாவரும் மனக்கவலையுடன் குகைக்கு வெளியே வந்து, தத்தம் இருப்பிடம் சென்றனர். யாவரும் வெளியேறிய பின்பு, சாமியார், தாம் வழக்கமாய் இளைப்பாறும் கல்லின்மேற் சாய்ந்துகொண்டு, 'அன்பு' வைத் தம் அருகே இருக்கச்சொன்னார். அவள் மனம் பதைத்து, களைப்பாற்றும்படி பாலும் பழமும் கொணர்ந்ததையும் மறுத்து விட்டு, பக்கத்தில் உட்காரச் சொல்ல, அவளும் அப்படியே உட்கார்ந்தாள். தன் மனத்தில் உள்ளதை உள்ளபடி, தன் தாயொருத்தி இருந்தால் அவளிடத்தில் சொல்வதுபோலத் தம்மிடத்தில்சொல்லவேண்டு

மென்று அவர் முதலிற் கூறியது, அவள் மனப்பதற்றத்தை அதிகரிக்கவே செய்தது. பின்பு இச்சம்பாஷணை நடந்தது :—

சாமியார் :—அன்பு! உனக்கு, சண்முகத்தை அதிகம் பிடித்திருக்கிறதா, சுந்தரத்தை அதிகம் பிடித்திருக்கிறதா?

அன்பு, "அண்ணன் சண்முகத்தைத்தான்" என்று சொல்லிவிட்டு, நாணித் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

சாமியார் :—நானும் அப்படித்தான் நினைத்தேன்.

அன்பு :—சுந்தர அண்ணன் சில வேளைகளில் என்னை வெறித்துப் பார்க்கும்பொழுது, எனக்குப் பயமாயிருக்கிறது. அவர் அவ்வளவு சாதாரணமாய் இருக்கிறதில்லை. ஏன் கேட்கிறீர்கள், ஐயா?

சாமி :—ஆனால், சண்முகத்தைத்தான் உனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது. அவனுக்கு வாழ்க்கைப்படவே உனக்குப் பிரியம் என்பது, நிச்சயந்தானா?

அன்பு :—வாழ்க்கைப்படவா?

இது வரையும் சகோதரபாவமாக அவர்களைப்பற்றி நினைத்திருந்தாளே அன்றி, அன்பு, வேறுவிதமாக நினைத்திலள். ஆகவே, இப்பொழுது சண்முகத்துக்கு வாழ்க்கைப்படுகிறதென்று கேட்டவுடன், அவள் மனம் பூரித்து, முகத்தில் ஒரு வித நாணத்தையும் சந்தோஷத்தையும் வெளியிட்டது. "அதுதான் சரி; இவன்தான் அவளைச் சுனையில் முழுகிப்போகாமல் காப்பாற்றினன், விஷக்காய்ச்சல் வந்தபொழுதும் இடைவிடாது பேணி ரக்ஷித்தான். இது கிரமம்தான். இதுதான் சரி. ஆனால் இவன் ஏழை; அவனோ பணக்காரன்; துஷ்டன்; துணிந்தவன்" என்று, சாமியார் தமக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டார். "யார் பணக்காரன்? துஷ்டன்; துணிந்தவன்; என்ன சொல்கிறீர்கள், ஐயா?" என்று, அன்பு வினவினள்.

அன்புவின் கேள்வியைக் கவனிக்காமல், சாமியார்: "இவளைத் தனக்குக் கட்டிக்கொடுக்கும்படி அவன் என்னைப் பலமுறை கேட்டுமிருக்கிறான். ஆனால் அவன் முட்டாள். எனக்கு ரஸவாதம் தெரியும், தனக்கு அதைக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்பது, அவன் எண்ணம்; பண ஆசையே ஒழிய, பெண் ஆசை அவ்வளவில்லை; அவன் குணத்தை அறிவேன்; 'பணம்' 'பணம்' என்று பதைக்கிறது அவன் மனது," என்று முன்போல் சொல்லிக் கொண்டார்.

"என்ன சொல்கிறீர்கள், ஐயா? எதைப்பற்றிப் பேசுகிறீர்கள்?" என்று, அன்பு, பயந்தகுரலில் கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அன்பு; நீ யொன்றும் கவலைப்படவேண்டியதில்லை; ஏழையாயினும், சண்முகம் யோக்கியன். அவனையே நீ மணம் புரியலாம்." என்றார் சாமியார்.

அன்பு:—அண்ணன் சண்முகம மேல்சாதியாயிற்றே? தொண்டமண்டல முதலியார் குலம் ஆயிற்றே?

சாமி:—நாம் என்ன பறையரென்று நினைத்திருக்கிறாயா, அன்பு? நாமும் தொண்டமண்டல முதலிகளே; அவர்களுக்கு ஒருபடி மேலன்றிக் கீழில்லை. யார் அங்கே, போய்ப்பார், அன்பு, யார்தலையோ தெரிந்தது வாசலில்.

அன்பு எழுந்து செல்லுமுன், சண்முகம் உள்ளே வந்து, சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்தான். அவனுக்கு இருபது வயதிருக்கலாம். லக்ஷணமுள்ள புருஷன். அவன் எழுந்தவுடன்: "ஸ்வாமிகளுக்கு உடம்பு ஒருபடியா யிருக்கையில் என்னால் வீட்டுக்குப்போக முடியவில்லை. ஸ்வாமிகள் உத்தரவுப்படி நடக்க மனது ஒட்டவில்லை. அதனால் திரும்பிவந்து விட்டேன். ஸ்வாமிகள் பொறுத்தருளவேண்டும்" என்று, கைகூப்பி விநயமாய்ச் சொன்னான்.

சாமி:—நல்லது, மகனே, உட்காரு.

சண்முகம் :—(கீழே இருந்துகொண்டு) இப்பொழுது ஸ்வாமிகள் உடம்பு எப்படியிருக்கிறது ?

சாமி :—உடம்பு சரியாயில்லை ; இப்பொழுதே உன்னைப்பற்றி நினைத்தேன். நீ எழுந்திருக்க வேண்டாம் ; நீ இரு ; எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. நான் கேட்பதற்குமட்டும் பதில் சொல் : உனக்கு அன்புவின்மேல் காதலுண்டா ? அவளும் உன் சாதியே ; நீ அவளை மணஞ்செய்து கொண்டு, பேணிக் காப்பாற்றுவையா ? நீ யோக்கியன் ; பொய் சொல்வதில்லை ; நான் அறிவேன். அப்படியே இப்பொழுதும் சத்தியமாய்ப் பதிற் சொல்.

சண்முகம் :—அவள் இங்கே வந்தது முதல் நானும் அவளும் தோழர்களே ; நான் அவள்மேல் அளவில்லாத காதல்கொண் டிருக்கிறேன். என் காதல் என் மனத்தில் எவ்வளவு வேரூன்றி யிருக்கிறதெனில், நான் குலத்தையேனும் மற்றெதையேனும் பெரிதாக மதிக்கவில்லை. ஸ்வாமிகள் எனக்கு அவளைக்கொடுத்தால், என் உயிருள்ள வரையும், கண்ணுள் மணிபோல அவளை நேசித்துப் பேணிக் காப்பாற்றுவேன். இது சத்தியமே.

அன்பு இதைக் கேட்டவுடன், அடக்க முடியாத மனமகிழ்ச்சியினால் ஆனந்த பாஷ்பம் சொரியலானாள்.

சாமி :—உன் குடும்பத்தார் எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்களா ?

சண்முகம் :—என் ஏழைக் குடும்பத்தில் இப்பொழுது நான்தான் பெரியவன். என்தாய் ஒருபொழுதும் தடுக்கமாட்டாள். மற்றெவரையும் நான் பாராட்டவில்லை நான் பரம ஏழை ; எங்கள் பூர்வ சொத்தெல்லாம் போய் விட்டது ; என் பங்காளி சுந்தர முதலியார் பெரிய பணக்காரர் ஆயினும், எனக்குக் கடவுள் அருளிய கையும் காலும் தேக ஆரோக்கியமும் உள்ளவரை, அன்புவுக்கு ஒரு குறைவும் இன்றி, நான் அவளைப் பேணுவேன் ; என்னால் ஏலாததை என் அன்பினால் நிரப்புவேன்.

சாமி :—போதும் ; என் மனம் திருப்தியாய்விட்டது. சண்முகம்! அன்புவும் உன்மேல் காதல் கொண்டிருக்கிருள். ஒரு வேளை உங்கள் பரஸ்பர வாஞ்சை உங்களுக்குள் தெரிந்திருக்கலாம். முருகக் கடவுள் அருளினல் நீங்கள் இருவரும் சந்தோஷமாய் நீடூழி வாழ்வீர்களாக!

சண்முகம் :—எல்லாம் ஸ்வாமிகள் கிருபையும் ஆசீர்வாதமுமே.

சாமி :—ஆயினும், நீங்கள் இருவரும் இப்பொழுது நான் சொல்லும் விருத்தாந்தத்தைக் கவனமாய்க் கேட்க வேண்டும். என் காலம் நெருங்கிவிட்டது ; அதனல் சுருக்கிச் சொல்லுகிறேன். சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்—நீங்கள் ஒருவரும் அப்பொழுது பிறக்கவேயில்லை—காஞ்சிபுரத்துக் கடுத்த ஒரு கிராமத்தில், உன்னையும் சுந்தரத்தையும்போல, தாயாதிகள் இருவர் யௌவன புருஷர் இருந்தார்கள். அவர்கள் பந்து ஒருவருக்கு மகாரூபவதியும் குணவதியுமான ஒரு மகள் இருந்தாள். அவள் தந்தை ஏழை ; ஆயினும் அவள் தாய் செல்வவான் வீட்டிற் பிறந்தவள் ; சாகும்பொழுது தன் விலையுயர்ந்த ஆபரணங்களைத் தன் மகளுக்கென்று விட்டுப்போனுள். அப் பங்காளிகள் இருவரும், ஒருவன் உண்மைக் காதலினலும், மற்றவன் நகையின்மே லாசை கொண்டும், அப் பெண்ணை மணஞ்செய்ய விரும்பினர். அவர்களுக்குள் அதனல் சண்டை விளைந்து, கிரிமினல் கேஸ் நடந்து, இருவரும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். காதல் கொண்டவனுக்கு நாலு வருஷமும், மற்றவனுக்கு ஒன்பதுமாத காலமும் சிறை விதிக்கப்பட்டது. காதல்கொண்டவன் சிறைமீண்டு வெளிவருமுன், மற்றவன் பெண்ணை மணம்புரிந்து, அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்திருந்தது. அவனுக்குக் கோபமும் தாபமும் பொறுக்க முடியவில்லை. அன்றியும், புருஷனும் மனைவியும் ஒத்துச் சந்தோஷமாக வாழவில்லை யென்றும், புருஷன் மனைவியின் நகைகளை ஒன்று ஒன்ருக விற்றுத்

தனக்குப் பணமாக்கிக் கொள்ளப் பார்க்கிறானென்றும், அவன் அறிந்தான். ஆகவே, ஒருநாளிரவு, அவன் பதுங்கி உள்சென்று, தன் எதிரியைக் குத்திக் கொன்று விட்டான். ஆனால், நான்—இல்லை, காதல் கொண்டவன், ஒரு தப்பெண்ணம் கொண்டிருந்தான்: அப் பெண்ணுக்கு ஆதி தொட்டுத் தன்மேலேயே ஆசையென்பது அவனுக் குத் தெரியும்; ஆனால் கற்பின் திண்மை இத்தன்மைய தென்று அவனுக்குத் தெரியாது. அவள் சிறந்த பதி விரதை; ஒப்பில்லாத அழகு போலவே, உயர்குணமும் தீர மும் வாய்ந்தவள்—" சாமியாருக்கு மேற்பேச முடிய வில்லை; மார்பின் இடப்புறத்தின்மேல் கையை வைத்துக் கொண்டு, பெருமூச்சு விடலானார். கதையில் ஆழ்ந்திருந்த அன்பு, அதைக் கவனிக்கவில்லை. சண்முகம் ஓடிப்போய்த் தண்ணீர் கொணர்ந்து, அவர் முகத்தில் தெளித்து, சிறிது குடிக்கவும் கொடுத்தான். பின்பு களைப்பாறி குறைக் கதையையும் அவர் மிகுவேகமாய்ச் சொல்லலானார்:—

"அவள் தன் குழந்தையையும் நகைகளையும் அவனிடம் ஒப்புவித்துக், தன் சொந்த மகள் போலவே அக்குழந்தை யைப் பேணி வளர்க்கும்படியும், நகைகளைத் தன் இஷ்டம் போலச் செய்யும்படியும், தன் மீது அவன் கொண்டுள்ள காதலின்மேல் ஆணை வைத்துக் கூறிவிட்டு, அவள் திடீ ரெனத் தன்னைக் குத்திக்கொண்டு இறந்து விட்டாள்."

இத்தறுவாயில் மற்றொருவன் உள்ளே வந்து சேர்ந்த தால் கதை சிறிது தடைப்பட்டது. வந்தவன் சண்முகத் தைக் கோபமாய் வெறித்து நோக்கி, பின்பு சாமியாரை யும் அன்புவையும், சாமியாரின் தேக சௌக்கியத்தைப் பற்றி விசாரிக்கலானான்.

சாமி:—இரு, சுந்தரம்; இருந்து குறைக்கதையை யும் கேள். இப்பொழுதுதான் உன் வரவை வேண்டி னேன். முருகக் கடவுள் உன்னை வரும்படி செய்து விட்டார்.

சுந்தரம் :—நான் முன்பே வந்தேன். ஸ்வாமிகள் கோபப்படும் என்று உள்ளே வரவில்லை. தம்பி சண் முகம் இங்கே வந்திருப்பது தெரிந்தவுடன், நானும் விரைவாய் உள்ளே வந்தேன். சுவாமிகள் ஏன் என் வரவை வேண்டினது? என் மனத்தின் முக்கிய ஆசைதான் ஸ்வாமிகளுக்குத் தெரியுமே.

சாமியார் :—தெரியும்; தெரிந்ததனுல் தான் உன் வரவை வேண்டினேன்; ஊடே பேசாமல், நான் சொல்வதை முழுதும் கேள். அன்புவைத் தான் கலியாணஞ் செய்துகொண்டு பேணிக் காப்பாற்றும்படி, இப்பொழுது தான் சண்முகத்துக்குச் சொல்லிக்கொண்டிருந்தேன்,— ஊடே பேசாதே, என்கிறேனே; நான் சொல்வதைக் கேள்: உனக்குப் பெண்டாட்டி இருக்கிருள்; நீ தனவான்; குழந்தையில்லை என்ருலும், எங்கிருந்தோ வந்த அனுதையான அன்புவை நீ மணஞ்செய்வது தகாது. முருகக் கடவுள் கிருபையினுல் உனக்கு சீக்கிரம் குழந்தை பிறக்கும்; நீ அவசரப்பட்டு வேருெரு பெண்டாட்டி கலியாணஞ் செய்துகொள்ளக் கூடாது. அன்றியும், நீ என்னிடம் உண்மையில் விரும்புவது, அன்புவை இல்லை; மற்ருென்று என்பதை நான் அறிவேன். நீ ஒரு விஷயம் ஒப்புக்கொண்டால், உன் ஆசையை என்னுலியன்ற மட்டும் திருப்தி செய்கிறேன். அன்பு! அந்தப் பெட்டியையும் வேலாயுதத்தையும் எடுத்துவா.

அன்பு :—ஐயா! நான் தொடலாமா?

சாமி :—தொடலாம்; பாதகமில்லை; முருகன் பெயரை உச்சரித்துக்கொண்டு எடுத்துவா.

அன்பு, அப்படியே, "முருகா! முருகா!" என்று சொல்லிக்கொண்டு, பித்தளைப் பெட்டியையும் வேலாயுதத்தையும் புழையினின்றும் பத்திரமாய் எடுத்துவந்து சாமியார் கையில் கொடுத்தாள்.

சாமி :—நான் வேஷக்காரனல்ல; பொய் சொல்ல மாட்டேன்; எனக்கு ரஸவாதம் தெரியாது; அதனால், சுந்தரம், உனக்கு அதைச் சொல்லிக்கொடுக்க என்னால் முடியாது. ஆயினும், இந்தப் பெட்டிக்குள் அதற்குச் சமமான ஒரு விலையுயர்ந்த பொருள் இருக்கிறது. சுந்தரம்! இந்த வேலாயுதத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, முருகக்கடவுள் மேல் ஆணை வைத்து, "நான் ஒரு நாளும் சண்முகத்தின்மேல் பகை பாராட்டுகிறதில்லை; அவனும் அன்புவும் கூடிவாழும் வாழ்க்கைக்கு நான் எவ்வித இடையூறும் இழைக்கமாட்டேன்" என்று பிரமாணஞ் செய். சாகுந்தறுவாயில் நான் இடும் ஆக்ஞை இது; அப்படிச் சத்தியம்செய்து கொடுத்தால், இந்தப் பெட்டிக்குள் இருக்கும் விலைமதிப்பற்ற திரவியமெல்லாம் உனக்கே கொடுத்துவிடுகிறேன். செய் பிரமாணம்!"

சுந்தரம் அப்படியே வேலைக் கையில் வைத்துக் கொண்டு, திகிலினால் நடுநடுங்கி, பிரமாணஞ் செய்தான்.

சாமி :—குழந்தைகளே! என் கிட்ட வாருங்கள்; நான் போகுமுன் உங்களை ஆசீர்வதிக்கட்டும். இந்தக் குகைக்குள்ளேயே என்னை அடக்கம் செய்து, என் சமாதியின்மேல் இந்த வேலாயுதத்தை நட்டு, வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடக்கட்டும்; சுந்தரம், அது உன் பொறுப்பு: அதற்கு வேண்டிய ஏற்பாட்டை நீ நியமிக்க வேண்டியது.

சுந்த :—உத்தரவுப்படி நடக்கிறேன்.

சாமி :—நான் இறந்த பிறகு, மூன்றாவதுநாள் இராத்திரியில், இந்தப் பெட்டியை நீ திறந்து பார்த்து, அதில் உள்ளதை எடுத்துக் கொள்ளலாம். குழந்தைகளே! முருகக் கடவுள் உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக! என் அன்பு! நான் போய்வருகிறேன்; ஷண்முகம்! அன்புவைப் பேணிக் காப்பாற்று! சுந்தரம்! உன் பிரதிக்கினையை மறந்து விடாதே. இதோ வருகிறேன், என்

கண்ணாட்டி, இதோ வருகிறேன்! உன் ஆணைப்படி நிறைவேற்றிவிட்டேன். முருகா!" திடீரென்று குகைச்சாமியார் எழுந்திருந்து, உடனே தேகவியோகமாகிப் பிரேதமாகக் கீழே விழுந்து விட்டார்.

இப்பொழுது அன்புவும் சண்முகமும் ஏழைகளே யெனினும், ஆனந்தமாய் வாழ்ந்து வருகின்றனர்; சுந்தர முதலியாரின் சொத்து, திடீரென்று இரட்டித்து விட்டது; குகைச்சாமியார் சாகுமுன் அவர்க்கு ரஸவாத ரகசியத்தைக் கூறிப் போனதாக ஊர்வதந்தி. குகைக்குள் சமாதி மேலுள்ள வெள்ளி வேலுக்கு, வெள்ளிக்கிழமை தோறும் ஒரு பண்டாரம் பூசை செய்கிறான். சுக்கிரவாரம் தவறாமல் தரிசனத்துக்குச் செல்பவர், அன்புவும் சண்முகமுமே.

## 20. ஆலமரத்தின் கீழே.

இந்தியாவிலே இவ்வித காட்சிகளைப் பார்க்கக் காணலாம்:—விசும்பின் மேலே, வானவர் பல்லாயிரர் தமது கண்களை நன்றாகத் திறந்து, பூமியில் நிகழும் திருவிழாவைக் கண் குளிரக் காண்பதென்னும்படி, நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்கொண் டிருந்தன; அவர்களது நேத்திரானந்தத்துக்கு இடையூறிழைக்க மேகம் ஒன்றுமே யில்லை; சிறிய விண் மீன்களின் சிற்றொளியைத் தன் பேரொளியால் அகற்றும் திங்கள் இன்னும் உதயமாகவில்லை; வானத்துக்கும் தரைக்கும் இடையே, அசைவற்ற ஓசையற்ற அமைதியும் இருளும் அவ்வமயத்துக் கிசைந்து பொலியா நின்றன. கீழே பூமியிலே, சிறந்ததோர் தேவாலயம், வெண்சுதையாலும் செம் மண்ணினாலும் பட்டை பட்டையாகத் தீற்றிப் புனையப்பட்ட பெரிய மதிற் சுவரையும்; மனிதனது சரீரமானது எழு பகுப்புடைத்து என்பதை மறவாதீ குறியாநிற்கும் எழடுக்கு மாடிகளைத் தன்னுள்

அடக்கி, சுவர்க்கத்தைச் சுட்டிக்காட்டுவது போல் மேல் நோக்கி நிமிரும் உன்னதமான கோபுரத்தையும் கொண்டு விளங்கிற்று. கோயிலின் அகத்தே நடனமாதரும் வாத்தியக்காரரும் தத்தம் தொழில் வன்மையைக் காட்டுதற்கும், பூசாரி பரிசாரகர்கள், வேண்டியவாறு, அப்பிராமணர் தம்மைத் தொடாமல் போய் வருவதற்கும் போதிய இட விசாலமின்றி, ஆள் நெருக்கமா யிருந்தது. மணிகளின் ஓசையும், வாத்திய முழக்கமும், வேத பாராயணமும், தேவாரம் திருவாசகம் ஓதொலியும், விழாவயர்வோர் ஒருவரோடொருவர் உரத்துப்பேசும் கூக்குரலுமாகச் சேர்ந்து, ஒப்பொழிவில்லாத கடலினது ஆரவாரத்தை ஒத்திருந்தது; அன்றியும், தூபதீபங்களினாலும் ஜனங்களின் கெட்ட மூச்சினாலும் ஒரே புழுக்கமா யிருந்தது. திருத்தளியின் புறம்பிலும், சுற்றுறக் கூப்பிடு தூரத்துக்கு ஆள் கூட்டமும் பேரொலியும் குறைவில்லை. ஏனெனின் கோயிலைச் சுற்றித் திருவிழாக் கடைகள் செறிந்து நிறைந்திருந்தன. அக் கடைவீதிகளிலே பெறலாகும் பண்டங்கள் எண்ணி முடியா, ஏட்டில் அடங்கா. எவரெவர் ருசிக்கும், பண செளகரியத்துக்கும், ஏற்ற வண்ணம் அறுசுவை அளாவிய தின்பன குடிப்பன பல்வேறு பண்டங்களும்; தேங்காய், பழவர்க்கங்கள், கரும்பு, மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, புஷ்பம், மரு, பச்சிலை, சூடம், சாம்பிராணி ஆகிய பொருள்களும்; வெள்ளி, செம்பு, பித்தளை, வெண்கலம், ஈயம், இரும்பு, துத்தநாகம், ஸ்படம் (அலுமினியம்), வங்கம் (டின்), நிகலம் (நிக்கல்), மாக்கல், மரம், இவற்றாலான சிறியன பெரியன நானாவித வடிவு கொண்ட கலன்களும்; ஓலை, மூங்கில், பிரம்பு, கோரை, விழல், கொடிகள் இவற்றால் பின்னி முடைந்த கூடைகள், பெட்டிகளும்; சீப்பு, கண்ணாடி, பாசிமணி, பவளம், வளையல், பொன் மணி ஆபரணங்கள், பதுமைகள், விளையாட்டுச் சாமான்கள் முதலியன, மாதர்கள் பாலர்கள் மனங்களைக் கவரும் சில்லரைச் சாமான்களும்; ஆடவர், மங்கையர்,

மைந்தர் யாவர்க்கும் ஏற்றனவாய், வானவில்லினும் காண வரிய பல வர்ணங்கள் புனைந்து மின்னும் ஆடைகள், அங்கி கள், குல்லாக்கள், பைகள் முதலிய துணியாலான சாமான் களும்; கும்மி, நொண்டி, தில்லேலை, குறவஞ்சி, சிந்து, வண்ணம், உலா, கூத்து, நாடகம், கலம்பகம், பிள்ளைத் தமிழ், புராணம் ஆகிய, பலர் அறியும்படி அங்கேயே சில படித்துப் பாடப்படும், புஸ்தகங்களும்; இன்னும் கூறி முடியாத பல்வேறு பண்டங்களும், அந்த ஆவணங்களிலே காணப்பட்டன. கோயிலைச் சூழ்ந்துள்ள ஆவணங்களின் புறம்பே, ராட்டணம், ஊஞ்சல், தொட்டில் முதலிய விளையாட்டுக் கருவிகளும்; கருடி வித்தை, சிலம்பம், ஜாலக் கண்ணாடி, லாட்டரி இவை நிகழும் வேடிக்கைக் கூடங்களும்; மூன்று காலுள்ள கோழி, ஐந்து காலுள்ள ஆடு, தலையில்லாத மனுஷன், இரு தலையுள்ள மனுஷன், இவைபோன்ற விநோதக் காட்சிச் சாலைகளும், நெருங்கி விளங்கின. இவ்வளாகத்தின் ஊடும் வெளியிலும் நூற்றுக் கணக்கான வண்டிகள் நின்று கொண்டிருந்தன; சில இடங்களில் வாத்திய கோஷத்துடன் பஜனைகள் நடந்து கொண்டிருந்தன; கோயிலின் வலப்புறமாக மாட்டுச் சந்தை ஒன்றையும், இடப்புறமுள்ள திருக்குளக் கரை யின்மேல் அரிச்சந்திரன் சரிதையை ஆடிக் காட்டும் நாடகசாலை ஒன்றையும் காணலாம்; தீவட்டிகள், லாந் தர்கள், சனங்கள் ஆங்காங்கு மூட்டியுள்ள உலைகள், கணப்பு நெருப்புக்கள், இவற்றால் எங்கும் வெளிச்சமா யிருந்ததால், காட்சியின் பொதுத்தோற்றம் திருவிழாப் பாங்காயும் மங்களகரமாயுமே இருந்தது. ஆயின், பல்லா யிரர் திரண்டுள்ள அம் மாபெருங் கூட்டத்திலே, அகத்தே கனிந்த உண்மையான தெய்வபக்தியினால் தூண்டப்பட்டு ஆங்குற்றார், வாரிதியில் வலம்புரிபோல், மிகச் சிலரே என் பதையும்; சுற்றிலும் பலகாவதத்துக் குட்பட்ட போக்கிலி கள், பிச்சைக்காரர்கள், தலைப்பா மாற்றிகள், திருடர்கள் முதலியோரும், அயல் ஜில்லாக்களி லிருந்தும் அத்த

கையார் பலரும் தத்தம் தொழிலையே கைக்கொண்டு அங்கு வந்துள்ளார் என்பதையும்; பணம் பெருத்து மதி சிறுத்த தூர்த்தர் பலர், தத்தம் தோழர்கள், சோரநாயகிகள், பரிவாரங்களுடன் திருவிழாக் கண்டு களித்தற்கும், தமது போகபோக்கியங்களை உலகறியப் பிறர்முன் பெருமையாய்க் காட்டி உள மகிழ்தற்கும், வேறு வேலையின்றியும், ஆண்டு எழுந்தருளியுள்ளார் என்பதையும் நாம் மறவாவிடின், அங்கே நிகழும் விஷயங்களை உட்புகுந்து ஆராய்ந்து பார்க்க நாணுவோம். அப்பெருங் கூட்டத்தினின்றும் விலகி, பயமுறும்படித் தன்னந் தனியாகவு மின்றி, ஓர் ஆலமரத்தின் கீழே, அம்மரத்தின் வேரே தலையணையாக, ஓர் அழுக்குப் புடவையின் மீது, தாயும் மகனுமாக இருவர் படுத்திருந்தனர். அப் பெண்பால், இன்னும் இளமை முற்றும் நீங்காதவளே; வயது முப்பதுக்கு அதிகம் மேலிராது; ஆயின், கவலையினாலும், வறுமையினாலும், நோயினாலும் வாடி மெலிந்து, இப்பொழுது பரிதபிக்கத்தக்க நிலைமையி லிருந்தாள். சிறுவன் நிலைமை அவ்வளவு தாழ்வில்லை. தாயிருக்கப் பிள்ளை வாடுமோ? அவளை அணைத்துப் படுத்திருந்தான் அவன்.

" அம்மா! சாமி எப்பொழுது புறப்படும்?" என்று சிறுவன் கேட்டான்.

"பாதி ராத்திரிக்கு மேலாகும், அப்பனே! நீ இப்பொழுது உறங்கு; வாணவேடிக்கை நடக்கும் பொழுது நான் உன்னை எழுப்புகிறேன்" என்று, மெதுவான ஈனசுரத்தில் அவள் பதிற்சொன்னாள்.

"ஒருவேளை நீயும் உறங்கிப் போய்விட்டாலோ? அப்பொழுது வேடிக்கை ஒன்றும் பார்க்க முடியாதே?"

"நான் அப்படி உறங்கிவிட மாட்டேன்; நான் உன்னை எழுப்புகிறேன்; நீ உறங்கு" என்றாள் தாய். சிறிதுநேரம் பையன் பேசாது படுத்திருந்தான்; பின்பு, " அம்மா! எனக்கு உறக்கம் வரவில்லை; என்னால் உறங்க முடிய

வில்லை; எனக்கு ஏதாவது ஒரு கதை சொல்லமாட்டாயா? அதனால் ஒருவேளை உறக்கம் வரும்" என்று சொன்னான்.

"கதையா? எனக்கு என்ன கதை தெரியும் அப்பனே!"

"நீ என்னை விட மிகப்பெரியவள் இல்லையா, அம்மா? உனக்கு ஏதாவது ஒரு கதை தெரியாதா? ஒரு கதை சொல்லு; நான் கேட்டுக் கொண்டே உறங்கிவிடுகிறேன்."

தாய், சிறிது நேரம் யோசித்துப், பின்பு சொன்னதாவது:—

"சரி; நீ இப்படிச் சொல்லுகிறதினாலே, எனக்கு ஒரே ஒரு கதைதான் தெரியும், அதைச் சொல்லிவிடுகிறேன், அப்பனே! உனக்குச் சொல்லத் தகுந்த கதையல்ல அது; ஆனால் இன்றிராத்திரி அடிக்கடி அது என் ஞாபகத்துக்கும் வருகிறது. என் இடது தோள் துடிக்கின்றது. முருகக் கடவுள் என்ன நன்மையை நினைத்துக் கொண்டிருக்கிறாரோ?"

"அந்தக் கதையைச் சொல், அம்மா?" என்று, சிறுவன் ஆவலுடன் கேட்டான்.

தாய்:—ஒரு காலத்திலே, நீ பிறக்க வெகு நாளைக்கு முன்னாலே அது, கொழும்புப் பட்டணத்திலே ஒரு பெரிய பணக்கார வியாபாரி இருந்தார்; கொழும்பு பெரிய ஊர்; நீ பார்த்ததில்லை.

மகன்:—நம்ம மேலூரை விட அது பெரியதா, அம்மா?

தாய்:—ஓ! எவ்வளவோ பெரிது; அது ஒரு பட்டணமே; கிராமம் இல்லை. அந்த வியாபாரிக்கு ஒரு மகள் இருந்தாள். மற்றக் குழந்தைகளிலும் அவள் மேல் அவருக்கு அதிகப் பிரியம். அவளுக்கேற்ற மாப்பிள்ளை ஒருவர், நல்ல குடும்பத்தில் பிறந்த செல்வவான், அவ்வூரிலேயே கிடைத்தால், தம்மகள் எப்பொழுதும் தம் வீட்டிலேயே, அல்லது அந்தப் பட்டணத்திலேயே

இருக்கலாகு மென்று அவர் தேடிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் வீட்டிலேயே, அவர் கடையில் கணக்கு வேலை பார்க்கும் ஒரு வாலிபர் இருந்தார்; அவருக்கு இந்தச் சீமை; யாரும் அறியாதபடி, அவரும் அந்த வியாபாரியின் மகளும் ஒருவரை ஒருவர் நேசித்து வந்தனர். ஒருவரை ஒருவர் முதல் முதல் பார்த்த வுடனே, அவர்களுக்குள் காதல் பிறந்துவிட்டது; அது எப்படி, அவர்கள் எவ்வளவு ஆசைகொண் டிருந்தார்கள் என்பதை, உனக்கு நான் சொல்லமுடியாது. அந்தக் கணக்கப் பிள்ளை மிக ஏழை; அந்த வியாபாரியினும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்; ஆகவே, அவர்கள் விவாகத்துக்கு வியாபாரி எந்நாளும் இணங்கமாட்டார் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆயினும், அவர்கள் இரகசியமாக நேசித்து வந்தனர். இப்படி இருக்கும் பொழுது, ஒரு நாள், தம்மனதுக்கிசைந்த மருமகன் கிடைத்து விட்டதாகவும், தம்மகளின் மணமுகூர்த்தம் இன்ன தேதியில் நடக்குமென்றும், வியாபாரி சொன்னார். இதைக் கேட்க, காதலர் இருவர்க்கும் இடிவிழுந்தாற்போ லிருந்தது. அவர்கள் கூடி ஆலோசனை செய்து, யாரும் அறியாமல் ஒரு நாளிரவு வீட்டினின்றும் வெளியேறி, ஓடிவிட்டனர். கொழும்புத் தீவைவிட்டு இந்தச்சீமைக்கு வந்துவிட்டார்கள். அவர் இங்கே அலைந்த அலைச்சலையும் பட்ட கஷ்டங்களையும் சொல்ல வெகு நாள் பிடிக்கும். ஆனால், அவர்களுக்குள் இருந்த காதலினால் அவர்கள் அவற்றை யெல்லாம் பாராட்ட வில்லை. கடைசியில் ஒரு சிறு பட்டணத்தில் தங்கி வாழலானார்கள். அதற்குள், அவர்கள் கையிலிருந்த சொற்பப் பணமும், அவள் நகைகளை விற்றபணமும், எல்லாம் செலவாய் விட்ட படியால், அவர் முன் போல் வேறு ஒரு வியாபாரியிடம் கணக்கு வேலைக்கு அமர்ந்தார். அவர் அப்படி சம்பாதித்ததைக் கொண்டு அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். ஆனால் அவருக்குச் சுபாவத்திலுள்ள சமுசய

குணத்தினல், சீக்கிரத்தில் அவர்கள் வாழ்வெல்லாம் பாழாக முடிந்தது. அவள் மேல் கரையற்ற காதலுடன் இச்சமுசய குணமும் இருந்த படியால், யாரேனும் வேறு புருஷர் அவளை முகமெடுத்து நோக்கினலும், அவர் சமுசயமும் கோபமும் கொள்ள, அதனல் அடிக்கடி மனஸ்தாபமும் கவலைகளும் விளைந்தன. அவர்கள் குடியிருந்த வீட்டுக்கு எதிர்வீட்டிலே, யௌவன புருஷன், பள்ளி உபாத்தியாயன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன், பார்க்க லக்ஷணமுள்ளவனுகவும், நடையுடை பாவனைகளில் டம்ப குணமுள்ளவனுகவும் இருந்தான். இந்தப் பள்ளி ஆசான், வியாபாரிமகளைக் கவனிக்கத் தொடங்கவே, அவள் புருஷனுக்கு அசூயை பிறந்து விட்டது. அன்று பிறந்த குழந்தை போலவும், கறந்த பால் போலவும், அவள் மாசு மறுவற்ற மனத்தூய்மை வாய்ந்தவளென்பது, அந்தக் கடவுளுக்குத் தெரியும்! மனம் மெய் மொழிகளால் ஒரு சிறிதும் வழுவாத பதிவிரதை; தன் கணவன் மேல் அளவற்ற மெய்க்காதல் உள்ளவள் அவள். அவ்வண்ணம் இல்லாவிடில், தன் வீட்டையும் பெற்றேரையும், ஐசுவரியத்தையும், மதிக்கத்தக்க மற்றும் யாவற்றையும் துறந்து, தாழ்ந்த குலத்தில் பிறந்த ஏழை ஒருவன், தன் தந்தையாரின் குமாஸ்தாவாக விருந்தவன்கூட, அவள் வெளியேறி இருப்பாளா? ஆனல் அசூயைக்குக் கண்ணேது? தோன்றுவதெல்லாம் அதற்கு விபரீதம் தானே! அவள் என்ன பிரமாணஞ் செய்துகொடுத்தும் அவள் கணவர் நம்பவில்லை. சமுசயம் வரவரப் பலத்து, அவருக்கு அதனல் பைத்தியம் பிடித்துவிடும்போல் ஆய்விட்டது. அப்பொழுது அவள், அந்த வீட்டையும் தெருவையும் நீங்கி, அந்த ஊரில் மற்ருெரு தெருவுக்குக் குடிப்போகும்படி அவரை வேண்டினுள்: அப்படிச்செய்யுமுன், கொடிய விதிவசத்தினல், அவர்கள் வாழ்க்கையெல்லாம் ஒரு நாள் திடீரென்று பாழாக்கி விட்டது.”

தாழ்ந்த ஈனசுரத்தில் முதலில் பேசத் தொடங்கி, கதை மேற் செல்லச் செல்ல, ஆத்திரமும் பரபரப்பும் அதிகரித்து, இப்பொழுது அவள் சோகத்தினுல் பேசமுடியாமலாகிவிட்டாள். சிறுவன் கொஞ்சம் பயமுற்ருன்; ஆனுல், அவள் சோகத்தையும் தாபத்தையும் அறியக்கூடிய பிராயம் ஆகாமையால், அவன் சற்றுப் பொறுத்து, பின்பு, "அப்புறம் என்ன நடந்தது, அம்மா?" என்று கேட்டான்.

மனதை ஒருவாறு அடக்கிக்கொண்டு, துயரம் தேக்கிய குரலில், தாய், மேற்கதையைக் கூறலானுள்:—

"ஓர் இரவு, தம் எஜமானன் வேலையின்மேல் அயலூர் சென்றிருந்தபோது, அவள் புருஷர் நேடுநேரம் கழித்துத் திரும்பிவந்தார். வழக்கம்போல் வீட்டுத் தலைக்கதவு அடைத்து, உள்ளிருந்து' தாழிடப்பட் டிருந்தது. ஆனுல் வீட்டு வெளித்திண்ணையில் அந்தப் பள்ளி ஆசான் உட்கார்ந்திருந்தான். அவனைக்கண்டவுடன், அந்தப் புருஷனுக்குண்டான கோபத்துக்கு எல்லை இல்லை; இருவருக்கும் கடோரமான வாக்குவாதம் சிறிது நடந்தது; உடனே ஒரு பேனுக் கத்தியால் குத்திக்கொல்லப்பட்டு, அவ் வுபாத்தியாயன் கீழே விழுந்தான்."

இதைக் கூறும்பொழுது, அத்தாயின் உடல் முழுதும் பதறிற்று; சிறுவனும் அவளை இறுக அணைத்துக் கொண்டான். சிறிது தாழ்த்து, "அப்புறம், அந்த வாத்தியானைக் கொன்றவனை என்ன செய்தார்கள், அம்மா?" என்று சிறுவன் கேட்டான்.

"அவர், தன் அசூயையும் குற்றத்தையும் ஒப்புக் கொண்டார்; சர்க்காரால் ஏழு வருஷம் தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டு, அவர் அவளை விட்டுப் பிரிந்தார்," என்ருள் தாய்.

"பின்பு அவள் பாடு என்னவாயிற்று?" என்று, பக்கத்தில் புதிதாய் ஒரு குரல் கேட்டது.

அப்பெண்பால் திகிலுற்ருள்; எழுந்திருந்து நாற்புறமும் சுற்றிப்பார்க்க, சமீபத்தில், ஆலமரத்தின் மறைவில், ஒருவன் வீற்றிருப்பதைக் கண்டாள். அவள் எழுந்தவுடன், அவன் மரத்தின் மறைவை விட்டு வெளிப்பட்டு, மறுபடியும், "பின்பு அவள் பாடு என்னவாயிற்று?" என்று கேட்டான். மரத்து நிழலினுல் ஒருவர் முகம் மற்றவர்க்கு நன்ருகத் தெரியவில்லை; ஆனுல், அவன், தாடியும் மீசையுமுள்ளவனும்; காவியுடை யணிந்தவனுமான ஒரு பரதேசி என்பது மட்டும் தூலங்கிற்று.

"வேறு ஒருவர் அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கிருர் என்று எனக்குத் தெரியாதே" என்ருள் அவள். "அதிருக்கட்டும்; அவள் பாடு என்ன வாயிற்று?" என்று, மறுபடியும் பரதேசி ஆத்திரத்துடன் வினவினுன்.

"அவள்பாடு என்ன வாயிற்று? அவர் தீவாந்தரம் போகுமுன், தான் அவரால் கருவுற்றிருப்பது அவளுக்குத் தெரியவரவே, அவர்கள் காதலின் கனியாகிய அந்தச் சிசுவின்பொருட்டு அவள் பின்னும் உயிர் தாங்கி யிருந்தாள். திரும்பித் தன் பெற்ருேர் வீட்டை நோக்க அவள் மனம் துணியாமல், இல்லாமையினுலும் வியாதியினுலும் துன்புற்று வருந்தி, கூலிவேலை செய்து எப்படியோ அக்குழந்தையையும் தன் உயிரையும் காப்பாற்றி வந்தாள்.

"ஆனுல், அவள் அவனுக்கு உண்மையாகவே இருந்தாளா?" என்று கேட்டான் பரதேசி.

"ஆம், அதில் என்ன சந்தேகம்? அவரைத் திரும்பி இப்பிறவியில் கண்டாலுமே காணக்கிடையா விட்டாலுமே, அணுவேனும் அவள் கற்புத்தவறி ஒழுகவே மாட்டாள்" என்று, பரபரப்பாயும், சமுசயத்தினு லுண்டான கோபத்தோடும் பதில் சொன்னுள். பின்பு, சிறிது நேரம் கழித்து, பரதேசி: "அப்பனே! நான் உனக்கு ஒரு சிறு கதை சொல்லுகிறேன் கேட்கிருயா? அல்லது உறக்கம் வருகிறதோ?" என்று கேட்டான்.

"சொன்னால் கேட்கிறேன்; ஆனால் இப்படி பயங்கரமான கதை வேண்டாம்" என்றான் சிறுவன்.

பரதேசி :—என் கதையும் உன் தாயின் கதையைப் போன்றதே; ஆனால், அதனால் என்ன? எல்லாம் சுபமாய் முடிந்தால் சரிதானே. ஓர் ஊரிலே ஒரு யௌவன புருஷன் இருந்தான். உன் தாயின் கதையில் வரும் குமாஸ்தாவைப்போல வைத்துக்கொள் அவனையும். அவன், அசூயையினால் உண்டான கோபாவேசத்தில் மற்றொருவனைக் கொலை செய்து விட்டான். அதற்காக அவனை ஒரு தீவிலே கொண்டு போட்டார்கள். பல வருஷங்கள் கடுமையான வேலை செய்து பிழைக்கவேண்டியதாயிற்று; ஆனால் அந்தக் காலமெல்லாம், தனக்குற்ற அவமானத்தையும் தான் படும் கஷ்டங்களையும் விட, தன் காதல் நாயகியை வேறொருவன் அனுபவித்துக் கொண்டிருப்பான் என்னும் எண்ணந்தான் அவன் மனத்தை வெதுப்பியது. இராப் பகலாக இந்த அசூயை தான் அவனைப் புண்படுத்தியது; ஏனெனில், அவன் கொலை செய்யும் பொழுது, தன் மனைவிமேல் அவனுக்குச் சமுசயமுண்டு. இந்த உலக வாழ்க்கை பாவங்களும் துன்பங்களும் நிறைந்த பாழே. ஆயினும், என் அப்பனே, அசூசையால் விளையும் மனக் கசப்பையும் வாதனையையும் நீ ஒரு பொழுதும் அனுபவியாது, கடவுள் அருள் செய்வாராக! விதித்த வண்ணம் தண்டனைகழிந்து, அந்தத் தீவைவிட்டு வெளியேறி, தூர தேசத்தில் ஓர் ஊரை அடைந்து, தான் தீவாந்தரத்தில் கற்றுக்கொண்ட ஒரு கைத்தொழிலினால் அங்கே அவன் வயிறு வளர்க்கலானான். ஆனால் அவன் மனத்தில் வேரூன்றியுள்ள தலைக்காதல் ஒரு சிறிதும் அடங்காமையினால், அவளைத் திரும்பவும் காணும் விருப்பம் அவனை வருத்தியது. அதனால் அவன் பரதேசியாகி, மன நிறைவையும் அமைதியையும் குறிக்கும் காவியுடைக்குள்ளே ஆயிரக்கணக்கான ஆசைகளும் பயமும் ஊசலாடித் தழைக்கும் உள்ளத்தினனாய், அவளை எப்படியாவது

காணக் கருதி, தான் அவளுடன் முன்பு வாழ்ந்துவந்த இடங்களிலெல்லாம் ஒரு வருஷம் வரை தேடித்திரிந்தான். முருகக் கடவுள் கடைசியில் மனமிரங்கி விட்டார். கற்புக்களஞ்சிய மாகிய தன் அருமைக்காதலியை அவன் மறுபடியும் இன்று கண்டது மட்டுமோ, அவன் பாழான மனத்திலுள்ள சந்தேகமும் தெளிந்து, அவள் கற்பு நிலை அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. என் அருமை மகனே! என் ஆருயிர்க்காதலீ! உங்களை நான் இவ்வளவு துன்பங்களுக்கும் இமிசைகளுக்கும் உள்ளாக்கினேனே! இதோ, உங்கள் பாதத்தில் விழுகிறேன். என்னை எப்படியாவது மன்னித்தருளி, ஏற்றுக் கொள்ளுங்கள்!”

## 21. புதியதோர் பிசாசு.




தரமையர் சரசி; சந்தோஷ புருஷன்; நித்தியமங்கள சொரூபி; மனக்கவலையை ஒழித்து மனத்தை உற்சாகப் படுத்த அவர் சகவாசமே போதும். மதராஸ் பட்டணத்தில் அவரை அறியாதாரில்லை; அவர் சிநேகிதரை எண்ணி முடியாது; சாதி வித்தியாச மின்றி ஹிந்துக்கள் மட்டுமோ, மதபேத மின்றி முஸ்லீம்கள் கிறிஸ்தவர் மட்டுமோ, வர்ணபேதமின்றி ஐரோப்பியரும் கூட, அவர் நண்பர்களே. அவர் தக்க சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்; குடும்பி; நாற்பத்தைந்து வயதுள்ளவர்; செலவாளி; நன்றாய் உண்டு உடுத்துச் சுகமாய் வாழ்பவர்; கோடை நாளிலே ஒரு மாதமாவது நீலகிரியில் கழியாமல் விடார்; மற்றக் காலங்களிலும்கூட, சேர்ந்து நாலைந்து நாள் ரஜா நேர்ந்தால், குசாலாக நாலு சிநேகிதருடன் எங்கேயாவது சவாரி புறப்பட்டு விடுவார். மதராஸ் பட்டணத்திலேயே இருக்கும் பொழுதும், காலை

மாலை உலாவப்போதல் தப்ப மாட்டார்; ஞாயிற்றுக்கிழமை தோறும் அவர் வீட்டில் சீட்டுக்கச்சேரியு முண்டு.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை, அவர் வீட்டு மாடியில் சீட்டுக்கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அவரது ஆப்த மான பாலிய நண்பரும் பந்துவுமாகிய சேஷையர், அன்று காலை தான் திருச்சியிலிருந்து வந்திருந்தார். இராமையர் முதலிய வேறு சில மதராஸ் நண்பர்களும்கூட விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது பின் வரும் சம்பாஷணை நடந்தது:—

சேஷையர்:— அப்படியே வைத்துக்கொள்வோம். ஐரோப்பியருடன் அளவளாவிப் பழகி அவர்கள் சிநேகத் தை அடைய வேண்டுமாயின், டீ, காப்பி முதலியன அவர்களுடன் உண்டுகளிக்கவேண்டியது அவசியமாகவே இருக்கட்டும். அவர்கள் வீட்டிலே பறையர்களால் செய்து கொண்டுவரப்பட்ட தின் பண்டங்களைப் பிராமணர் புசிப் பதினால் பாதகமில்லை என்றும் வைத்துக் கொள்வோம். அப்படியானாலும் மது, மாமிச பக்ஷணங்களை உண்ண லாமோ?

சுந்தர:—யாரார்வது அவற்றையும் புசிக்கும்படி நிர்ப் பந்தம் செய்கிறார்களா? இல்லையே. நாம் நம்முடைய வீடுகளில் சாதாரணமாய்ச் சாப்பிடுகிற வஸ்துக்களை அவர் கள் வீடுகளிலும் அவர்களுடன்கூடி உண்ணல்வேண்டு மென்பது தானே முக்கியம். நமது வழக்கம் எப்படி யாயினும், அவர்களுடன் பந்திபோஜனம் செய்யாத பேர், ஐரோப்பியரது அந்தரங்க சிநேகத்தை அடைய முடியாது; இங்கிலீஷ்காரன் இருதயத்தை அவன் வயிற்றின் வழியா கத் தான் அடையவேண்டும் என்று கேட்டதில்லையா? ஐரோப்பியர் சமபோஜனத்தை அவ்வளவு முக்கியமாகப் பாராட்டுகிறார்கள்! அதை நம்மால் மாற்றமுடியாது. நமக் குள்ளும் அப்படி நினைக்க வில்லையா? "உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்கலாகாது." என்று சொல்வதின் பொருள்

என்ன? மனிதர்களை ஒன்றுபடுத்த சமபோஜனம் அதி முக்கியமானது.

இராமையர் :—சரி; அப்படியே வைத்துக்கொள்வோம். ஐரோப்பியர்களோ மது மாமிச பக்ஷிணிகள். நம்ம சமையல்முறை அவர்கள் வேலைக்காரருக்குத் தெரியவே தெரியாது. அப்படியிருக்க, நாம் அவர்கள் வீடுகளில் தாராளமாய் உண்பதெப்படி?

சுந்தர :—உலகத்திலுள்ள பல கோடி ஜனங்களையும் கணக்கெடுத்துப்பார்த்தால், மது மாமிச பக்ஷணம் செய்யாதவர் மிகச் சிலரென்றே ஏற்படும்.

சேஷ :—உலகத்திலே மூடர்கள் தான் அதிகம்; ஆயிரத்திலொருவன் கூட புத்திசாலி யில்லை.

சுந்தர :—சேஷா! நாம் வேண்டுமானால் அப்படி வைத்துக் கொள்ளலாம்; நாமே புத்திசாலிகளென்றும் எண்ணிக் கொள்ளலாம். ஆயினும், நீ அறியாத விஷயமில்லையே. நமது ஆரிய முன்னோர்கள் தின்ற மாமிசத்துக்கும் குடித்த ஸோமரஸத்துக்கும் கணக்குண்டோ? ஒரு ருஷி மற்றொரு ருஷியின் ஆசிரமத்துக்கு விருந்தாக வந்து விட்டால், புடலங்காயும் கத்தரிக்காயும் கறிசெய்தார்களோ, கன்றிறைச்சியும் மான் இறைச்சியும் கறி செய்தார்களோ? பானகமும் நீர்மோரும் கரைத்தார்களோ? ஸோம ரஸம் தயார்செய்தார்களோ? பழைய ஏடுகளைத் திருப்பிப் பார். நமது சிராத்தங்களிலே தேனும் உளுந்தும் இப்பொழுது சேர்ப்பது மது மாமிசத்துக்குப் பதிலாகவே என்று சொல்வதில்லையா? நான் சொல்வது, நாமெல்லாரும் இப்பொழுது திரும்பியும் மது மாமிச பக்ஷிணிகள் ஆகவேண்டுமென்பதல்ல. அப்படியானுமெனில் நம் தேகவலி அதிகரிக்கும் என்று பலர் மனப்பூர்வமாக நம்புகிறார்கள். அது கிடக்க, நாம் இப்பொழுது மது மாமிசங்கள் உண்ணாமையினால், அப்படி

புண்பவர்கள் எல்லாம் காட்டுத்தனமான அநாகரிக ஜனங்களென்று எண்ணிவிடக்கூடாது. எத்தனையோ கோடி ஜனங்கள் இவ்வுலகத்திலே மாமிசத்தையே முக்கிய உணவாகக் கொண்டு வாழ்கிறார்கள்; மிதமாகப் பானம் செய்தால், மதுவினால் ஒரு பாதகமுமில்லை; சாதகமே ஏற்படும் என்று சில வைத்திய சிரோமணிகளும் அபிப்பிராயப் படுகிறார்கள்; அவசியமாக நினைப்போருமுண்டு.

இராமையர்:—அதுதானே சங்கடம், எது மிதம் எது அமிதம்? முதலில் ஒரு துளி, ஒரு சிறு ஸ்பூன் அளவு; அரைச் சிறங்கைதான் குடிக்கிறது, உத்ஸாகமாகவே இருக்கிறது; வரவர, வழக்கம் பலப்பட்டு, குப்பி குப்பியாகக் குடிக்க ஆரம்பித்து விடுகிறது. காவேரி போற்று ஓயினுக ஒடார்தா! என்று, ஏங்கிப் பிரார்த்திக்கிறது. மனுஷனும் தொலைகிறான், குடும்பமும் நாசமாகிறது. குடிமட்டும் வழக்கமாய்விட்டதோ, அப்புறம் குடித்தன மெல்லாம் குடிமோசந்தான்.

இஃதோடு சிட்டுக்கச்சேரி முடிந்து, மற்ற நண்பர் தத்தம் வீடு சென்றனர். சுந்தரமையரும் சேஷையரும் மட்டும், இரண்டு சாய்வான நாற்காலிகளில் வீற்றிருந்து பேசலானார்கள்:—

சேஷ:—இராமையர் சொன்னது கேவலம் சத்தியமே, சுந்தரம்! இந்தப் புதுப்பிசாசு உன்னைப் பலமாய்ப் பிடித்து கொள்ளுமுன், நீ எப்படியாவது அதை ஒழித்து விடவேண்டும்.

சுந்தர:—பிசாசுப் பிடியா இது? நினைத்தால் நிறுத்தி விட மாட்டேனா? ஜீரணசக்தி குறைவா யிருப்பதினால் அதைக்கொஞ்சம் பலப்படுத்தும் பொருட்டே, சிறிது சாப்பிடுகிறேன். நானா குடிகாரன் ஆகிவிடுவேன் என்று பயப்படுகிறாய்? மட்டுக்கு மிஞ்சி, நான் தாங்க முடியாத அளவு, நான் சாப்பிடுகிறதே இல்லையே.

சேஷ:—போன மார்கழி மாதத்தில், அன்று இரவு நீ வீட்டுக்கு வந்தஸ்திதி உனக்கு ஞாபக மில்லையா?

சுந்தர:—அன்று புதுவருஷ விருந்து; விசேஷ தினம்; ஐரோப்பிய சிநேகிதர் புதிதாய்ச் சிலர் வந்திருந்தார்கள். கொஞ்சம் மறந்துவிட்டேன்; கூட்டத்தின் குதூகலத்தினால் அப்படியாயிற்று.

சேஷ:—உன் உடம்பைப் பார்த்தால் எனக்குப் பயமாகவே இருக்கிறது; நான் கடைசியாகப் பார்த்ததற்கு இப்போது அதிகம் கெட்டிருக்கிறது. இன்னும் நீ இப்படி யிருந்தால் எப்படி?

சுந்தர:— என் உடம்பா? அதற்கென்ன குறை? ஒன்று மில்லை. வா, சேஷா, சாப்பிடப் போவோம். என் அகமுடையாள் உனக்குப் பிரியமான வஸ்து ஒன்று இன்றிரவு தயாரித்து வைத்திருக்கிறாள். இப்பொழுது இன்ன தென்று சொல்லமாட்டேன். சாப்பிடும் பொழுது உனக்குத் தெரியும். கீழே போவோம்; வா.

பின்பு சுந்தரமையர், ஒரு சின்னக்ளாஸ் வழக்கம் போல் குடிக்கத் தன் அறைக்குட் சென்றார். சேஷையரும் கூடவே சென்று, அவர் கையைப் பிடித்துத் தடுத்து: "இன்றிரவு வேண்டாம், சுந்தரம்! இந்த ஒரு நாளிரவு வேண்டாம்; நினைத்தால் எப்பொழுது வேண்டுமானாலும் நிறுத்திவிடுவேன் என்று ஜம்பம் பேசினையே, இன்றிராத்திரி நிறுத்து, பார்ப்போம்," என்றார்.

சுந்தர:—வேண்டு மெனின் நான் நிறுத்த மாட்டேனா என்ன? ஆனால் இன்று ஏன் நிறுத்த வேண்டும்? இன்று இராத்திரி உனக்காக விசேஷச் சமையல். இன்றுதான் முக்கியமாய்ச் சாப்பிடவேண்டும்; இல்லாவிடின் ஜரிக்காது.

சேஷை:— ஜரிக்காத வஸ்துவை சாப்பிடுவதேன்? அது என்னவாயினும் நானும் சாப்பிடவில்லை; நீயும் சாப்பிடாதே. ஒரு விஷம் ஜரிப்பதற்காக மற்றொரு விஷத்தைச் சாப்பிட வேண்டாமே.

சுந்தர :—இது விஷமா? சும்மா உளறுதே, சேஷு! விடு, ஒரு கிளாஸ் சாப்பிட்டு விட்டு, இருவரும் போஜனத்துக்குப் போவோம்.

சேஷையர் தம்மால் இயன்ற மட்டும் கையைப் பிடித்துத் தடுத்துப்பார்த்தார்; பலிக்கவில்லை; சுந்தரமையர், அவர் கையை உதறிவிட்டு, மேஜைமேலிருந்த குப்பியை எடுத்து, கண்ணாடி டம்ளரில் கடகடவென்று மதுவை ஊற்றிக் குடிக்கலானார். சேஷையர் கவனித்ததில், முன்னிலும் இரு மடங்குக்குமேல் குடித்ததுமன்றி, சுந்தரமையர் கையும் ஊற்றும்பொழுது நடுங்கிற்று. பின்பு இருவரும் கீழே சாப்பிடப்போயினர். தமது நண்பரைப்பற்றி சேஷையர் கொண்ட மனக்கவலையை, சுந்தரமையரின் தர்ம பத்தினி ஜானகியம்மாளின் முகமும், பதின் மடங்கு அதிகமாகப் பிரதிபலித்துக் காட்டிற்று.

இரண்டே இலைகள் போட்டுப் பரிமாறி இருப்பதைப் பார்த்தவுடன், சேஷையர், "எங்கே? குழந்தைகள் எங்கே? அவர்கள்கூடச் சாப்பிடவில்லையா?" என்று கேட்டார்.

"அவர்கள் சாப்பிட்டாய் விட்டது. அவர்கள், அப்பாவுடன் இப்பொழுது சாப்பிடுகிறதில்லை." என்று, ஜானகியம்மாள் விடையளித்தாள். சுந்தரமையர் போஜனகால முழுவதும் வெகு உல்லாசமாய்ப் பேசிச் சிரித்துப் பரிகாசஞ் செய்துகொண்டிருந்தார்; சேஷையரோ, அவரது சந்தோஷத்தை உடன் அனுபவிக்க முடியாதவராய், கவலையோடு ஊண்கழித்தார். பின்பு இருவரும், வழக்கம் போலத் தாம்பூலம் அருந்த மாடிக்குச் சென்றனர். இருவரும் உற்ற நண்பர்களா யிருந்தும், ஒருவரை ஒருவர் கண்டு பிரிந்து வெகு நாட்களா யிருந்தும், சுந்தரமையர், தாம்பூலத்தை அவசரப்படுத்தி, சேஷையரைச் சீக்கிரம் படுக்கைக்கு அனுப்பிவிட்டார். தாம்பூலம் மென்று கொண்டு அவர்கள் வீற்றிருந்த சிறிது நேரத்துக்குள், சுந்தரமையரின் கண்கள், தம்மையறியாமலே பல தரம் மேஜைமே

விருந்த உஸ்கி மதுக்குப்பியை நோக்கியதைச் சேஷையர் கவனித்தார்.

சேஷையர், மற்றொரு நண்பர் வீட்டுக்குப் படுக்கைக் குப் போகும் வழியில், சுந்தரமையர் மனைவி ஜானகியம் மாளுடன் சிறிது பேசலானார். அப்பொழுது, நாளுக்கு நாள் சுந்தரமையர் குடிமுற்றிக் கெட்டுப்போவதையும், மனைவி மக்கள்மேல் அவர் வரவர உபேக்ஷயா யிருப்ப தையும், குடும்ப விஷயங்களை முன்போற் கவனியாம விருப்பதையும், வருமானத்துக்கு மேற்பட்ட செலவினால் கடன் பாம்பு விஷம் ஏறுவதுபோல ஏறுவதையும், அடிக் கடி, சுந்தரமையர், இரவில் போஜனஞ் செய்யாமல் வெளி விருந்துகளுக்குச் சென்று குடிமயக்கத்தோடு நள்ளிரவில் திரும்பி வருவதையும், வீட்டிவிருக்கும்பொழுது, அவர், தம்மனைவி எவ்வளவு கெஞ்சி மன்றாடித் தடுத்தாலும் கேளாமல் அமிதமாகக் குடிப்பதையும் பற்றிச் சேஷையர் அறிந்தார். அவருக்குண்டான விசனம் கொஞ்சமல்ல. சுந்தரமையருடைய குடும்ப விஷயங்களை நன்கறிந்தவரா தலின், அவர் இவ்வாறு ஒரு துர் வழக்கத்தால் கெட்டுப் போவதைக் கண்டு மிகவும் பரிதபிக்கலானார். குடியினால் குடும்பம் கெட்டுப்போவதுமன்றி, அவர் உடம்பு சீக்கிரம் சீரழிந்து, அவரது அகால மரணத்தினால் தனக்கு வைதவ் யமும் நேரிடக்கூடுமென்று ஜானகியம்மாள் ரத்தக் கண் ணீர் வடித்தாள். இதற்கென்றே ஒருவாரம்வரை மதராஸ் பட்டணத்தில் தங்கி, சேஷையர், தம்மால் இயன்ற மட் டும் சுந்தரையருடன் வாதாடியும் கெஞ்சியும் பயமுறுத் தியும் பார்த்தார். அவர் எடுத்துக்காட்டின நியாயங் களையும், தீங்குகளையும் சுந்தரமையர் ஒப்புக்கொண்டா ரெனினும், மாலைப்பொழுது வந்தவுடன் அவர் புத்தி எல் லாம் மாறி, குப்பியே ஞாபகமாக விருந்தது. தாம் வேண் டினால் நினைத்தபோது நிறுத்திவிடக்கூடுமென்று வீரியம் பேசுவதைவிட்டு, உலக வாழ்க்கையிலே கடவுள் அருளி யிருக்கும் சுகபோக்கியங்களை யெல்லாம் மனுஷன் அனுப விப்பது கிரமந்தான் என்றும், தாம் மதுபானஞ் செய்வது

அவ்வாறே என்றும், அப்படிச்செய்யாதார் உலக போகங்களில் ஒன்றை வீணே இழப்பவர்களென்றும் தத்துவம் பேசத் தொடங்கினுர்.

“உன் பாட்டனுர் யாகம் செய்தார்; உன் தகப்பனுர் பரம வைதீகர்; சிஷ்டர்; உன்னைமட்டும் எங்கிருந்தோ இப்பிசாசு வந்து பிடித்துக்கொண்டதே! நான் ஆதி முதலே இது வேண்டாம், வேண்டாம், கெட்ட வழக்கம், பிடித்துக்கொண்டால் ஒரு நாளுமே விடாது என்று எச்சரித்தேன். அப்பொழுது கேட்காமல் வீரியம் பேசினையே. அந்தோ! ஒரு குடும்பம் அநியாயமாய்க் கெட்டுப் போகிறதே!” என்று, சேஷையர் பரிதபித்து முறையிட்டார். ஒன்றும் பயன்படவில்லை. பின்பு அவர் தம்மூர் திரும்பிவிட்டார்.

மலை யேறுவது கஷ்டம், மலையுச்சியினின்றும் கீழே உருளுபவன் வெகு சுலபமாய் விழுந்துவிடக்கூடும். சுந்தரமையர் நாளுக்கு நாள் அப்படியே குடி வெறி மிக்குக் குணங்குன்றிச் சீர் கெட்டு, நோய் முற்றி, மறு வருஷத்தில் தேக வியோகமானுர். ஒரு நாள் காலை, அவர் இரவில் படுத்த படுக்கையில் பிணமாகக் கிடந்தார். உள்ளநாள் வரை அவர் குணக்கேட்டைச் சகித்துவந்த ஜானகியம்மாள், ஊரார் சிரியாதபடி, குடியின் மிகுதியால் சாகுமுன் அவர் படுக்கைமேற் செய்திருந்த அசங்கியங்களை எல்லாம் மாற்றி, மானத்தைக் காப்பாற்றி, தன் துக்கத்தைச் சகித்துக்கொள்வதுடன், அலங்கோலமாய் அவர் விட்டுப்போன குடும்ப விஷயங்களைச் சீர்ப்படுத்தி, தன்னுலியன்றமட்டும் பாடுபட்டு, தன் குழந்தைகளையும் போஷிக்க வேண்டியதாயிற்று.

ஆதி ஆரியரது வாழ்க்கை எவ்வாருயினும், அவர்கள் சந்ததியாராகிய நமக்குள் மதுபான வழக்கம் இல்லாமலிருந்தது. வாந்திபேதி உபத்திரவம் உற்ருர்க்கும், பிரசவித்தவர்க்கும் சாராயமானது அவசியமான மருந்தென்று,

நமக்குள் சிலர் எண்ணுகிறார்கள். இது முற்றிலும் தவறென்பது, சிறந்த மேனாட்டு வைத்திய சிகாமணிகளின் அபிப்பிராயம். இந்தியாவினும் மிகச் சீதளமான தேசங்களிலிருந்து வந்துள்ள ஐரோப்பியரிற் பலர், மதுபானஞ் செய்வது மெய்யே ஆயினும், நெடு நாளைய வழக்கத்தினால், அவர்கள், மிதமிஞ்சிப் போகாமல் தடுத்துக் கொள்ள அறிந்திருக்கிறார்கள். மேனாட்டுச் சனசமூகங்களுக்குள் நடக்கும் குற்றங் கோளாறுகளுக்கெல்லாம் குடிவெறியே முக்கியகாரணம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. அங்ஙன மிருக்க, உஷ்ண பூமியில் அவசிய மில்லாததும், தேச சம்பிரதாயத்தோடு முரணியதும், பிடித்தால் விடாததுமான ஓர் ஈன வழக்கத்தை, நம்முள் சிலர் புதிதாய் அப்பியசிப்பது பரிதபிக்கத்தக்கதே. பள்ளு பறை என்று கீழ் ஜாதிகளாக மதிக்கப்படும் இனத்தாரைத் தவிர மற்றொருவருமே மது பானஞ்செய்யாதிருந்த இந் நாட்டிலே, இப்பொழுது மேல் ஜாதியாரும் குடிக்கக் கற்றுக்கொள்வது விபரீதமே. கீழ் ஜாதியாரின் கெட்ட வழக்கத்தை நீக்கி அவர்களை மேம்படுத்த முடியாமல், தாம் அவ்வழக்கத்தை அனுசரித்து, கீழ் ஜாதியாக முயலுதல் ஆச்சரியமே! தன் புத்தியைப் பாழாக்கித் தன்னை மிருகத்துக்குச் சமமாக்கும் மதுவை, தெய்வாம்சமான மனிதன் எவனாயினும் தன் வாய்க்குள் ஊற்றிக்கொள்வானா என்று, ஆங்கில கவீந்திரமே எழுதி யிருக்கிறார். இன்னும் அதிகம் பரவாவிடினும், நாளுக்கு நாள் நமக்குள் இக் கெட்ட வழக்கம் பரவிக்கொண்டு வருகிறது என்பது நிச்சயம். இதை வாசிக்கும் மித்திரர் பலர்க்குச் சுந்தரமையர் குடும்பத்தைப்போல் யஜமானன் குடியினால் கெட்டுப் போன குடும்பங்கள் சில ஞாபகத்துக்கு வரலாம். கெட்ட வழக்கத்தைப் பழகி எதிர்ப்பது வீரமாகாது: வெகுவாய் தோல்வியே சித்திக்கும். "துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு" என்பது போல, தீய வழக்கத்தைப் புலிபோலஞ்சி விலகுவதே ஆண்மையாகும்.

## 22. விதி வசம். *



பின்வரும் சிறுகதை பெயர்போன ஆங்கில வித்வான் ஒருவர் இயற்றி இயற்றியது :—அழகும் அந்தஸ்தும் ஐசுவரியமும் வாய்ந்த யௌவன கனவான் சவிலன் என்பவன், எவ்விதத்திலும் தனக்கேற்றவளான ஓர் யுவதியின் மேல் காதல்கொண்டு, மேல்நாட்டு வழக்கப்படி அவளுடன் பழகி, அவள் காதலையும் பெற்றானாக, மணமுகூர்த்த தினமும் குறிக்கப்பட்டது. இதனிடையிலே, ஒரு நாள், ஒரு விருந்துக்கூட்டத்தில், பிறர் பலர் கைகளைச் சோதித்து உள்ளதை உள்ளவாறு கூறிய ரேகை சாஸ்திர நிபுணன் ஒருவன், சவிலன் கைரேகைகளையும் பரிசோதித்து, முடிவில், அந்தரங்கமாகச் சவிலனிடத்தில் மட்டும் தான் கண்ட உண்மையைத் தனித்துக் கூறினான். அதாவது, சவிலன் தன் வாழ்நாளில் ஒரு கொலைபுரிவான் என்பதே. இரேகை சாஸ்திரியின் மேல் முழுநம்பிக்கை கொண்டுள்ள சவிலன், விலக்க முடியாத விதிவசமாக அதை முற்றிலும் நம்பி மனம் பதைத்துக், கடைசியில், தன் காதலியை தான் மணந்த பின்னர் விதிவசப்படி யாரையோ கொலைபுரிந்து அதனால் விளையும் துன்பத்துக்கு அவளையும் உட்படுத்துவதினும், தான் சிக்கிக்கொள்ளாத விதமாகச் சூழ்ச்சி செய்து, உடனே ஒரு கொலையைச் செய்துவிட்டு, பின்பு அவளை மணம்புரிந்து சுகமாக வாழ்வதே உசிதமென்று தீர்மானித்துக்கொண்டான்.

உடனே அவன் தன்னுள் ஆலோசித்து, யாரும் அறியாமே, பைத்தியம் பிடித்த நாயைக் கொல்வதற்கென்று கொடிய விஷக்குளிகை ஒன்றை விலைக்குவாங்கி,

* “துசிகர் துட்டிக்கதை” என்ற தலைப்பின் கீழ் இது முதலில் பிரசுரமானதால், இதுவும் சேர்க்கப்பட்டது.

அதை யோர் அழகிய செப்பில் வைத்து, எப்பொழுதும் சூலை நோயினால் வருந்திக்கொண்டிருந்த தன் சமீப பந்துவான ஒரு கிழவியிடம் அதைக்கொண்டுபோய்ச் சூலை நோய்க்கு அது கைகண்ட மருந்தென்று சொல்லி கொடுத்துவிட்டு, அயலூர் போய்விட்டான். சவிலன் எதிர்பார்த்த வண்ணமே, இரண்டு மூன்றுநாள் கழித்து, அக்கிழவி அன்று காலை படுக்கையில் இறந்து கிடந்தனளாகப் பத்திரிகைகள் மூலமாக அறிந்தான். சூலை நோயினாலும் வயோதிகத்தினாலும் அவள் இறந்ததாகவே யாவரும் கொண்டார்கள். சவிலன் மேல் எவரும் சந்தேகப்படவில்லை. அக்கிழவியின் மரணசாசனப்படி, அவள் சொத்தெல்லாம் சவிலனுக்கே சொந்தமாயின. ஆகவே, சவிலன் சந்தோஷமாகத் திரும்பிவந்து, தன் காதலியுடன் அக்கிழவி யிருந்த வீடு சென்று, அவள் பண்டங்களை யெல்லாம் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, அவன் காதலி, ஒரு பெட்டிக்குள் இருந்து ஓரழகிய செப்பைக் கண்டெடுத்து, சவிலனிடம் காட்டினாள். அதுவே சவிலன் கிழவிக்குக் கொடுத்த செப்பு. அதை அவன் திறந்து பார்க்க, அதற்குள் அவ்விஷ மாத்திரையும் அப்படியே இருந்தது. உடனே, கிழவி தன்னால் கொல்லப்படவில்லை, அகஸ்மாத்தாகவே இறந்தாள் என்று சவிலன் அறிந்து கொண்டு, மறுபடியும் பெருங்கவலை கொண்டான். தன் காதலி யிடமோ ஒன்றும் சொல்ல முடியவில்லை. கிழவி மரணத்தை யறிந்தவுடன் நிச்சயிக்கப்பட்ட மண முகூர்த்தம் பின்னும் மாற்றப்பட்டது. இவ்வண்ணமே சவிலன் தன் புத்திக்கு எட்டியமட்டும் பலவாறு சூழ்ந்து, வெடி மருந்தினாலும், இயந்திரப் பொறியினாலும் ஒரு கொலை செய்ய முயன்றான்; ஒன்றும் பலிக்கவில்லை. அவன் காதலியைப் பெற்றோர், மண முகூர்த்தத்தை அவன் பலமுறை மாற்றித் தாமதம் செய்வதைப் பொறுதவராய், அவளை வேறொருவனுக்கு மணம்

புரிந்து கொடுப்பதாகப் பேசலாயினர். சவிலன் பயந்து மனங்குழம்பி, தான் சிக்கிக்கொள்ளாமல் எவ்வாறு எவனாவது ஒருவனைக் கொலை செய்வது என்று ஆலோசித்துக் கொண்டு, ஒரு நாள் முன்னிரவில், தேம்ஸ் நதியின் பாலத்தின் வழியாய் நடந்து செல்லும்பொழுது, தனக்குக் குறி சொன்ன ரேகை சாஸ்திரி, அப்பாலத்தின் ஒரு பக்கத்துக் கிராதியின் மேல் குனிந்து, கீழே விரைவாய் ஓடும் நதியைப்பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அக்கம் பக்கம் எவரும் இல்லை. உடனே, சவிலன், பூனை போல் பதுங்கிச்சென்று, திடீரென்று ரேகை சாஸ்திரியின் இரண்டு கால்களையும் மேலே தூக்கி, அவனைத் தலைகுப்புற நதிக்குள் தள்ளிவிட்டான். பின்பு சவிலன் கவலையெல்லாம், அவன் ஒருவேளை, நீந்திக் கரையேறிப் பிழைத்து விடலாம் என்பதே. இரண்டு நாள் கழித்து, ரேகை சாஸ்திரியின் பிரேதம் கரையில் ஒதுங்கிக் கண்டெடுக்கப்பட்டதாகவும், அவன் தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டுமென்றும் பத்திரிகைகள் கூறினதைச் சவிலன் வாசித்து, மன வேதனை நீங்கி, தன் காதலியை மணம் புரிந்துகொண்டு, சுகமாக வாழலானான்.

இக்கதையில் நாம் கவனிக்கத் தக்கது, விதி வசம் என்று கூறும் ஒன்றில் சிலர்க்குள்ள முழு நம்பிக்கையே. ஊழ், விதி, தெய்வம், பழவினை, தலையிலெழுத்து, பிரமனெழுத்து, லலாடலிபி, கர்மம், பிராரத்துவம் என்பன யாவும், "தன் வினை தன்னைச்சுடும்," "அவரை போட்டால் துவரை முளையாது" என்னும் முதுமொழிகளுக்கு இணங்க, இருவினைப் பயன்கள் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகும் நீதியைக் குறிப்பனவே. பாரத கண்டத்திலே, இக்கோட்பாடு, தோட்டி முதல் தொண்டைமான் வரை, பாமரர் பண்டிதர் என்னும் பேதமின்றி, ஹிந்துக்களாவார் யாவராலும் கைப்பற்றி நம்பப்படுகின்றமை சொல்லாமே நன்கு விளங்கும். ஹிந்துக்கள், மேற்கூறிய

கதையிலே சவிலனைப்போல, அதைக் குருட்டுவிதியாகவேனும், அல்லது கடவுள் ஆக்கினையாகவேனும் நம்புவதில்லை; விதியை எதிர்கொண்டு, விதிவசத்தி லுள்ள நம்பிக்கையினால் தூண்டப்பட்டு, வேண்டுமென்றே கேடு செய்வதுமில்லை. ஹிந்துக்களது நம்பிக்கை: ஒவ்வொரு ஆன்மாவும் முத்திபெறும்வரை சகடக் கால்போல மாறி மாறிப் பிறக்கவும் சாகவும் செய்கின்றது; இருவினைப் பயனும் செய்தவனையே சேர, அவன் அதை அனுபவித்தே தீரவேண்டும், என்னும் கொள்கைகளை அடிப்படியாகக் கொண்டுள்ளது. "போன ஜன்மத்தில் என்ன பாவத்தைச் செய்தேனோ, இப்பொழுது இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கிறேன்." "அவன் என்ன புண்ணியத்தைச்செய்தானோ, அந்தச் சுகத்தை அனுபவிக்கிறான்" என்னும் வசனங்கள், "அறத்தாறிதுவென வேண்டா, சிவிகை, பொறுத்தானோ டூர்ந்தான் இடை" என்னும் குறளிலே தொனிப்பது மாத்திரமோ, சாதாரணமாய் மனித சஞ்சார முள்ள எங்குமே பாரக்கக் கேட்கப்படுகின்றன.

மேனாட்டு மேதையர் சிலர், ஆன்மா என்பது ஒன்று மரணத்துக்குப் பின்னும் நிலைத்துளதோ என்பதைப் பற்றி சந்தேகமாகக் கூறுகின்றனர்; அத்தகைய ஆன்மா ஒன்றுளது என்று நிச்சயமாக நம்புவோரும், ஒரு பிறவிக்கு மேலில்லை என்பர். நமது நாட்டிலோ ஆன்ம விஷய ஞானம் மிக வளர்ந்தேறி யுள்ளது. மேனாட்டில் சந்தேகத்துக்கும் வீண் வாதத்துக்குமே பொருளாகும் விஷயங்கள் பலவற்றை, நம்முள் பாமரரும் அறிந்திருக்கின்றனர். நமது முன்னோர் கண்டு பிடித்த அரிய பெரிய தத்துவங்கள், தொன்று தொட்டு இன்று மட்டும் கர்ண பரம்பரையாக வந்து, சாதாரண ஜனங்களுக்குள்ளும் வழங்குகின்றன. இவ்வாறு வழங்கும் கோட்பாடுகளுள், வினைப்பயனைக் குறிக்கும் விதிவசம் என்பது அதி முக்கியமானது.

கர்மம், மறுபிறப்பு, இவ்விரண்டுமே ஹிந்து மதத்தின் மூலாம்சம் என்பார் பலர். ஆகவே, இவ்விஷயத்தில் நமது நம்பிக்கை சிறிதேனும் தவறுமல் இருப்பின், மிக்க கேட்டுக் கிடமாகும் என்பது கூறுமே விளங்கும்.

இதை எழுதப்புகுந்தது, விதிவசத்தைத் தழுவிய பொதுஜன அபிப்பிராயம் சிறிது தவருக இருக்கின்றது; அவ்வழுவினுல் நமது நாட்டுக்கே பெருங்கேடு விளைந்திருக்கிறது; அவ்விதக் கேடு நீங்குவதற்கு, அவ்வபிப்பிராய பேதம் மாறிச் சீர்திருந்துவது இன்றியமையாதது, என்னும் இந்த எண்ணத்தினுல் தூண்டப்பட்டே. விதியின் வலியைப்பற்றியும், தேவர்களாலும் விதியை விலக்க முடியாதென்பதை விளக்கியும், நமது இதிகாச புராணங்களில் ஆயிரக் கணக்கான கதைகள் உளவெனினும், பரமாத்மாவின் கிருபை மட்டு முண்டாயின், சீவாத்மாக்கள் கர்ம பலனை எளிதில் விலக்கி விடலாமென்பது பக்தியோக மார்க்கத்தின் அடிப்படையாகும். "கர்மமானது கோடி கூடி நின்றுலும் நின் கருணைப்ரவாக அருளைத், தாகமாய் நாடினரை வாதிக்கவல்லதோ?" என்றுர் தாயுமானவர். அவ்வருள் எவ்வாறு உண்டாகும் என்பது, "தமியேற்கு அருள் தாகமோ சற்றுமிலை" என்னும் அடுத்த வாக்கியத்தால் வெளிப்படையாகும். அதாவது: மனிதனது இருவினைக்கும் மனமே காரணமாகின்றமையால், அம்மனத்தின் போக்குப்படியே வினையும் நிகழும் என்பது தெளிவு. கடவுளினது அருளை மனது வேண்டினுல், அதற்கேற்ற செயல்களைச் செய்வித்து அவ்வருளைப் பெறும் என்பது திண்ணம். ஆகவே, மேனுட்டு மேதை ஒருவர் கூறியது போல, இவ்வுலகத்திலே, "மனிதனிற் பெரிய தொன்றில்லை; மனிதனுள், மனதிற் பெரிய தொன்றில்லை" என்பது, கேவலம் உண்மையே. இது நிற்க.

ஒவ்வொரு மனிதனும் தான் செய்த வினையின் பயனை அனுபவித்தல் நியாயமே; ஆயினும், மனிதனது

ஆத்மா அவ்வினைப் பயனுக்கு அடிமையாகவே ஒழுகக் கடவது என்பது தவறு. எப்படி மனிதன் தன் வினையினால் ஒரு பயனை விளைக்கிறானோ, அப்படியே அவன் தன் வினையினால் அப்பயனை மாற்றவும் கூடும். இருவினைப் பயன் தத்தம் சக்திக்குத் தக்கபடி மனிதனை ஆட்டுவிக்கும் என்பது மெய்யே; ஆயினும், ஆக்கும் வன்மையுள்ள விடத்து, தான் ஆக்கியதை மாற்றவும் அழிக்கவும் வன்மை யிருக்குமென்று நம்புவதே பொருந்தும். உதாரணமாக, ஒரு தோட்டக்காரன் நிலத்தைப் பண்படுத்தி புல்லை விதைத்ததாக வைத்துக்கொள்ளுவோம்: அப்புல் முளைகிளம்பு முன்னரோ, முளைகிளர்ந்து வளரும் பொழுதோ, அதை மாற்றி எள்ளைப் பயிர்செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவனுக்குண்டானால், அவன் அப்படியே செய்யக்கூடாதோ? வெறும் நிலத்தைப் பண் செய்து எள் விதைப்பதினும், புல்லடர்ந்த நிலத்தைக் களைபிடுங்கி பண் படுத்தி, எள்பயிர் செய்து, பூமியின் சாரமெல்லாம் எட்பயிரையே சேரவும், புற்பயிர் ஒன்றுமே இல்லாததாகவும் பயிர் செய்தல், அதிக சிரமமான வேலையே, அதில் சந்தேகமில்லை. ஆயினும், மனவூக்கமும் விடா முயற்சியும் உளவாயின், அது முடியாத காரிய மன்று. விதிவசம் என்னும் முன் வினைப்பயன் விஷயத்திலும் இது பொருந்தும். ஊழ் வலியைப் பற்றிக் கூறும்பொழுது, திருவள்ளுவர், ஊழானது முயற்சிக்கும் மடிக்குமே காரணமாகுமென்றும், மற்றொன்று சூழினும் தான் முந்துறும் என்றும், அறிவையே பேதைப் படுக்கவும் விரிக்கவும் செய்யுமென்றும் கூறியுள்ளாராயினும், அவரே, "தெய்வத்தானாகா தெனினும், முயற்சி, தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்றும், "ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" என்றும் கூறி யிருப்பது, மறக்கற் பாலதன்று, ஆகவே, மனிதன் விதிக்கு அடிமை யல்லன், அதை முன் வினையால் விளைத்தது

போலவே பின் வினையால் மாற்றவும் வலிமை யுடையான் என்பது, யுக்தி புத்திக்கு மாத்திரமோ, பெரியோர் அபிப்பிராயத்துக்கும் ஒத்ததாகும். மகுடாபிஷேகத்துக்குக் குறிப்பிட்டிருந்த முகூர்த்தத்திலேயே வனவாசம் விதிக்கப் பெற்ற ஸ்ரீராமன், கோபமுற்ற தன் தம்பியை நோக்கி :—

"நதியின் பிழையன்று நறும்புன லின்மை; அற்றே :
பதியின் பிழையன்று ; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று ; மகன் பிழை யன்று ; மைந்த!
விதியின் பிழை; நீ இதற் கென்னை வெகுண்ட தென்றான்"

இவ்வாறு விதிவச மென்று கூறிய அண்ணனுக்கு இலக்குமணன் அளித்த விடை கவனிக்கத் தக்கது :

"கோளிழைத்தாள் மதிக்கும் மதியாய், முதல் வானவர்க்கும் வலீ இதாம் விதிக்கும் விதியாகும் என் வில்தொழில் காண்டி என்றான்."

ஆகவே, தேவர்கட்கும் வலியதான தெய்வ சங்கல்பம் என்று சொல்லப்படும் விதியும் கூட, மனுஷப் பிரயத்தனத்துக்கு அடங்காத தில்லை என்பது மலையிலக்காயிற்று. விதியென்று சொல்லப்படும் வினைப்பயனது வலியை எடுத்துக்காட்டும் கதைகள் பல உளவேனும், தமது ஊக்கத்தாலும் விடா முயற்சியாலும் விதியை வென்று மேம்பட்டவரது சரித்திரங்களும் எத்தனையோ உள ஆதலால், இயற்கையில் அமைந்த புத்தியும் தேகவலியும் உள்ள மட்டும், என்ன கேடு நேரினும், என்ன இடையூறுகள் குறுக்கிடினும், விதிவசத்தை நொந்து சும்மா இருத்தல் ஆண்மைக் கழகன்று, பெண்மைக்குப் பெருமையு மன்று. விதிவசத்தையே முழுதும் நம்பி ஒரு மனிதனுமே நடக்கவில்லை என்பது திண்ணம். ஏனெனின், விதிபோல் நடக்கிறதென்று, தான் இருந்த இடத்திலேயே மண் சுவர் போல வீற்றிருப்பான் எவனையும் கண்டிலேம். சாதாரண முயற்சியுடன் செய்யும் வினைகளில், தடைகளும் நிர்ப்பந்

தங்களும் சங்கடங்களும் நேரும்பொழுது தான், மாந்தர் மனந்தளர்ந்து விதியை நொந்து மலைக்கின்றனர். அத்தறுவாயில்தான் முயற்சியின் வன்மையையும் ஊக்கத்தின் பெருமையையும் ஊன்றி நினைந்து ஒழுகவேண்டுவது. விதிவசம் என்பதின் போலிக்குணம் சொற்ப யோசனைக்கும் வெளிப்படும். தம்மனம் போனபடி, கடவுள் ஒருவர் சிலரைச் செல்வராகவும், சிலரை வறியராகவும், சிலரை யஜமானராகவும், சிலரை அடிமைகளாகவும் சிருஷ்டித்தார் என்று கூறுவது, கடவுளின் குணத்தையே இகழ்வதாகும். ஆதலின், உலக வாழ்க்கையிலே காணப்படும் ஏற்றத்தாழ்ச்சிகள், மாந்தரது முன் வினைப்பயனென்று கூறுதலே பொருந்தும். அங்ஙனம் கூறுவதில், மனுஷப் பிரயத்தனத்தை மிஞ்சியதும், ஊக்கத்துக்கும் விடாமுயற்சிக்கும் எட்டாதது மான ஒன்று உளதென்று நம்புவது, யுத்திபுத்திக் கேனும் அனுபவத்துக் கேனும் பொருந்தவில்லை. ஆகவே, விதிவலியதே எனினும், மதி அதனினும் வலியதென்பதை மறவாமே ஒழுகும் மாந்தரே மக்களுட் சிறந்தோராவர்; மற்றோர், மக்கட் பதடிகளாகவே எண்ணப்படுவர்.

நமது நாட்டார் யாவரும் இவ்வுண்மையை ஒரு கணமும் மறவாது, தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் எக்குறையும் நேராத வண்ணம், ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் ஒழுகுவாராக!

PRINTED AND PUBLISHED BY A. MADHAVIAH
AT THE AUTHORS' PRESS AND PUBLISHING-HOUSE, MYLAPORE, MADRAS.

SUPPLEMENT TO THIS ISSUE OF "PANCHAMRITAM"

# CATALOGUE OF BOOKS.

## The Authors' Press and Publishing-House

PRINTERS, PUBLISHERS, BOOK-SELLERS, STATIONERS AND COMMISSION AGENTS, ED. ELLIOT ROAD, MYLAPORE, MADRAS.

## ENGLISH BOOKS

DR. RABINDRANATH TAGORE—MACMILLAN'S INDIAN EDITION

**One Rupee each**—Chitra, The Gardener, The Crescent Moon, Sadhana, Poems of Kabir, Gitanjali, The Post Office, Stray Birds, The Cycle of Spring, Lovers' Gift, Fruit Gathering, Nationalism, Hungry Stones, Poems from Tagore, Stories from Tagore—15 Vols.

**Rs. 1 4 0 each**—Creative Unity, The Fugitive, The King of the Dark Chamber, Personality—4 Vols.

**Rs. 1 8 0 each**—Mashi, My Reminiscenses, Sacrifice—3 Vols.

**Rs. 2 8 0 only**—The Home and the World.

**Rs. 26 0 0**—Set of 23 Vols. costing 27 Rs.—if ordered together.

THE INDIAN PUBLISHING-HOUSE

Books by different well-known Authors, approved by the Text Book Committee=(1) Dhruva 2 As. (2) Savitri, Sri Krishna and Prahlada—each 3 As. (3) Ramayana and Damayanti—each 4 As. (4) *Mr. A. Madhaviah's Markendeya*—5 As.; *Nanda*—9 As. (5) Scenes from the Ramayana—9 As. (6) Guru Noodle—8 As. (7) *Mr. A. Madhaviah's Tamil Classics for English Readers—Manimekalai*—1 Re. (8) English Reading Book No. I—Rs. 1 4 0.

*Mr. A. Madhaviah's Works*—See later.

OTHER NATIONALIST AND MISCELLANEOUS PUBLICATIONS

**Two annas only**—Kalidasa's Seasons by AUROBINDO GHOSE.

**Four annas each**—(1) Advance India! (2) The Issue in India (3) The Christ of To-day (4) Fight for freedom (5) Dyarchy and After (6) Indian Home Rule (7) Religion and Morality (8) Rule by Murder (9) The Gospel of Swadesi (10) Agitate (11) The Foreign Policy of India (12) The Menace from the West (13) The Psychology of Empire (14) Reform or Revolution (15) *The Ballad of the Penniless Bride.*

**Six annas only**—The Political Philosophy of Gandhi.

**Eight annas each**—(1) Meaning of N. C. O. by C. F. ANDREWS (2) Tolsoy's How I came to believe (3) What is Religion? (4) Evils of Government (5) Some Financial Problems of India (6) Sayings of Kabir (7) Sayings of Tulasidas (8) Aphorisms of Narada (9) The Truth of Life (10) Mahatma Ghandhi's The Indian Home Rule (11) Nidhi Dharma (12) The Need in Nationalism by AUROBINDO GHOSE (13) Terence Macswiney by C. F. ANDREWS (14) Food, Mind and Health by B. HOUGHTON (15) From the Council to God by JOSEPH MAZZINI (16) *Thillai Govindan's Miscellany* (17) Brockway's India and Its Government.

**Ten annas only**—*Muthumeenakshi*—The Auto-biography of a Brahmin Girl by A. MADHAVIAH, translated from Tamil by the Author's daughter—with introduction by SIR C. SANKARAN NAIR.

**Twelve annas each**—(Mazzini's Duties of Man (2) Gandhi's Jail Experiences by Himself (3) Ethics of Destruction by GANDHI, TAGORE AND ANDREWS (4) Tolstoy's Slavery of our Times (5) First Step (6) Gandhi's Guide to Health (7) Finance and Foreign Exchange by A. WEIGHT (8) Divekar's Future of Indian Fiscal Policy (9) Faith and the Future by JOSEPH MAZZINI (10) *Kusika's Short Stories—Part I.*

**One Rupee each**—(1) Report of the Civil Disobedience Enquiry Committee (2) Brockway's N. C. O. in Other Lands (3) Rau's Plunder of India's Wealth (4) Philosophy of N. C. O, by BHAGAVANDAS (5) Charka by GUPTA AND RAY (6) Pearce's Scout Pocket Book (7) Indian Industrialism by K. V. G. IYER (8) Tolstoy's Relation of Sexes (9) Ideal and Progress by AUROBINDO GHOSE (10) Esha Upanished (11) The National Being by A. E. (12) Greater India by R. TAGORE (13) An Ideal Commonwealth *or* the Aims of Labour by A. HENDERSON (14) Pearson's Dawn of a New Age (15) To the Students by ANDREWS (16) Mazzini's Duties of Man with Life and Introduction by PEARSON (17) The Failure of European Civilization by STOKES (18) *Lieut. Panju*—A MODREN INDIAN—A most fascinating Novel by Mr. A. MADHAVIAH (19) *Excise and Liqnor Control*—By DR. JOHN MATTHAI, University Professor of Indian Economics (20) *Thillai Govindan*—By A. MADHAVIAH, with Introduction by Frederic Harrison—(Fisher Unwin's edition) (21) *Satyananda*—By Mr. A. MADHAVIAH (22) *Poems*—By A. M.—with Introdnction by Dr. Russell (23) *Manimekalai*—By A. M.—with Introduction Dr. Rao Saheb S. K. Iyengar.

**Rs. 1 4 0 each**—(1) Aurobindo Ghose's Songs to Myrtilla (2) Writings of Lala Hardayal (3) Selections from *Bandemataram* (4) Kamban's Kosala by T. N. SESHACHALAM.

**Rs. 1 8 0 each**—(1) Har Dayal's Our Educational Problem (2) Mahatma Gandhi by ROMAIN ROLLAND (3) Bhai Paramanand's The Story of My Life (4) The Wherefore of the Worlds by PAUL RICHARDS (5) O'SHIEL'S The Making of a Republic (6) Wellock's Ahimsa and the World Peace *or* the Case for Non-Violence (7) National Self-Realisation by STOKES (8) *The Story of the Ramayana*—By A. MADHAVIAH—with Introduction by SIR P. S. SIVASWAMY IYER—F. W. paper; Cloth-gilt—Illustrated; Macmillan's Edition (9) *Clarinda—A Historical Novel of South India* in the 18th Century—By A MADHAVIAH (10) Seshachallum's Thoughts for Statesman (11) On the Sand Dunes by K. S. VENKATRAMANI.

**Rs. 1 12 0 each**—Speeches of Aurobindo Ghose.

**Rs. 2 0 0 each**—(1) Howsin's India's Challenge to Civilisation (2) "Hind Swaraj"=Fac-simile edition (in Mahatma Gandhi's own hand-writing) (3) Principles of Freedom by TERENCE MACSWINEY (4) Miss Normanton's India in England (5) Col. Wedgwood: The man and his work by LALA LAJPAT RAI (6) R. Tagore: A Study by K. S. R. SASTRY (7) *Clarinda*—A historical Novel of South India in the XVIII Century by A. MADHAVIAH, Cloth-gilt.

**Rs. 2 4 0 each**—(1) Nehal the Musician and other Stories by SNEHALATA SEN (2) The Indian Teachers in China by P. BOSE.

**Rs. 2 8 0 each**—(1) Significance of Indian Nationalism (2) Gandhi and Anarchy by Sir C. S. NAIR (3) Wadia's Labour in Madras.

**Rs. 3 8 0 only**—K. C. MAHINDRA'S Indian Currency and Exchange—(Prize Essay).

**Rs. 4 0 0 each**—(1) Mahatma Gandhi's Young India—Khadder bound (2) Essays on the Gita by AUROBINDO GHOSE.

**Rs. 4 6 0**—*Malati and Lata*—By D. MADHAVA RAO.

**Rs. 4 8 0 each**—(1) LAJPAT RAI'S National Education in India (2) LUPTON'S Happy India.

**Rs. 30 0 0**—*Young India*—Edn. De luxe.

---

**Foot-Note.**—*Any Books not in this Catalogue will be procured and supplied by us without extra charge.*

MR. A. MADHAVIAH'S WORKS

I. *Thillai Govindan*—With an Introduction by Frederic Harrison—English edition on F. W. paper by FISHER UNWIN ... ... 1 0 0

*Some Opinions*—(1) *F. H.*—"This remarkable little book—It is beautifully written—a fascinating picture" (2) *Sir F. A. Nicholson K. C. S. I.*—"The book is most interesting" (3) *R. E. Holland I. C. S.* "It is the only book I have come across which gives one a real insight into Native life" (4) *M. C. C. Mag*—Whoever wrote this had genius—It is the most life-like picture of Modern Indian Life—Repeatedly recalls Thackeray to one's mind". (5) *I. S. R.*—"One of the most scathing exposures of much which passes for religion and morality among us." (6) *The Englishman*—"The memoir is certainly worth reading."

II. *Satyananda*—An entrancing Social Novel ... ... Re. 1 0 0

*Some Opinions*—(1) *Frederic Harrison*—"I have now read carefully with very great pleasure and admiration—I have found it intensely interesting—it is a production of very remarkable originality and power" (2) *Madras Mail*—"The Novel is remarkable in many ways and ought to find a wide circle of readers."

III. *The Story of the Ramayana*—Retold in a simple straight manner—with an Introduction by SIR P. S. SIVASWAMY IYER—on F. W. paper—Cloth-Gilt—*Illustrated*—Macmillan's edition—Reduced price Rs. 1 8 0

*Some Opinions*—(1) *Dr. Sir S. Subramania Iyer*:—"No Indian youth loving his land and its ancient tradition and greatness should fail to read and profit by this most pleasant book." (2) *The Rt. Hon'ble Mr. V. S. Srinivasa Sastry*:—"Teachers throughout India will find in it an effective means not only of teaching English composition, but of training the emotions and inculcating high ideals of duty.'. (3) *Prof. K. B. Ramanathan, M. A., B. L., L. T.*—"As good an English classic in its way as Lamb's Tales from Shakespeare..." (4) *The Hon'ble Mr. L. D. Swamikannu Pillai, M. A., LL. B., I. S. O*:—"......I read it through and must say its spirit is as good as its English." (5) *The Modern Review*:—"It is just the book for boys to read. ......The book fills a real gap and should prove highly useful to students all over India......"

IV. *Clarinda*—A Historical Novel of South India in the latter part of the 18th century—Price Re. 1--8--0 a copy. Cloth-Gilt Rs. 2 0 0

V. *Poems*—(1) "Reflect the new spirit that has been awakened in the people of India." (2) "If English is to be the language of India, few if any books yet written give more promise for the future of Indian poetry than this," etc.... ... ... ... ... ... Re. 1 0 0

VI. *Kusika's Short Stories*—Revised—Edition 15 Stories—0 12 0

(Second Part in the Press and will be out shortly).

*The Indian Review*—"Kusika's stories are among the classics of their kind, full of graphic and amusing pictures of South Indian life, as vivid and instructive as anything yet attempted in this side of India."

VII. *Lieut.-Panju—A Modern Indian*—A most fascinating Novel of South-Indian life ... ... ... ... ... Price Re. 1 0 0

*The Daily Express*—"......A striking feature of the book is the extraordinary extent to which it has succeeded in being true to life......" *The Indian Review*—"A Kusika story on a bigger canvass...".

VIII. *Thillai Govindan's Miscellany*—A series of essays on social, religious and other topics ... ... ... ... ... Price 0 8 0

IX. *Muthumeenakshi*—The Autobiography of a Brahmin girl—Translated from the Tamil original by the Author's daughter—With an Introduction by SIR C. SANKARAN NAYAR ... ... Price 0 10 0

X. *Manimekalai*—Tamil Classics for English Readers Series 1 0 0

XI. *Nanda*—Illustrated—The Pariah who overcame caste 0 9 0

XII. *Markandeya*—Illustrated—The youth who conquered fate As. 5

XIII. *The Ballad of the Penniless Bride*—Superior Feather Weight Paper ... ... ... ... ... ... ... Price 0 4 0

ஸ்ரீ. அ. மாதவையர் புஸ்தகங்கள் :—

[1] பத்மாவதி சரித்திரம்—முதலிரண்டு பாகங்கள்-416 பக்கங்கள்-10 படங்கள். எல்லா விதத்தாலும் தமிழ் நாவல்களில் முதன்மை வாய்ந்தது-ஐந்தாம் பதிப்பு-ரூ 2-0-0.

குறிப்பு—இந்த நாவலின் மூன்றாம் பாகம் இப்பொழுது நூதனமாக மாதந்தோறும் பஞ்சாமிர்தம் பத்திரிகையில் வெளி வருகின்றது.

[2] விஜய மார்த்தாண்டம்—இரண்டாம் பதிப்பு-1-4-0. மதராஸ் மெயில்-இந்த நாவலைப்பற்றி :—"கதை மிகவும் புதுமாதிரியாகவும் ஆனந்தகரமாகவும்; நடை, செந்தமிழ் எழுதுவதில் கியாதி பெற்ற இந்த நாவலரின் கீர்த்திக்குப் பொருந்தியதாகவும், இருக்கின்றது" என்று சொல்லிற்று. இந்த நாவல், I காதற் பத்து, II கற்புப் பத்து என்று இரண்டு பாகங்கள் அடங்கியது. பழமொழிக் களஞ்சியம். நமது ஜமீன்தார்கள், நகரத்துச் செட்டிகள், பிடுங்கித் தின்னும் பிராமணர், கொள்ளைக்காரர், நாட்டுப் புறத்தார் முதலியோர்களின் நடபடிக்கைகளையும்; கோற்டு விசாரணை முதலியவற்றையும்; ஸ்திரீ புருஷருக்குள் ஏற்படும் காதலின் மெய்ப் பண்பையும், அருமையாய், உள்ளங்கை நெல்லிக்கனி போல், எடுத்துக் காட்டி விளக்குவது. பல விதங்களில் இது போன்ற இனிய நாவல் தமிழில் இல்லையெனலாம். ருசிகரமான அரிய கவிகளும் மொழி பெயர்ப்புக்களும் அடங்கி யிருக்கின்றன-வாங்கி வாசிக்கத் தொடங்கினால், கடைசிப் பக்கம் முடியும் வரை கீழே வைக்க மனம் வராது.

[3] முத்து மீனாக்ஷி—முதல் பதிப்பு ஆகிவிட்டது; இரண்டாம் பதிப்பு அச்சிலிருக்கிறது-ஒரு மாதத்தில் வெளிவரும்.

[4] உதயலன் : என்னும் கோற்கைச் சிங்களவன் :— இரண்டாம் பதிப்பு-விலை 0 12-0.

ஷேக்ஸ்பியர் கவீந்திரரின் நாடகங்களில் மிகச் சிறந்ததான "ஓதெல்லோ என்னும் வெனிஸ் மோரியன்" என்ற நாடகத்தைத் தமிழுக்குப் பொருந்த அழகாய் அமைத் தெழுதியது-பல பத்திரிகைகளாலும் கற்றோராலும் சிலாகித்துப் புகழப்பட்ட அருமையான மொழி பெயர்ப்பு-இதைப் படித்தால் ஷேக்ஸ்பியர் மகா கவியின் நாடகப் போக்கும் உலக ஞானமும் விளங்கும். இதுவே அவர் நூல்களிலெல்லாம் முதன்மையானது என்பார் பலர்.

[5] திருமலே சேதுபதி :—தேச பக்தியை வளர்க்கவல்ல ஒரு தமிழ் நாடகம் விலே 0-8-0 (இரண்டாம் பதிப்பு அச்சிலிருக்கிறது)

[6] பொது தர்ம சத்கீத மஞ்சரி :—விலே 0-4-0. ரூ 100 பரிசு பெற்ற "இந்தியக்கும்மி"யும், இன்னும் பல தேசிய கீதங்களும், பதங்களும், ஆங்கில காவிய மணிகளின் அருமையான மொழி பெயர்ப்புக்களும் இதில் அடங்கி யிருக்கின்றன-ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது ; இதைக் கருதியே சரச விலைக்கு விற்கப்படுகிறது.

[7] சித்தார்த்தன் :—கௌதம புத்த பிரானது திவ்ய சரித்திரத்தைத் தனித்தமிழ் வசன நடையில் அழகாய்க் கூறுவது—புத்த சரிதை என்னும் இனிமையான காவிய அநுபந்தத்துடன் கூடியது-0 12-0.

[8] பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய் நவசரங் கொழிக்கக் கூறுவது 0-12-0.

[9] பாலவிநோதக் கதைகள்—சிறுவர் சிறுமிகளுக் கேற்ற அருமைக் கதைகள்—சித்திரப்படங்களுடன்-0 4 0.

[10] இந்தியக் கும்மி—மட்டும் 0-0-6.

[11] புதுமாதிரிக் கல்யாணப் பாட்டு—யாவரும் கட்டாயம் வாசிக்க வேண்டியது-0-2-0.

[12] ஆசாரச் சீர்திருத்தம் 0-2-0.

[13] பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம். 0 6-0. இந்த இனிய நாடகம் நாலு காட்சிகளில் வெகு ரஸமாயிருக்கும்-வீடுகளில் சிறுவர் சிறுமிகள் சுலபமாய் ஆடிப் பார்க்கலாம்-பஞ்சாமிர்தம் பத்திரிகையின் வருஷச் சந்தாதாரர்களுக்கு, இது பாதி விலே [0-3-0]க்குக் கொடுக்கப்படும்.

[14] பஞ்சாமிர்தம்—சித்திரப்படங்களுள்ள ஒரு மாதாந்தாப் பத்திரிகை-இதைப்பற்றிய அபிப்பிராயங்களை வேறிடத்திற் காண்க-இதினும் சிறந்த பத்திரிகை தமிழிலில்லை என்பது பலர் கொள்கை-வருஷச் சந்தா-உள்நாடு 5 ரூ ; வெளிநாடு 6 ரூ ; தனிப் பிரதி 8 அணு.

# பஞ்சாமிர்தத்தைப் பற்றிய

# சில அபிப்பிராயங்கள்

சித்திரை மாதப் பகுதி.—88 பக்கங்களும் 18 படங்களும் வேறு பல அலங்காரங்களும் உள்ளது. *அதைப் பற்றிய சில அபிப்பிராயங்கள் வருமாறு:*—(1) ஸ்ரீ. டி.வி. சேஷகிரி ஐயர், மாஜி ஹைகோர்ட் ஜட்ஜு:—"*பத்திரிகை இப்படித் தான் இருக்க வேண்டும்*" (2) சேலம் ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியார் :—"*வெகு நன்றா யிருக்கிறது*" (3) Sir. பி. ராமநாதன்.—"*பிரயோஜனப் படுமென்று காண்கிறது*" ரேவ் பாப்புலி:—(4) "*நற்பொருள் விருந்து—தமிழ் மக்கள் முன்னேற்றத்துக்கு இன்றி யமையாதது*" (5) ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி, எம். எல். ஸி :— "*எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது*":—(6) பண்டிதை அசலாம்பிகை அம்மாள் :—"*எவரே விரும்பார்?*" (7) நவசக்தி :—"*மனதைக் கவரத்தக்க கட்டுரைகள் பல மிளிர்கின்றன*" (8) நாடார் குல மித்திரன் :—"*இதன் மேன்மையை விளம்புதல் முடியுமோ?*"

வைகாசி மாதப் பகுதி.—90 பக்கங்களும் 18 படங்களும் வேறு பல அலங்காரங்களும் உடையது :—*இரண்டு அபிப்பிராயங்கள் வருமாறு* :—(1) ஸ்ரீ. வெ. ப. சு. முதலியார், ஜி. பி. வி. ஸி :— "*எல்லா வற்றையும் உத்தேசித்து, இப்பொழு துள்ள தமிழ்ப் பத்திரிகைகளி லெல்லாம் இது தான் சிறந்தது. விஷயங்களின் பெருமையையும் நேர்த்தியையும் கவனித்தால், நான் எதிர் பார்த்ததைவிட எவ்வளவோ விலை சுலபமா யிருக்கிறது*" (2) ரேவ் பாப்புலி:—"*முதலதினும் மேன்மையா யிருக்கிறது.*" ஒவ்வொரு தமிழ் வீட்டிலும் உலவ வேண்டியது—வருஷச் சந்தா :—உள்நாடு-ரூ.5 ; *வெளி நாடு-ரூ. 6 தான்.*

இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள் !

Supplement to this Issue of பஞ்சாமிர்தம்.

ஆசிரியர் அச்சுப்பிரசுராலயம்-புஸ்தகசாலை
எட்வர்டு எலியட்ரோடு-மயிலாப்பூர்-சென்னை

# தமிழ்ப் புஸ்தகங்கள்

குறிப்பு :—இந்த ஜாப்தாவில் இல்லாத புஸ்தகங்கள் எது வேண்டுமாயினும், வேறு சார்ஜில்லாமல், கிடைக்குமிடத்திருந்து வாங்கி யனுப்பப்படும்.

I மகா மகோபாத்யாய பண்டிதர் உ. வே. சாமிநாதையர் பிரசுரங்கள் (1) சீவக சிந்தாமணி-10 ரு. (2) சிலப்பதிகாரம். 8-12-0 (3) மணி மேகலை-6-4-0 (4) பத்துப்பாட்டு, 5-0-0 (5) ஐங்குறு நூறு 2-0-0 (6) பதிற்றுப்பத்து 1-14-0 (7) பரிபாடல், 2-8-0 (8) புறநானூறு-5-10-0 (9) நன்னூல்-3-2-0 (10) மணிமேகலைக் கதைச்சுருக்கம்-0-10-0 (11) திருவிளையாடல் புராணம்-2-8-0 (12) திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம்-0-4-0 (13) திருப்பூவண நாதருலா-0-5-0 (14) வண்டு விடு தூது-0-2-0 (15) திருவாவடுதுறைக் கோவை-0-8-0 (16) திருப்பெருந் துறைப் புராணம்-1-4-0 (17) திருவாரூர்த் தியாகராச லீலை 0-12-0 (18) மண்ணிப் படிக்கரைப் புராணம்-0-8-0 (19) தனியூர்ப் புராணம் 0-2-0 (20) நற்றிணை 5-0-0 (21) பெருங்கதை-7-8-0.

II அ. மாதவையர் புஸ்தகங்கள் :—பின்னால் பார்க்க.

III இந்தியன் பப்ளிஷிங் ஹௌஸ் பிரசுரங்கள் :—(1) செய்யுள் கொத்து I-0-8-0 (2) ஷை II-0 10-0 (3) சுகிர் லாபம்-0-5-0 (4) சந்திவிக்கிரகம் 0-5-0 (5) பரமார்த்த குருகதை 0-5-0 (6) சீவகன் 0-8-0 (7) மணி மேகலை 0-9-0 (8) கோவலன் 0-10-0 (9) சிறு கதைத்திரள் I 0-2-0 [10] ஷை II-0-2-6 [11] ஷை III-0-3-0 [12] பல தேசக் கதைக்கொத்து I 0-4-0 [13] ஷை II-0-5-0 [14] இந்து தேச சரித்திரம்-I-0-10-0 [15] ஷை II-0-10-0 [16] நளன்-0-12-0 [17] பால விநோதக் கதைகள்-படங்களுடன்-அ. மாதவைய ரெழுதியன-0-4-0 [18] நன்றியறியா மகன் 0-12-0 [19] உரை நடைக் கொத்து I-0-9-0 [20] உரை நடைக் கொத்து II-0-10-0 [21] கொசுவும் மலைச்சுரமும்-0-6-0.

IV ஸ்ரீ. S. கிருஷ்ணசுவாமி சர்மா இயற்றியன :—[1] இராஜ ராஜ சோழன் 0-10-0 [2] நெபோலியன் 1-8-0 [3] டால்ஸ்டாய் 0-4-0 [4] இந்தியா இழந்த தனம் 1-0-0 [5] கும்ப மஹாராணா 0-6-0 [6] இராஜரீக சாஸ்திரம் 1-0-0 [7] அசோக சக்ரவர்த்தி 0-8-0.

V ஸ்ரீ. C. சுப்ரமணிய பாரதியார் :—[1] சுதேச கீதங்கள் I-1-0 0 [2] ஷை II-1-0-0 [3] பாரதி நூல்கள் III-0-10-0 [4] ஞானரதம் 0-8-0 [6] பாஞ்சாலி சபதம்-0-12-0.

VI ஸ்ரீ. தி. சே. சுப்ரமணிய ஐயர், M.A; L.T; செல்வ விருத்தி விளக்கம்–1–0–0.

VII இந்துபாக சாஸ்திரம்—ஸ்ரீ. P. V. ஜகதீசையர் எழுதியது–திருத்திய இரண்டாம் பதிப்பு–முதற் பதிப்புக்கு Dr. ஸர் S. சுப்பிரமணிய ஐயரும், இரண்டாம் பதிப்புக்கு குமார மங்கலம் ஜமீன்தார் Dr. P. சுப்பராயன், பாரிஸ்டரும் முகவுரை எழுதியிருக்கின்றனர்–பாக முறைகளுடன் பதார்த்தங்களின் குணங்களையும் பழைய பாக சாஸ்திரங்களின்படி விளக்குவது–டெக்ஸ்ட் புக் கமிட்டியார் அங்கீகரித்தது. விலை 0–8–0.

VIII ஸ்ரீ. ராவ் சாகிப் ப. சம்பந்த முதலியார் நாடகங்கள்-பிரதி எட்டணா :—ஊர்வசியின் சாபம் [2] சந்திர ஹரி [3] பிரகசனங்கள் [4] கீத மஞ்சரி I [5] சிறுத்தொண்டர் [6] காலவ ரிஷி [7] சபாபதி [8] பொங்கல் பண்டிகை [9] யயாதி [10] முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும் [17] பேயல்ல பெண் மணியே [18] சாரங்கதரன் [19] ரஜபுத்ர வீரன் [20] நற்குல தெய்வம்.

பிரதி பத்தணா :—[1] வேதாள உலகம் [2] பொன் விலங்குகள் [3] மார்க்கண்டேயர்.

பிரதி பன்னிரண்டணா :—[1] விஜயரங்கம் [2] லீலாவதி சுலோசனை [3] மனோஹரன் [4] கள்வர் தலைவன் [5] வள்ளி மணம் [6] மெய்க்காதல்.

பிரதி பதினாலணா—[1] ரத்னாவளி [2] இரண்டு நண்பர்கள்.

பிரதி ஒரு ரூபா :—[1] அரிச்சந்திரன் [2] அமலாதித்யன் [3] விரும்பிய விதமே–[4] புத்தாவதாரம்.

IX எஸ். ரேங்கம்மாள் எழுதிய [1] காந்தி சரித்திரக் கும்மி–4–அணா [2] பாரத தேசிய கீர்த்தனைகள்–6 அணா.

X சுதேச மித்திரன் பிரசுரங்கள்—[1] பாரதஜன சபை I & II ரூ 2. [2] வஸந்தோத்யானம் I & II ரூ3. [3] ஆழ்வார்களின் சரித்திரம்–1–8–0 [4] பொற்சேருடி 1–4–0 [5] தலையணை மந்திரோபதேசம் 1 ரூ [6] வியாபார தந்திரம் 1–8–0 [7] விநோத கதா மஞ்சரி 1 ரூ [8] கதா மோகன ரஞ்சிதம் I-II-III 2–8–0 [9] கதா ரத்நம்-0–12–0 [10] தீன தயாளு 0–12–0 [11] திக்கற்ற இரு குழந்தைகள் 1–8–0 [12] பாமாலை 0-4–0 [13] லாலா லஜபதிராய் 0–8–0 [14] சுய ராஜ்யம் 0-8–0 [15] சரித்திரக் கொத்து 2–4–0 [16] இரத்ந மாலிகை 0–12–0 [17] துருவன் 0–5–0 [18] மேனகா I–1–8–0 [19] ஷை II–1–8–0 [20] தானவன் 0–12–0 [21] மிருச்சகடி 0–4–0 [22] கதா மாலிகை 1 ரூ [23] காந்தி விசாரணை 0 4 0 [24] ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் 0 6 0.

XI ஸ்ரீ. ந. இராமபத்ர தீக்ஷிதர்—பெரியோர்க்கும் சிறியோர்க்கும் வேடிக்கை விநோதக் கதைகள் 0 4 0.

[6] பொது தர்ம சத்கீத மஞ்சரி :—விலை 0-4-0. ரூ 100 பரிசு பெற்ற "இந்தியக்கும்மி"யும், இன்னும் பல தேசிய கீதங்களும், பதங்களும், ஆங்கில காவிய மணிகளின் அருமையான மொழி பெயர்ப்புக்களும் இதில் அடங்கி யிருக்கின்றன-ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது; இதைக் கருதியே சாச விலைக்கு விற்கப்படுகிறது.

[7] சித்தார்த்தன் :—கௌதம புத்த பிரானது திவ்ய சரித்திரத்தைத் தனித்தமிழ் வசன நடையில் அழகாய்க் கூறுவது—புத்த சரிதை என்னும் இனிமையான காவிய அநுபந்தத்துடன் கூடியது-0-12-0.

[8] பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய் நவசரந் தொழிக்கக் கூறுவது-0-12-0.

[9] பாலவிநோதக் கதைகள்—சிறுவர் சிறுமிகளுக் கேற்ற அருமைக் கதைகள்—சித்திரப்படங்களுடன்-0-4-0.

[10] இந்தியக் கும்மி—மட்டும்-0-0-6.

[11] புதுமாதிரிக் கல்யாணப் பாட்டு—யாவரும் கட்டாயம் வாசிக்க வேண்டியது-0-2-0.

[12] ஆசாரச் சீர்திருத்தம்-0-2-0.

[13] பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம். 0-6-0. இந்த இனிய நாடகம் நாலு காட்சிகளில் வெகு ரஸமாயிருக்கும்-வீடுகளில் சிறுவர் சிறுமிகள் சுலபமாய் ஆடிப் பார்க்கலாம்-பஞ்சாமிர்தம் பத்திரிகையின் வருஷச் சந்தாதாரர்களுக்கு, இது பாதி விலை [0-3-0] க்குக் கொடுக்கப்படும்.

[14] பஞ்சாமிர்தம்—சித்திரப்படங்களுள்ள ஒரு மாதாந்தரப் பத்திரிகை-இதைப்பற்றிய அபிப்பிராயங்களை வேறிடத்திற் காண்க-இதினும் சிறந்த பத்திரிகை தமிழிலில்லை என்பது பலர் கொள்கை. வருஷச் சந்தா உள்நாடு ரூ 5; வெளிநாடு ரூ 6; தனிப் பிரதி 8 அணா.

[15] தசிகர் துட்டிக் கதைகள்—முதல் எட்டு 0-10-0.

| | | |
|---|---|---|
| ஷை | இரண்டாம் எட்டு | 0-10-0. |
| ஷை | மூன்றாம் பாகம் | 0-10-0. |
| | இரண்டு சேர்ந்து வாங்கினால் | 1-0-0. |
| | மூன்றும் சேர்ந்து வாங்கினால் | 1-8-0. |
| ஷை | டக்ஸீன் பைண்டிங் | 1-12-0. |

ஆசிரியர் அச்சுப்பிரசுராலயம், புஸ்தகசாலை,
மயிலாப்பூர், சென்னை.